கலாபூஷணம் மு. அருட்பிரகாசம் எழுதிய

# இரு கூத்துக்கள்



பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடியரசன்

மற்றும்

# பண்டாரவன்னியன்

## நாட்டுக்கூத்துகள்

கலாபூஷணம்

மு. அருட்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தலைப்பு: | இருகூத்துக்கள் |
| இலக்கிய வகை: | நாட்டுக்கூத்து |
| உரிமம்: | கலாபூஷணம் மு. அருட்பிரகாசம் |
| பதிப்பு: | முதற்பதிப்பு - 2020 |
| பக்கங்கள்: | x + 131 = 141 |
| பிரதிகள்: | 200 |
| வெளியீடு: | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,<br>கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை<br>மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,<br>வடக்கு மாகாணம். |
| அச்சுப்பதிப்பு: | நியூ எவகிறீன் அச்சகம்<br>இல.693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே. 021 221 9893 |

| | |
|---|---|
| Title : | Irukoothukkal |
| Type of Literature : | Naaddukkothu |
| Rights: | Kalpoosanam M. Arudpragasam |
| Edition : | First Editon - 2020 |
| Copies : | 200 |
| Pages : | x + 131 = 141 |
| Published by: | Dept of Cultural affairs,<br>Ministry of Education,Cultural affairs,<br>Sports and Youth affairs,<br>Northern Province |
| Printed at: | New Evergreen Printers,<br>693, K.K.K. Road, Jaffna<br>Tel. 021 221 9893 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | செயலாளரின் வாழ்த்துச் செய்தி | v |
| 2. | உதவிப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | vi |
| 3. | அணிந்துரை | vii - viii |
| 4. | நூலாசிரியர் உரை | ix |
| 5. | வெடியரசன் – நாட்டுக்கூத்து | 1 - 72 |
| 6. | பண்டாரவன்னியன் – நாட்டுக்கூத்து | 73 - 131 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண பாஷையூர் கிராமத்தில் வாழ்ந்து கலைப்பணி செய்து வரும் கலைஞர் மு.அருட்பிரகாசம் அவர்களது "இரு கூத்துக்கள்" என்னும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஈழத்துக் கூத்து மரபில் யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கு தனிச்சிறப்புண்டு. அதிலும் பாஷையூர் மண் பல கூத்து அண்ணாவிமார்கள், கூத்துக்கலைஞர்கள், பெண்கலைஞர்கள், அரங்க செயற்பாட்டாளர்கள் என பலரை உருவாக்கிய சிறப்புக்குரிய பிரதேசமாகும். இப் பாஷையூர் பிரதேசத்தில் செல்வாக்குப் பெற்ற யாழ்ப்பாண கத்தோலிக்க தென்மோடிக் கூத்து மரபு காத்திரமான பல கூத்து இலக்கியவாதிகளை உருவாக்கி இருக்கின்றது. இவ் அனுபவ நீட்சியில் புதிய வரலாற்றுக் கதைகளை கூத்துக் கலைக்கும் முறைமையும் உருவாகின.

இந்த வகையில் தமிழ் வரலாற்று நாயகன்களான வெடியரசன், பண்டார வன்னியன் ஆகிய இரு தமிழ் மன்னர்களின் சமய, சமூக, அரசியல் பணி மற்றும் வாழ்க்கை வரலாற்றை மிக நேர்த்தியான இரசனையோடும் காப்பியச் சுவையோடும் மு.அருட்பிரகாசம் அவர்கள் ஆக்கி இருக்கிறார். இவ் "இரு கூத்துக்கள்" என்ற நூல்த் தொகுப்பில் வெடியரசன் நாட்டுக்கூத்து, பண்டார வன்னியன் நாட்டுக்கூத்து என தமிழ் மண்ணை ஆண்ட அரசர்களின் வரலாற்றை, கூத்து இலக்கியப் பிரதிக்கே உரித்தான அடிப்படை எண்ணக் கருக்களில் நின்று படைத்திருக்கிறார்.

எனவே இவ் இரு கூத்துக்களையும் ஈழத்துக்கூத்து மரபின் புதிய வரவாக படைத்துத் தந்த மு.அருட்பிரகாசம் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, இவ் இரு கூத்துக்களையும் நூலுருவாக்கம் செய்ய முன்வந்த வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப் பாளருக்கும், கலாசார உத்தியோகத்தர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. **இ. இளங்கோவன்,**
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணத்தில் கூத்து பாரம்பரியம் மிக்க கிராமமாகிய பாஷையூரிலே பிறந்து வளர்ந்து கூத்துக் கலைக்கோர் அச்சாணியாக இருந்த மூத்த கலைஞர் கலாபூஷணம் முடியப்பு அருட்பிரகாசம் அவர்களின் இருகூத்துக்கள் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ் வடைகின்றேன்.

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வடமாகாணத்தில் உள்ள பண்பாட்டு பாரம்பரியம் மிக்க தொன்மைகளினை ஆவணப்படுத்தும் நோக்கில் பிரதேச செயலகங்களினூடாக கலாசார உத்தியோகத்தர்கள் மூலமாக அடையாளம் காணப்பட்டவைகளை ஆவணப்படுத்தி வருகின்றோம்.

அந்தவகையில் இக்கலைஞர் தம்கைப்பட எழுதி நெறியாள்கை செய்து மேடையேற்றிய கையெழுத்துப் பிரதிகளாக இருந்த நாட்டுக்கூத்துக்கள் தனக்குப்பின் அழிந்துபோய் விடுமோ என்ற ஏக்கம் கொண்டிருந்த வேளை இவரது வேணவாவினை நிறைவேற்றும் பொருட்டு எமது திணைக்களம் நூலாக பதிப்பித்துள்ளது.

தமது வயது முதிர்ந்த காலத்தில் இயலாமையிலும் நாட்டுக் கூத்துக்கலை மீது கொண்ட தணியாத தாகத்தினால் தனக்குப் பின்வரும் சந்ததியினர் இக்கூத்து மரபினை பேணிடவும் அனைத்துப் பிரதேசங்களிலும் இக்கூத்துநூல் மூலமாக கூத்துக் கலைமரபு அழிவடையாது வளர்ச்சி அடையவும் நூலாக வெளிவருவதையிட்டு இவர் மிகுந்த மகிழ்ச்சியடைவதனை கண்கூடாக கண்டறிந்துள்ளோம். எனவே கலைக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்து தற்போது இயலாமையிலிருக்கின்ற இக் கலைஞரின் இவ் நாட்டுக்கூத்து நூல் எதிர்கால சந்ததியினருக்கு கூத்து பாரம்பரியம் தொடர்பான அழியாத சொத்தாக நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலுருவாக்கத்திற்காக உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவித்து நிற்பதோடு இந்நூல் சிறப்புற வெளிவருவதையிட்டு வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

திருமதி. சுஜீவா சிவதாஸ்,
உதவிப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



கலையுலகிற்கு நம் முன்னோர் அளித்த அருநிதியங்களான உள்ளக் கிளர்வுகளைத் தொட்டுப் புல்லரிக்கச் செய்யும் மெருகுகுன்றா நாட்டுப் பாடல்கள், நாட்டுக்கூத்துக்கள் இன்றைய நவநாகரீக உலகில் அருகி வருவதை நாம் காண்கின்றோம். எமது யாழ்ப்பாண வரலாற்றில் தென்மோடி நாட்டுக் கூத்தானது தென் கரையோர மக்களால் பெரிதும் பாதுகாக்கப்பட்டு வந்தமையை நாம் என்றும் மறக்கலாகாது. அந்த வகையில் பாஷையூரில் வாழ்ந்த புலவர்கள் பலரே நாட்டுக்கூத்தினை அதிரியார், சுவாம்பிள்ளை, தொம்மையார், மிக்கோர் சிங்கம், கிறிஸ்தோப்பர், செகராசா, சூசைப்பிள்ளை ஆகியோர்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். இப் புலவர்கள் வரிசையிலே இன்றும் இம் மண்ணில் வாழ்ந்து கொண்டு இருப்பதோடு மட்டுமல்லாது, நோயுற்ற நிலையிலும் செயற்பட்டுக் கொண்டிருப்பவர் அருள்பிரகாசம் ஆவார்.

இதுவரை இருபது வரையான நாட்டுக்கூத்துக்களை எழுதியுள்ள இவர் மாவீரன் சங்கிலியன், மண்ணின் மைந்தர்கள், விடுதலைப்பயணம் ஆகிய கூத்துக்களை நூலுருவில் வெளியிட்டுமுள்ளார். மேலும் அந்தோனியார் காவியம், பண்டாரவன்னியன் காவியம் ஆகியவற்றையும் நூலுருவில் தந்துள்ளார். இக்கலைஞரின் "மண்ணின் மைந்தர்கள்" என்னும் நாட்டுக்கூத்து நூலுக்கு 2006 ஆம் ஆண்டுக்கான நூல்த் தேர்வில் சிறந்த நாடகத்திற்கான விருதினை இலங்கை இலக்கியப் பேரவை வழங்கிக் கௌரவித்தது. பல விருதுகளைப் பெற்றிருக்கும் இவர் கலாபூசணம், கலைஞானச் சுடர், ஆளுநர் விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.

அண்ணாவியார், கூத்தாக்கும் கலைஞர், கூத்துக்களை எழுதும் புலமை ஆகிய பன்முக செயற்பாடுகளை வெளிப்படுத்தியிருக்கும் இக்கலைஞர் மரபு வழியில் வரவு, தரு, கொச்சகம்,சிந்து, வெண்பா, விருத்தம், ஆசரியம், கலித்துறை, பாடல் என நாட்டுக்கூத்துக்களின் தன்மையை மிகத்திறமையாக எழுத்துருவகித்துள்ளார். இன்று இவரின் இரு நாட்டுக்கூத்துக்களான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரவன்னியன், வெடியரசன் ஆகியவற்றை வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நூலுருவாக்கம் செய்வது அவருக்கு மேலும் கௌரவத்தை வழங்குவதோடு அருகி வரும் நாட்டுக்கூத்துக்களை இளையோர் சமுதாயத்திடம் ஒப்புவிக்கும் செயலாகவும் அமைகின்றது.

யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள சப்த தீவுகளை ஒரு குடையின் கீழ் ஆண்ட "வெடியரசன்" வரலாறும் வன்னியின் அடங்காப்பற்றாளன் மாவீரன் பண்டாரவன்னியனின் வீரம் மிக்க வரலாறும் கூத்துருவில் ஆவணம் ஆவது தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் பெரும் பொக்கிசங்களாகும். பண்புடன் கூத்தாடியவர்கள், கூத்துக்களை எழுதியவர்கள் பலர் இருக்கலாம். இருந்தாலும் தனது எட்டாவது வயதிலிருந்து நாட்டுக்கூத்துக்ளில் நடித்து வந்த கலாபூஷணம் முடியப்பு அருட்பிரகாசம் அவர்கள் நாட்டுக்கூத்தின் பன்முக செயற்பாட்டாளர் என்பதை யாழ்ப்பாணக்கூத்துக் கலை வரலாறு என்றும் நிலையான இடத்தில் வைத்திருக்கும் என்பது திண்ணம். அவருக்கு அவர் வணங்கும் அந்தோனியாரின் கிருபை கிட்டுவதாக.

**கலாபூசணம் சிவநாமம் சிவதாசன் (ஜே.பி)**
செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை
இல.45, நொத்தாரிஸ் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை

**பண்டார வன்னியன் (நாட்டுக்கூத்து)**

சிறி விக்கிரம ராஜசிங்கன் சங்கிலிய மன்னன் கூத்துநூல்களை தொடர்ந்து ஈழத்துத் தமிழர்களின் வீரத்தையும் மண்பற்றையும் மொழிப் பற்றையும் விடுதலை வேட்கையையும் பிரதிபலிக்கும் வரலாற்று நாயகனாக விளங்கிய வன்னியன் மன்னன் பாரிய நவீன ரகப் போர்க்கருவிகளுடன் வன்னி மண்ணை ஆக்கிரமிக்க வந்த ஆங்கிலேயரை எதிர்த்து நின்று மரணம் வரையும் அன்னியருக்கு அடிபணியாது வீறு கொண்டு சமராடி தமிழர்களின் மானம் காத்த வீரமகன் பண்டாரவன்னியன் வரலாற்றை கூத்தாக்கம் செய்துள்ளேன்.

இக்கூத்து பல ஊர்களிலும் பல பாடசாலைகளிலும் அரங்கேறி பாராட்டைப் பெற்றது. இக்கூத்து வரலாற்று ஆதாரங்களுடன் கூடியதாக காவியமாகவும் இயற்றியுள்ளேன்.

**வெடியரசன் (நாட்டுக்கூத்து)**

பலராலும் அதிகம் அறியப்படாத நெடுந்தீவிலே தலைநகரமாகக் கொண்டு சப்த தீவுகளையும் ஆட்சிசெய்த மறத்தமிழ் வீரன் வெடியரசனின் வரலாற்றை நாட்டுக்கூத்தாக்கம் செய்துள்ளேன். வெடியரசன் வரலாறு சிலப்பதிகார காலத்தில் நிகழ்ந்ததாக நம்பப்படுகின்றது. நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டை மன்னார் பிரதேசத்தில் உள்ள அரிப்பில் அமைந்துள்ள அல்லிராணிக் கோட்டை என்பன சான்றாதாரங்களாய் விளங்குகின்றன. இக் கூத்து மேடையேற்றப்பட்டு பலரின் பாராட்டைப் பெற்றது.

இப் பண்டாரவன்னியன் மற்றும் வெடியரசன் நாட்டுக் கூத்தானது பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பங்களிப்பினால் நூலுருவாக்கம் ஆவதையிட்டு மனமகிழ்வடைகின்றேன். இவ்விரு நாட்டுக்கூத்துக்களையும் நூலுருவாக்கம் செய்து வெளியிடுவதில் ஆர்வம் காட்டிய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருக்கும் அத்துடன் யாழ்ப்பாண பிரதேசசெயலா ளருக்கும் கலாசார உத்தியோகத்தருக்கும் கலாசார பேரவையினருக்கும் அணிந்துரையினை வழங்கி சிறப்பித்தவருக்கும் இந்நூல் வெளிவர உதவிய அனைத்து உளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாபூஷணம் மு. அருட்பிரகாசம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெடியரசன்

## நாட்டுக்கூத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடியரசன்

## நாட்டுக்கூத்து

## காப்பு விருத்தம்

சீரோங்கு செந்தமிழே தாயே உந்தன்
செம்பஞ்சும் பதம் பணிந்து போற்றி செய்து
பேரோங்கு பெருங்கடலின் அலைகள் கொஞ்சும்
பேசரிய நீள நெடுந் தீவை ஆளும்
போரோங்கு வெடியரசன் காதை இந்தப்
புவனமதில் நாட்டுக் கூத்தாய்ப் பாடுதற்கு
நீரோங்கு வெண்கமல மலரமரும்
நித்தம் அருள் கலைமகள் தாள் காப்பதாமே.

### தோடயம்

வையகம் தோன்று முன் வளர் தமிழே வந்தாய்
வளம் பெறு இலக்கணம் வகுத்துமே நீ உயர்ந்தாய்
ஐயங்கள் தீர்த்திடும் அறிவு சால் மொழியானாய்
ஆன்மீக நெறிசொல் அருள் மொழியே வாழி

தெள்ளு தமிழ்க்கலை அறுபத்து நான்கும்
உள்ளத்தில் பதிந்திட உற்ற துணை அருளும்
வரமது தருகலை வாணி கரம்
சிரம் சூடியே துதித்தோமே

நீர் நிலம் நெருப்புடன் காற்றாகாயம்
கார் பொழி மழை உயிர் காக்கும் கொடை
ஏர் வளம் சிறந்திடப் போற்றி செய்வோம்
ஊர் வளம் கொழித்திட உயர்வடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 01

**இடம்** : *நெடுந்தீவில் வெடியரசன் அரண்மனை*

**பாத்திரங்கள்** : *வெடியரசன் - கற்பித்தான் - மந்திரி - கட்டியகாரன்*

மெட்டு (கட்டியகாரனும் வந்தேன்) சங்கிலியன்

***கட்டியகாரன் - வரவு - தரு***

வீரமன்னர் பவனி வாறார் - வெடியரசர்
பேர் விளங்கத் தேரில் வாறார்
சீரதிர் சிறந்த நெடுந் தீவினில் அரணமைத்து
நேரில் செங்கோல் செலுத்தி
நேர்த்தியாய் அரசமைத்து

(வீரமன்னர்)

தீர தம்பி மார்கள் நால்வர் - துணையுடனே
திக்கு எட்டும் திட்டமாய்ப்படை - பலத்துடனே
போர் பொருந்தும் வீர மார்பன்
பொங்கு கடல் எங்கும் மாட்சி
பார் புகழும் பண்புடனே
பேர் பெறும் நல் ஆட்சி செய்ய

(வீரமன்னர்)

சப்த தீவுகளினோடு - நெடுந்தீவும்
ஒப்ப ஒன்றாய் வீரமே குன்றா - குணக்குன்றாய்
செப்பரிய சேனையுடன் சேரும் புகழ் தான் படைத்து
ஒப்பு இல்லா ஈழத்தமிழ் ராட்சியத்தை ஆட்சி செய்த

(வீரமன்னர்)

சரித்திரச் சான்றுகள் கூறும் - சிதைவடைந்த
கோட்டை பெரும் கொத்தளம் தொன்மைக் - கிணறுகளும்
அராபிய வணிகர்களால் வந்த செம்புரவிகளும்
அரியவகைத் தாவரங்கள் ஆழியில் வெண்முத்திலங்க

(வீரமன்னர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியக்காரன் வசனம்

இராஜாதி இராஜ இராஜ மார்த்தாண்ட இராஜ கம்பீர இராஜ குல திலக நெடுந்தீவில் இராஜதானி அமைத்து ஆட்சி செய்யும் மறத் தமிழர் வேந்தன் வெடியரசர் மந்திரி சேனாதிபதி படைவீரர் சூழவர கொலுவுக்கு வருகிறார். வெகு பராக் சமூகம் எச்சரிக்கை

மெட்டு (வானகம் எங்கும் வல்லமை ஓங்கும்) சம்மிக்கல்

*மந்திரி - வரவு - தரு*

வருபொருள் ஓதும் கருமங்கள் யாவும்
திருவருள் வேதம் குருபரன் பாதம்
போற்றியே சேவை ஆற்றியே தேவை
சாற்றியே அவை வரும் மதி மந்திரி நானே

வளம் பல கொண்டு வாணிபங் கண்டு
வளர்மதியாகி விளை நெடுந்தீவு
அழகொழிர் தேச வளமைகள் பேச
உள மகிழ்வாக உடன் செல்லுவேனே

மணிமுத்து ஆரம் மார்பினில் ஆட
கணிகையர் காந்தச் சொற்கொண்டு பாட
கவின் கலை மன்றம் களிப்புற நீட
தவில் நாத ஓசைகள் ஒலிக்கச் செல்வேனே

மெட்டு (சங்கை பொங்கிய துங்கனேன் அழைத்தான்) ஞானசௌந்தரி

*கற்பித்தான் - வரவு - தரு*

நீடு நெடுகடல் சூடு திருநாடே - நெடுந்தீவு
பாடிவீடிதற் கெந்த நகர் ஈடே - நிமிர்ந்தெழுந்த
கூட கோபுரம் மாட மாளிகை
கோட்டை கொத்தளம் கொடிகொள் இத்தனம்
இடியின் ஒலியென இடையில் வாளுடன்
படையின் நாயகன் பவனி வருகிறேன் (நீடு நெடுகடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் ஒளிரென வீசுவாள் கொண்டே - மிடுக்குடனே
விண்ணை வென்றிடும் வீரமே கொண்டே - விடிகதிராய்
பொன்னளந்த எம் மண்ணை மாற்றலர்
பொருதக் கருதிடில் துரிதமோடமர்
திண்ணமாய்ப் புரிந்த தன்னியர் புறம்
பின்னிட உடன் செல்லுவேனிதோ

(நீடு நெடுகடல்)

மண்டலாதிபர் மண்டியிடு மன்னர் - வெடியரசர்
சண்டமாருதம் கொண்டெழு தென்னர் - எனையழைத்த
கருமமறிந்திடக் கருதிப் புயலதன்
காற்றின் சீற்றமாய்க் கடுகிக் கட்டளை
தருணம் ஏற்றுடன் தரியலர் சிரம்
அரிந்து எறிந்திட விரைகுவேனிதோ

(நீடு நெடுகடல்)

மெட்டு (அகிலமும் புகழும் உய்கா உத்தமன்) கண்டியரசன்

***வெடியரசன் - வரவு - தரு***

நெடுபடை கொடி குடை துலங்கு கொற்றவன்
கொடைபொழி குமணன் நேர் இலங்கு நற்றவன்
அடையலர் பொடிபட பலங்கள் பெற்றவன்
குடி மழை முடிபுனை குலங்கள் உற்றவன்
இடியின் ஒலியும் கொடும் பகையும் கெடியேபட
நொடியில் செயங்கொள் வெடி அரசனும் நானே

மாசறு பொன்மணி மாலை ஆடிட
தேசுறு தேன்கனி சோலை நீடிட
வீசுறு தென்றல் சங்கீதம் பாடிட
பேசறு மன்றில் நல் நாதம் கூடிட
வாச மண்ணின் பெருமை வாகை சூடிடவே
தேசந்தனை அரசாள் மகிபனும் நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலை மகள் அருள் ஒளி அரசு வழங்கிட
கலைமகள் தரும் அரும் கலைகள் வளர்ந்திட
மலைமகள் மணி வைர மகுடம் சூட்டிட
கலைமகள் தமிழ் அன்னை புகழை நாட்டிட
காலைக் கதிர் பிரபை சாலச் செறிவு கொள்ள
ஞாலந்தனை நல் அரசாளுவேன் நானே

**அனு**

நீடு புகழ் சூடி அரசாளுவேன்

**மந்திரி - சந்தவிருத்தம்**

விரைவுறு திரைகடல் பெருவலி எனவரு
வீரப் பிரதாப தீரா
உரமுறு நினதுறு அரசது நிலை பெறு
ஊக்கிர்ம மெத்து சூரா
வீரமாய் ஆழியில் மூழ்கியே விஷ்ணுவின்
பாஞ்சையனியம் எடுத்த மாரா
சேர சோழ வீர பாண்டியர் நிகர்த்தெழு
செயந்திறல் மன்னா போற்றி

**கற்பித்தான் - சந்தவிருத்தம்**

எண்டிசை எழுகதிர் எறிந்திடும் கனலென
ஏற்றமாய் வீற்றிருந்து
மண்டலம் ஆள்கின்ற மகிபரும் மயங்கவே
மா அர சோச்சும் மன்னா
வீண்டலத் தேவர்கள் வியந்திட வீரமாய்
வித்தகம் காட்டும் வேந்தே
பண்டு புகழ் கண்ட என்றும் செயங்கொண்ட
பார்த்திபா வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டு வளப்பம்

மெட்டு (ஆறுகாலங்கள் பூஜைகள்) மாவீரன் சங்கிலியன்

*வெடியரசன் - தரு*

ஒப்பில்லா மதி மந்திரி - என்றும்
இப்புவி போற்றும் தந்திரி
சப்த தீவுகள் வளங்களை - இப்போ
செப்புவீர் உள்ளம் ஒப்பவே

*மந்திரி - தரு*

ஆளமா கடல் சூழ்ந்திடும் - எங்கள்
ஏழு தீவுகள் எங்குமே
விளைந்திடும் வளம் கதித்துமே - செல்வம்
கொழித்திடும் நிதி நிறைந்திடும்

மெட்டு (பரிகரிகள் ரதவரிசை) மாவீரன் சங்கிலியன்

*வெடியரசன் - மறுதரு*

பரி படை மா கடற்படை கொள்
பதியே தள பதியே
தரியலர்கள் திரண்டு வரின்
துரத்தும் திறன் உண்டோ

*கற்பித்தான் - தரு*

அரண் மிகுந்த நெடிய தீவு அனலெனவே தகிக்கும்
உரமுறு கற்கோட்டையெல்லாம் உறுதி கொண்டே காக்கும்

*வெடியரசன் - தரு*

பொருள் வளம் சேர்க்கும் வாணிபம் - நாட்டில்
பெருகுதா அன்றேல் அருகுதா
பண்டமாற்று முறைதானே - எங்கள்
நாணயம் மதிப்பானதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மந்திரி - தரு

சீனரோடு அராபியர் - தெற்கே
சோனக ரோடு சிங்களர்
யவன ரோடு நல் எகிப்தியர் - மிக்க
உவப்பதாய் வணிகம் ஓங்குதே

### வெடியரசன் - மறுதரு

நீல நெடுங் கடல் நடுவே நிமிர்ந்த நெடுந்தீவு
காலங் காலமாக அதைக் காக்கும் திறன் உண்டோ

### கற்பித்தான் - தரு

கடல் கடந்து கரை நடுங்கக் கருகிவரும் கப்பல்
படை பதற உடல் சிதற உடைப்போம் பகைவர் ஒடுங்க

### வெடியரசன் - தரு

மாற்றலர் படி முறையதாய் - ஆணை
ஏற்றுடன் திறை தந்தாரோ
மாற்றமோ தடு மாற்றமோ - எங்கள்
ஆற்றலைக் காட்ட வேண்டுமோ

### மந்திரி - தரு

தென்திசைச் சிங்கர் கிரமமாய் - திறை
செலுத்துறார் கீழைத் திக்கினில்
வன்னி மாநிலத் தரசரும் - மனம்
உவந்துமே கப்பம் தருகின்றார்

### வெடியரசன் - தரு

காற்றும் கடல் அலை உரசும்
கலங்கா தெங்கள் நாடு
கற்பித்தானே காவல் தனில்
கடுகும் பிசகு உண்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கற்பித்தான் - தரு*

சப்த தீவைச் சுற்றிப் பெரும்
சதுரங்க மா சேனை
எப்பொழுதும் காவல் வைப்பேன்
தப்பா தென் சொல் மெய்ப்பாய்

*வெடியரசன் - விருத்தம்*

அரிய எங்கள் தேச வளம்
அறிந்துளம் நான் தெளிந்து கொண்டேன்
பிரியமுள்ள என்குடிகள் இனிமை பொங்க
பேசரிய செல்வமெல்லாம் பெற்று வாழ
விரி கடலில் வரு பகைவர் மிரண்டு ஓட
விண்ணளந்த வீரமது கொண்டுலவி
உரிமையெல்லாம் பெற்றிலங்கி ஒற்றுமையாய்
ஓதரிய நன் நெறியில் என்றும் வாழ்வோம்

***வெடியரன் வசனம்***

நாட்டின் வளங்களும் நமது படை பலங்களும் குடி மக்கள் வாழ்வியலும் வணிகமும் வரலாறும் கேட்டு மன மிக மகிழ்வானேன். இன்றுபோல் என்றும் இனிதுற வாழ்வோமாக.

## காட்சி – 02

**இடம்** : *வீதி - சோழமன்னன் அரண்மனை*
**பாத்திரங்கள்** : *மானாக்கன் செட்டியார் - சோழ மாமன்னன்*

மெட்டு (நாயக்கர் வம்சத்தை) மண்ணின் மைந்தர்கள்

*மானாக்கன் செட்டி - வரவு - தரு*

முதுபெரும் சோழமா மன்னனை நாடியே
செல்லுவேன் - எந்தன்
மதியதனால் நாகரெத்தினம்
தேடியே வெல்லுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மணி கண்ணகை காற்சிலம்பதன்
பரல் தன்னிலே - ஒளி
மின்னிடும் மணி நாக ரெத்தினம்
வைத்திடில் மேன்மையே

தெய்வத்தின் அவதாரத் தேவியோ
அம்மனோ அறியேனே - எந்தன்
சேயாக வந்திட நானென்ன
பேறுதான் பெற்றேனோ

ஞாலத்தில் கொடுமைகள் அதர்மங்கள்
தலை தூக்கும் போதிலே - திரு
மாலவன் தங்கையும் அழித்திட
அவதாரம் எடுப்பாளே

தேடக் கிடைத்திடா நாகமணி கையில்
கிட்டுமோ - சோழ
நாடாளும் வேந்தனும் மனங்கொண்டால்
என் எண்ணம் கூடுமே

***செட்டியார் - வசனம்***

என்னிடமுள்ள அரிய பெரிய செல்வங்களான சங்கநிதி பதும நிதிகள் அனைத்தையும் கொடுத்தேனும் அன்னை பார்வதியின் அம்சமாய் வந்த என் புதல்வி கண்ணகையின் காற்சிலம்பின் பாலது விளங்கிட அருமணியாம் நாகரெத்தினத்தை தேடித் தரவல்லோன் சோழ வேந்தன் ஒருவனே. இப்போதே போகிறேன் சோழனிடம்.

மெட்டு (குவனம் எழுகடலும்) விடுதலைப்பயணம்

***சோழ மாமன்னன் - வரவு - தரு***

இமயம் கண்டளந்தோம் - அதில் கொடி
ஏற்றி விண்ணெழுந்தோம் - எதிர்ந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமனும் அஞ்சிட மயனும் துஞ்சிட
எழு சூரியன் நிகர் சோழ நாடாள்வேன்

என்றும் பகை அணுகா - பலமது
கொண்டு விளங்கு நகர் - புகாரினும்
பண்டு சோழமா தேசப் புலிக்கொடி
விண்ணில் ஆடிட வீரமோடாள்வேன்

ஆளக் கடல்களெங்கும் - அடல் பெறும்
சோழர் கடற்படைகள் - நடமிட
சூழும் புகழுடன் சுழலும் புவியினில்
நாளும் நல்லரசாட்சி நான் புரிவேன்

மெட்டு (சோழ இளங்கிளமொழியே) மாவீரன் சங்கிலியன்

***சோழன் - தரு***

செல்வம் செழித்துச் கொழிக்கும் செட்டியாரே - எந்தன்
இல்லமே நாடியே இரந்தெனைத் தேடிய
அல்லல் ஏதோ அறிய உரைசெய்வீரே

***செட்டியார் - தரு***

மாய கானல் நீரைத் தேடும் மான்போல் - நானும்
ஓயாமல் உறங்காமல் உலகெங்கும் தேடியும்
தூய நாக ரெத்தினங் காண்கிலேனே

***சோழன் - தரு***

தேசமெங்கும் தேடிக் காணா மணியே - அந்த
ஈசனாம் விஷ்ணுவின் வலத்தொடை பிறந்திட்ட
வெடியரசன் வசனமே உண்டு அறிவீர்

***செட்டியார் - தரு***

அம்மன் தேவி அவதாரமாய் வந்தாள் - மகள்
செம்பொற் சிலம்பின் பரல் நாகரெத்தினமாக
ஒளிர வேண்டும் உலகே வியக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சோழன் - தரு

நீள நெடுந் தீவினோடு சப்த - தீவை
ஆளும் வெடியரசன் நாகரெத்தினமதைத்
தருவானோ அன்றேல் பொருவானோ அறியேனே

### செட்டியார் - தரு

தேடற்கரிய திரவியமாம் பாந்தள் - மணி
தேடி வரும் செலவு கூட வரும் அலைச்சல்
நீடும் செல்வம் கொடுத்தே சாந்தி செய்வேன்

### செட்டியார் வசனம்

மாமன்னா உலகெலாம் தேடியும் காண இயலாத அந்த நாக மணியை நீர் பெற்றுக் தருவீராகில் சங்க பதும நிதிகட்கு ஈடான செல்வங்களெல்லாந் தந்து என்றென்றும் தங்களுக்கு நன்றியுடையவனாயிருப்பேன் அரசே

### சோழன் - விருத்தம்

பெருகு சங்க பதுமநிதி தனம் மிகுந்த
பேசரிய செல்வமெலாம் பெற்றிலங்கும்
பெருமை மிகு செட்டியாரே சக்தி தேவி
அம்சமதாய் வந்த செல்வி கண்ணகாவின்
திருவடி காற் சிலம்பின் பரல் நாகமணி நானெடுக்க
எனது வீரத் தளபதி மீகாமனையே ஏவுகின்றேன்
பெருவலிகொள் வெடியரசன் பொருதுவானோ
பொறுமையதாய் அருமணியைத் தருகுவானோ

### சோழன் - வசனம்

சக்தியின் அவதாரமாய் வந்தவள் கண்ணகை, அவளது காற் சிலம்பின் பரலதுவாய் ஒளிர்ந்திட நாகரத்தினம் பெற்றுத் தருவதாக வாக்களிக்கின்றேன். அதன் பொருட்டு எனது சேனை நாயகன் மீகாமனை சதுரங்க சேனைகளுடன் வெடியரசனிடம் அனுப்புகிறேன், நீர் சென்று வாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சோழன் - சந்தவிருத்தம்*

கடகட வெனக் கடல் அலை தவழ் பூம்புகார்
கோட்டை கொத்தளம் எல்லாம்
நடநட வெனத் தினம் நடுங்கிடக் காவல் செய்
ஏவலனே கேளாய்

அடலுறு வீரமா காளி அருள் பெற்ற
அனலெழு சேனாபதி
திடமுறு மீகாமன் திட்டமாய் எனது முன்
வரும்படி செய்வாயே

*சோழன் - வசனம்*

ஏவலனே எனது சேனாதிபதி மீகாமனை வரும்படி செய்வாயாக

## காட்சி – 03

**இடம்** : *கடற்கரை அல்லிராணிக் கோட்டை*
**பாத்திரங்கள்** : *அல்லிராணி அதிகாரி - மீனவர்கள்*

மெட்டு (காரூனியனே கதிர்காமா) கண்டி அரசன்

*மீனவர் - 1 - தரு*

நீலக் கடல் ஏறிப் போவோம் - தோணி
நிறைந்திட்ட மீனொடு கரை வந்து சேர்வோம்
காலமோ கலிகாலம் ஆச்சே - இப்போ
கலக்கமே மீனவர் வாழ்வாகிப் போச்சே

*மீனவர் - 2 - தரு*

ஆழியில் அழகை நாம் பார்த்தோம் - அதில்
மூழ்கியே நல்லன முத்துக்கள் கோரத்தோம்
வாழ்வினில் வளமது கண்டோம் - என்ன
ஊழ்வினையோ எல்லாம் பாழ்பட நொந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *மீனவர் - 1 - தரு*

ஏலேலோ எனத் தண்டு வலித்தே - நாங்கள்
ஏகிடுவோம் கலம் செலுத்திப் பாய் விரித்தே
காலா காலமாக நாங்கள் - இந்தக்
கடல் தாயால் பிழைத்தோம் யார் கண்பட்டுப் போச்சோ

### *மீனவர் - 2 - தரு*

ஏழு கடல்களும் தமிழர் - அன்று
ஆளுமை செய்தனர் அது ஒரு காலம்
ஈழமா ஆழியில் இன்றோ - பெரும்
இழப்புக்கள் அழிவுகள் நேரும் அல்லோலம்

மெட்டு (அலைகடல் சூழ்ந்திடும் கலைகளும் வாழ்ந்திடும் மாவீரன் சங்கிலியன்)

### *அதிகாரி - வரவு - தரு*

அலை வந்து தழுவிட அரிப்பெனப் பெயரிட
அல்லிராணி - அங்கு
கலை நயம் மிளிர்ந்திட கற்கோட்டை
நிலை நாட்டினாளே

பெண்ணரசியவள் பேரினைக் கேட்டாலே
பகை நடுங்கும் - எங்கள்
கண்ணை நிகர்க்கும் தமிழ் மண்ணைக்
காத்து நிற்கும் மாதரசி

மேலைக் கடலும் வந்து காலை மருவிச் செல்லும்
ஆழியிலே - மூழ்கி
மாலை அணி வெண் முத்து அள்ளி வருவார்
எங்கள் செம்படவர்

மாவலி கானகம் மடை பொரு கடல் வளம்
மங்கிடாத - வல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலிலே அல்லி ராணி முன் அதிகாரி
செல்லுவேனே

மெட்டு (தமிழீழம் எங்கள் தாகமே என்றே) முற்றுகையை முறியடிப்போம்

*அல்லிராணி- வரவு - தரு*

பெண்களே இந்தத் தேசத்தில் கண்கள்
பேதமே இல்லை சாதனை செய்வோம்
திண்ணமாய் எங்கள் மண்ணதைக் காப்போம்
திடமதாய் அல்லி ராணி நான் வந்தேன்

பெண்ணரசி அல்லி பேரது பெற்றேன்
பெருமைகள் எல்லாம் பெரியோர்க்காய் வைத்தேன்
கன்னியர் வாழ்வினில் ஏற்றமே செய்வேன்
கயவர்கள் திருந்திடக் கழுவினில் இடுவேன்

சிங்களர் சோனகர் சாவகத்தோரும்
சங்கமமாவது சிலாபத்தின் துறையே
சங்கொடு முத்துக் குளிப்பினில் தேசம்
எங்குமே செல்வம் பொங்குதே சீராய்

தென் குமரிக்கண்டம் ஆண்டவன் தமிழன்
தேசங்கள் எங்கும் வாழ்ந்தவன் தமிழன்
தொன்மை கொள் ஈழத்தாய் திருநாட்டை
தரியலர் நெருங்கா விரைவுடன் காப்போம்

*அதிகாரி - சந்தத்தாளிசை*

ரெத்தினங்களோடு ஏழு முத்துக்கள் பதித்திட்ட
சித்திரச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தரசு செய்
சுத்த வீரப் பெண்ணரசி அல்லி ராணி பேரெழு
நித்திலம் விளங்கு புகழ் சூடி நீடு ஆளுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு (காருண்யனே கதிர்காமா) கண்டியரசன்

*மீனவர் - 1 - தரு*

கோரப் பெருஞ்சுறா மீனும் - கடலில்
கலைத்துக் கலைத்துக் கொலை செய்யுதென் செய்வோம்
யாரிடம் போய் முறை செய்வோம் - எங்கள்
அல்லி ராணியிடம் சொல்லியே உய்வோம்

*மீனவர் - 2 - தரு*

வீரப் பெண் அரசி நல் அல்லி - தீங்கு
நேரவும் பொறுத்திடாள் சேதியைச் சொல்ல
ஊரவரெல்லாம் திரண்டு - ஒன்று
சேரவே அவரிடம் முறையிடுவோமே

*மீனவர் - 1 - தரு*

நாளாந்தம் நாலைந்து பேரைப் - பலி
கொண்டுமே வெறியது குறைந்திடக் காணோம்
நாளாக நாளாக ஊரில் - மிச்சம்
நாலு பேர் தானுமே எஞ்சுமோ அறியோம்

*மீனவர் - 2 - தரு*

கொலைகாரச் சுறாமீனைக் கொல்ல - வீர
வல்லவர் எவருமே இல்லையோ நாட்டில்
அலைதன்னில் தான் எங்கள் முடிவோ - வல்ல
அல்லி ராணியே எங்கள் அல்லல் தீராயோ

*மீனவர் - 1 - வசனம்*

மகாராணி உமது குடிமக்களைக் காப்பாற்றுங்களம்மா

*மீனவர் - 2 - வசனம்*

அல்லிராணியம்மா ஆழிக்கடல் மீதுதான் மீனவர்க்கு அஸ்த்தமனமா

*மீனவர் - 1 - வசனம்*

அலையும் கடலும் மீனவர்களுக்குப் புதைகுழிகளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீனவர் - 2 - வசனம்*

நீரோடு நீராய் மீனவர்கள் கரைந்திடுவதுதான் நியதியா

*மீனவர் - 1 - வசனம்*

கடலேறும் எங்களைக் கடித்துக் குதறிக் கொல்கிறதே அந்தக் கொடூரச் சுறாமீன்

*மீனவர் - 2 - வசனம்*

அந்தப் பொல்லாத சுறாமீனைக் கொல்வதற்கு யாருமே யில்லையா

*மீனவர் - 1 - வசனம்*

வீரப் பெண்ணரசியே விரைந்து எம்மைக் காப்பாற்ற வேண்டுமம்மா

*மீனவர் - 2 - வசனம்*

கோரச் சுறாமீனைக் கொன்று எமது மீனவரைக் காக்க வேண்டுமம்மா

**அல்லிராணி – களி நெடில்**

வான் முடி இடிப்பட்டதோ வடசிகரி பொடி பட்டதோ
வையகம் கெடியுற்றதோ
வடவர்கள் தென்னவர்கள்
வடுகர்கள் எவர்க்கும் அஞ்சா
மகிமை கொள் வன்னி மண்ணில்

கோன் நெறி கெட்டதோ கொடி முறி பட்டதோ
கொடுமையின் கோலானதோ
கோடை மாரி ஆனதோ
கோயில் குற்றம் ஆனதோ
குடி மக்கள் மடிவதேனோ

தேன் அடர் கானகம் திரவியக் கடல் வளம்
திரள் பெறு நிதியிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடமிழந் தென் குடிகள்
திகிலடைந் தோடிட
தினமிதைப் பொறுத்திடவோ

ஊன் உறக்கம் விட்டேனோ உறுதியடைந்திட்டேனே
உற்றதோர் முடிவெடுப்பேன்
உயிர் ஈந்தும் ஊரவரின்
உயிர் காப்பேன் அல்லாது
ஓரடியும் பின் வாங்கேனே

**சிந்து**

படகெடுத்துச் செல்லுவேனே - கடலிலேறித்
திடமெடுத்து வெல்லுவேனே - கொஞ்சமும் அஞ்சா
கொடிய சுறா மீனினோடு நெடிய யுத்தம் தொடங்குவேனே
துட்டச் சுறாவினை வெட்டரிவாளினால்
வெட்டிப் பிளந்திரு கூறதாய் ஆக்குவேன்
(படகெடுத்துச்)

கொட்டு மழையோடு கொடும் கோரக்கடல் நீரதெல்லாம்
கோடை மாரி ஆகிடினும் கொண்ட நெறி மாறிடாதே
கொதிக்குதே இதயமது - கொடுமை கண்டு
தகிக்குதே தணலது வாய் - தடுப்பாரில்லா
கட்டுக் கடங்காது எங்கள் கத்துகடல் அத்துமீறி
அடுத்தடுத் துயிரது குடித்திடு சுறா மீனின்
கொடுமைக்கோர் முடிவது கொடுத்துப் போர் எடுப்பேனே
(படகெடுத்துச்)

(அதிகாரியும் வீரர்களும் அசையாது நிற்கின்றனர்)
மெட்டு (மாலைமார் பணி மந்திரியே எந்தன்) இலங்கேஸ்வரன்

***அல்லிராணி - தரு***

வரிசை சேர் அதிகாரியே எந்தனின்
வார்த்தையை உடன் ஏற்றிடா இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரிதமாகவே ஆயுதம் ஏந்திடத்
தாமதம் ஏனோ தயக்கமும் ஏனோ

*அதிகாரி - தரு*

ஆழிப் பேரலை ஆர்ப்பரித் தெழுகுதே
மின்னலும் இடி முழக்கமும் வலுக்குதே
ஊழிகாலப் பிரளயமாகுதே
உண்மை ஈது நீர் உணர்ந்திடுவிரே

*அல்லிராணி - தரு*

உப்புக் காற்றிலும் உவர் கடல் நீரிலும்
உழைத்திடச் சென்றே உயரிதனைக் கொடுக்கின்றார்
கப்பிய துன்பம் களைந்திட வேண்டில் நாம்
கணநேரம் தானும் சுணங்காது செல்வோம்

*அதிகாரி- தரு*

சகுனங்கள் மிகச் சஞ்சலம் தருகுதே
சாத்திரம் பார்த்து ஐயமே தீருவோம்
தக்கதோர் தருணம் வாய்க்கும் போதிலே
அக்கணம் அலை ஏறி நாம் செல்லுவோம்

*அல்லிராணி - தரு*

சடங்கு சாத்திரம் கோத்திரம் பார்த்திடல்
குடிமக்கள் குறை தீர்த்திடல் கூடுமோ
தடங்கல் தாண்டியே திரள்பகை விரட்டுவோம்
தருணமே இனித் தயக்கமே போக்குவோம்

*அதிகாரி - தரு*

கால நேரம் கை கூடிட வேண்டுமே
தன்வலி துணை வலி பகை வலிதன்னை
சாலவே ஆய்வு செய்யில் தங்கள் அத்தான்
வீரநாராயணன் துணை வேண்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அல்லிராணி - விருத்தம்*

எழுதி விட்டேன் லிகிர்தமது ஏந்திச் செல்வாய் தூது சொல்வோய்
எண்ணமது செல்லும் முன்னம் எதைத்தான் இடமே சேர்ப்பாய்
ஈழு இளவரசரவர் நீழ நெடுஞ் சுறாவைக் கொன்றே
நொடியில் வெற்றி ஈட்டுவார் நீடு துயர் நீக்குவாரே

*அல்லிராணி - வசனம்*

தூதுவரே இந்த நிருபத்தை காரதீவினை ஆளும் எனது அத்தான் இளவரசர் விரநாராயணரிடம் சேர்ப்பிப்பாயாக

## காட்சி – 04

**இடம்** : *வீதி - சோழன் அரண்மனை*

**பாத்திரங்கள்** : *மீகாமன் - சோழன் - கண்ணகை*

மெட்டு (விரைவே வரு அருணனின்) விடுதலைப் பயணம்

*மீகாமன் - வரவு - தரு*

அரியாசனத் தெழுந்து நல் அரசு செய்
அரனை நிகர்த்திடும் உரமாய் நிலைத்திடும்
விரிவானகம் குடையெனத் திகழ்ந்திட
விண்ணை விஞ்சிடும் வீர சோழனின்
கரிகள் பரிகள் கடற் படைகொள் தளபதி
மீகாமன் மிடுக்குடனே சபையில் வந்தேனே

வீர சேர பாண்டியர் வடவர்கள்
வியந்து பணிந்திடும் திறைகள் குவிந்திடும்
தீரமாய் இமயத்தின் சிகரத்தில்
திறலே பொங்கிட மறமே ஓங்கிட
கொடிகள் ஏற்றி வைத்து நெடிது ஆண்ட சோழன்
கடிதில் அழைத்தார் இந்த நொடியிர் செல்வேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு மன்னர் திறை தர மறுத்தாரோ
மாற்றலர் யாரும் போற்ற மறந்தாரோ
கெறுவமாய் சோழமா மன்னரின்
கட்டளை தன்னைத் தட்டி நின்றாரோ
எட்டுத் திசையதிர எங்கும் மீகாமன் பெயர்
கொட்டும் முரசறையக் கடிதில் செல்வேனே

(சோழ மன்னனின் முன்)

*மீகாமன்- சந்தத் தாழிசை*

இமயம் வென்று ஈழம் கொண்ட
சோழர் வம்சம் வந்தவர்
அமரர் போற்ற அரசியற்றும்
ஆண்மை கொண்ட தென்னவா

எமனும் அஞ்சப் பகையை விஞ்சும்
ஏந்தலேறே சொந்தமாய்
குமரிமுனை தொடங்கி திரு
வேங்கடமும் ஆளுவீர்

மெட்டு (கோடி சூரிய விம்பமே பேரழகே) மாவீரன் சங்கிலியன்

*சோழன் - தரு*

வந்தெனை நல் வாழ்த்தும் சேனாதிபதியே - நீரும்
இந்தரை மீதிலே எந்தற்கு வந்திட்ட
விந்தை மிகும் கடன் உரைப்பேன் தீர்ப்பீர்

*மீகாமன் - தரு*

வித்தகமாய் பேசில் என்ன செய்வேன் - நானும்
யுத்தமே செய்திடு சத்துரு யாரென்றால்
இத்தினமே பற்றி வாறேன் மெய்யாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சோழன் - தரு*

நாகமணி தப்பாது நான் தருவேன் - என
வேகமாய் வாக்கு நான் வழங்கினேன் அக்கடன்
அகமகிழ்வாய் அளித்தல் உந்தன் கடனே

*மீகாமன் - தரு*

பாந்தன் மணி இருக்கும் இடம் யாதோ - எந்த
வேந்தன் கை பற்றியே வைத்திருந்தாலும் நான்
காந்தம் போலே கவர்ந்து வாறேன் நிசமாய்

மெட்டு (மாமதி மந்திரியே) மனோகரா

*சோழன் - மறு - தரு*

ஆழிக்கடல் அரணாய் - அமைந்திட
அழகுறு பவளப்பாறை - அணையிட
நீழு நெடுந்தீவின் - ஏந்தலவன்
வெடியரசன் வசமே

*மீகாமன் - தரு*

மாலவன் வலத்தொடையில் - பிறந்திட்ட
மாவீரன் வெடியரசன் - அந்தக்
காலனும் நெருங்க அஞ்சும் - அவன்வலி
கடலினும் பெரிது அன்றோ

*சோழன் - தரு*

நாற் படையும் தருவேன் - சோழமகா
கப்பற் படை தருவேன் - மீகாமனே
காற்றினும் கடுகதியாய்ச் சென்று உந்தன்
ஆற்றலைக் காட்டி வெல்வாய்

*மீகாமன் - தரு*

போர்வீர கண்டனுடன் - பொருதிறல்
ஏரிலங்குருவன் மற்றும் - இணையில்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரநாராயணனும் - விறல்மிகு
விளங்கு தேவனும் எதிர்ப்பான்

*சோழன் - தரு*

நாடு பேர் நகரமுடன் - என்னரசும்
நீடும் கொற்றமுந் தருவேன் - துணிவுடன்
ஈடு இணையுமில்லா - நாகரெத்தினம்
தேடித் தருவீர் நன்றே

*மீகாமன் - தரு*

மின்னிடும் நாகரெத்னம் - எவர்க்கென
மன்னவர் கூறவில்லை - பின்னிவரும்
இன்னல் தனை ஏற்பேன் - எனக்கெனத்
தன்னலம் ஏதும் இல்லா

*சோழன் - தரு*

கருமாரி அவதாரமாய் - மானாக்கனின்
திருமகள் கண்ணகையின் - காற்சிலம்பதில்
அருமணி பதித்திடலே - சித்தம் வைத்தேன்
வரும் துயர் ஏற்போமே

*மீகாமன் - தரு*

திருமாலின் தங்கை அம்மன் - அவதாரத்
திருவடிவம் கண்ணகை - கமலப்பூந்
திருவடிச் சிலப்பதனில் - நாகரெத்தினம்
பெருமையாய்ப் பதித்திடுவோம்

*சோழன் - வசனம்*

மீகாமரே நீர் இப்போதே வெடியரசனிடம் சென்று சாஸ்த்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கும் சாம தான பேதம் என்னும் யுக்திகளைப் பயன் படுத்தி அந்தரெத்தினத்தைப் பற்றி வந்து உன் மன்னன் நான் வாக்கைக் காத்திடுவீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(சோழன் போக மீகாமன் கண்ணகை அம்மனைத் தியானித்தல்)**

*மீகாமன் இன்னிசை*

ஆழி தன்னைக் கடப்பேன் என்றால்
ஆகாயத்தை அளக்கச் சொன்னால்
நாழி தன்னில் நானென் செய்வேன்
நாகரெத்தினம் கானல் நீரோ
சோழ மன்னன் ஆணை ஏற்றேன்
சோதனையில் துவளுவேனோ
காளி அவதார அன்னை கண்ணகையே
கருணை செய்வாய்

மெட்டு (ஆதி அந்தம் இல்லா ஞான அருள் பொழியும்) சம்மிக்கல்

*மீகாமன் - தரு*

அன்னையே எம் கண்ணகையே
ஆதாரந் தந்தாளுவாயோ
துணை நீயே துயர் தீர்ப்பாயே

காளித் தேவி அருள் விளங்க
கண்ணகையாய் வந்த தாயே
தாளிட்டேன் தரிசனம் தருவாயே

*கண்ணகை அம்மன் - வரவு - சிந்துநடை*

ஆதி சக்திதேவி இந்த அவைதனிலே வந்தேன் - நல்ல
நீதி கார்க்கும் கண்ணகையாய் காட்சியது தந்தேன்

*சிந்துநடை*

வேப்பிலையைச் சூடிக் கொடும் வெம்பகையை முடிப்பேன் - கௌரி
காப்புக் கட்டும் கன்னியரைக் காளையரைக் காப்பேன்

*சிந்துநடை*

கையில் சிலம்பெடுத்துக் கண்ணகியான் வந்தேன் - இந்த
வையகத்தார் வாழ்த்துரைக்க வாகை சூடி வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிந்துநடை*

வீரமகா காளியும் நான் கருமாரியும் நான் - இப்போ
நேரதிலே கண்ணகையாய் வந்தவளும் நானே

*சிந்துநடை*

உளம் உருகி அழைக்கின்றானே மைந்தன் மீகாமன் - நானும்
மளமளென்று நடந்தோடி அவன் துயரம் களைவேன்

*சிந்துநடை*

அழைத்த குரல் தனற்கிரங்கி அம்மன் நானும் வந்தேன் - அருள்
மழை பொழிந்தே அல்லலது தீர்த்திடவே வந்தேன்

*சிந்துநடை*

தென்திசைக்கோன் எமனும் அஞ்சத் துள்ளி வந்தேன் நானும் - கொடும்
மின்னல் மா முழக்கமென முன்னே வந்தேன் நானும்

மெட்டு (ஆச்சி கனிவாச்சியுந்தன்) எஸ்தாக்கியார்

*கண்ணகை - தரு*

நெஞ்சமது நெகிழ்ந்துருகி இரந்து என்னை
அழைத்ததேனோ மைந்தா - தன்னைத்
தஞ்சமெனச் சரணடைந்தோர்
சேருங் குறை தனைத் தவிப்பாள் தாய் தான்

*மீகாமன் - தரு*

அறிவின் சுடரை அசடன் அழைக்க
அன்னை வரவும் என்ன பேறு பெற்றேன் - மைந்தன்
அறிந்திடாச் செய் பிழை பொறுத்து
அருள வேண்டும் தாயார் பதம் நான் தொழுதேன்

*கண்ணகை - தரு*

அகமும் புறமும் வாடி வருந்துதல் ஏன்
விளக்குவாய் மீகாமா - இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செகத்தில் உற்ற துயரம் ஏதோ
இது சணமே ஓதிடுவாய் மைந்தா

*மீகாமன் - தரு*

என்னை பாதச் சிலம்பில் உயர் நாகரெத்னம்
பதித்திடவே சோழன் - என்னை
தென்திசையின் வெடியரசன்
இடமே பெற்று வரவே ஆணை செய்தான்

*கண்ணகை - தரு*

வானமும் நம் வசமாகிடும் வளியும் நீரும்
கூடக் கையில் ஒடுங்கும் - உந்தன்
சேனையோடு செல் மீகாமா
நாகமணியைப் பற்றி வருவாய் நிசமாய்

*மீகாமன் - தரு*

அட்ட திக்குப் பாலர்களும் அஞ்ச விஞ்சு
வெடியரசன் முன்னால் - நானும்
திட்டமாய்ப் போர் செய்யில் வெற்றி
கிட்டுமோ நல் ரெத்தினம் கை வருமோ

*கண்ணகை - தரு*

வாழ்க்கை என்றும் போராட்டமே
வையகத்தில் வகுத்த நியதி அதுவே - எந்த
வாழ்வும் வீழ்வும் நமதே
வருந்த வேண்டாம் விடியல் தூரம் இல்லை

*மீகாமன் - தரு*

தம்பியுடையான் படைக்கு அஞ்சான்
தனியொருவன் சக்தி படைத்தேனோ - எந்தன்
அம்பிகையே அரசன் வாக்கைக்
கார்க்க வல்ல வரமே அருள்வாய் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கண்ணகை - விருத்தம்***

தெய்வ சித்தம் ஆகாதெனினும்
தேடும் பொருள் கை கூடாதெனினும்
ஐயம் இல்லை முயன்றால் எதுவும்
முடியாதென்று ஒன்றும் இல்லை
மெய்யே வருந்தக் கூலி தருமே
மீகாமா நீ வெல்வாய் நிசமே
எய்வாய் கீர்த்தி எழுவாய் திடமாய்
உய்வாய் நலமே வரமே ஈந்தேன்

***கண்ணகை - வசனம்***

வானகத்துப் பறவைகளும் வையகத்து மாந்தர்களும் கானகத்து விலங்கினமும் தங்களது வாழ்வுக்கான போராட்டங்களை நிகழ்த்திக் கொண்டுதானிருக்கின்றன. வாழ்வே என்றும் போராட்டந்தான் அதை எண்ணி விசனமடையாது தடை எது வரினும் மனம் உடைந்திடாது நமது கடமைகளைச் செவ்வனவே ஆற்றுவோமாக. மீகாமா சென்று வா வென்று வா

## காட்சி – 05

**இடம்** : *கடற்கரை - கடல் - காரைதீவில் வீரநாராயணன் - மாளிகை*
**பாத்திரங்கள்** : *வீரநாராயணன் - அதிகாரி - தூதுவன்*

மெட்டு (நிருபம் அது கொண்டு செல்லுவான்) மாவீரன் சங்கிலியன்

***தூதுவன் - வரவு - தரு***

திருமுகம் நான் கொண்டு செல்லுவேன் - நெஞ்சம் நெகிழ்
திருமுகம் நான் கொண்டு செல்லுவேன்
வரு துயரம் போக்குதற்கு வந்தவினை நீக்குதற்கு
தருணமிதைத் தப்பிடாது தக்கவாறாய் செப்புதற்கு
இருள் கவியும் முன்னர் வரும் இடரதுவும் துச்சமென
புரவியேறிப் போகுமிடம் விரைவினிலே சென்றடைவேன்
(திருமுகம் நான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் வண்ணமாய் நுரைபொருதும் பாலியாறைக் கடந்து வந்தேன்
கல்லும் முள்ளும் காடும் மேடும் கடுகதியாய்த் தாண்டி வந்தேன்
வில்லிருந்து பாயும் அம்பு விரைவதுவாய் அருவியாற்றை
வல்லமையாய்த் தாவி ஓடி பூநகரித் துறையடைந்தேன்
(திருமுகம் நான்)

கச்சாயத் துறை காணுதங்கே அச்சமதைத் துச்சமதாய்
கச்சிதமாய்ப் பாய்விரித்து கலம் செலுத்திக் கடுகிச் செல்ல
மச்சமீனினங்கள் துள்ளும் மெச்சும் எழில் தனை ரசித்து
உச்ச வெய்யில் ஏறுமுன்னம் உற்ற இடம் சேரவேண்டும்
(திருமுகம் நான்)

திரைகடலில் மூழ்கிப் பெரும் திரவியங்கள் ஈட்டி வந்தார்
கோரச் சுறாமீனதாலே கொல்லையிலே முடங்கலுற்றார்
போராடுதல் ஆற்றல் கொண்ட வீரநாராயணனை நாடி
காரை தீவை வந்தடைந்தேன் கண்டு கொள்வேன் இளவலை
(திருமுகம் நான்)

மெட்டு (மன்னர் மரபில் வந்தவன்) மாவீரன் சங்கிலியன்

***அதிகாரி - வரவு - தரு***

பேரதி காரி நானே - காரை தீவின்
நேரதி காரி நானே
ஏவர்வளத் தோடுயர் ஏற்ற வணிகமும்
எண்திசை போற்றரும் ஏடறிவாளரும்
நீரதில் புரள் அலை எழிவது வானதும்
நித்திலம் ரெத்தினம் ஒத்திடு சொத்தென
(பேரதிகாரி நானே)

வரியது வாங்கி நான் வளமது வாக்குவேன்
வலிமைகள் பெற்றெங்கள் படைக்கணியாக்குவேன்
அரசரின் இளவலின் ஆணையைப் போற்றுவேன்
அயராது பணி செய்வேன் உயிராக அதைக் கொள்வேன்
(பேரதிகாரி நானே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருச்சண்டை ஊர்ச்சண்டை தேசத் துரோகங்கள்
நெறிகெட்ட வன்புணர் சமூக விரோதங்கள்
திரு நாட்டின் சாபமாம் மத சாதி பேதங்கள்
தீமைகள் சாய்ந்திடத் திட்டமாய் செயலாற்றும்

(பேரதிகாரி நானே)

வழக்குகள் பிணக்குகள் வாதாட்டம் சூதாட்டம்
வம்புகள் வரி ஏய்ப்பு வாதைகள் போதைகள்
களவுகள் அழிவுகள் கரவுகொள் கருமங்கள்
களைந்துடன் தண்டனை கடிதில் வழங்கும் வல்ல

(பேரதிகாரி நானே)

மெட்டு (வீரமேவிய சீரிய நாடே) மாவீரன் சங்கிலியன்

*வீரநாராயணன் - வரவு - தரு*

பேரலை தவழ் சீரிய நாடே - பொருதும் திறலே கொண்ட
வீரமறவர்கள் விளைந்திடும் நாடே - விடியும் கதிராய் எழு
சேர சோழரும் பாண்டியரும் ஒன்று
சேர வருகினும் செருவினில் வென்றிடும்
தாரணிதனில் ஓரணி நின்றிடும் காரை தீவதன் அரசனும்

(பேரலை தவழ்)

மச்சம் பவளங்கள் உச்சமாய் விளையும் - மாதம் மூன்று
நிச்சயம் நிலம் நெகிழ்ந்து வளம் கொழிக்கும்
நிகரே இல்லா பாரோர்
மெச்சவே கல்வி கலைகளும் வளர்ந்திட
மரபெழுந்த தமிழ் முகிழெழுந் துலவிட
மூவேந்தர் நிகர் முடிசூடி ஆளுவேன்

(பேரலை தவழ்)

மத்தளம் தவில் உடுக்கு இசை முழங்க
மகிழ்வாய் உளமே இனிக்க
முத்துச் சிரிப்பினில் மோகனம் ஒலிக்க
மூன்று தமிழின் சுவைபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திரை முகிழ் பரதமும் சுரங்களும்
முதிர்ந்த பண்ணிசை நாதஸ்வரங்களும்
கூத்திசையுடன் உயர் நவரசங்களும்
குதித்து ஆடிடக் கொலுவினில் செல்லுவேன்

(பேரலை தவழ்)

அன்னமென நடை பின்னி வரும் அழகோ
அலையாய் குழலே ஆட
கன்னியர் இடை மின்னல் என நெளிய
கயலின் விழியின் காந்தக்
கண்களின் கனல் கதிரவன் ஒளியெனக்
காளையர் நெஞ்சைக் கவர்ந்திடு எழிலென
எண்ணம் மேலெழ விண்ணையும் விஞ்சிடு
வீரம் மேவிட அரியணை ஏகுவேன்

(பேரலை தவழ்)

*அதிகாரி - சந்தத் தாழிசை*

தென்பொதிகைத் தென்றல் தன்னில் தேசுலவும் செந்தமிழ்
தென்னங் கீற்றில் மோதி இசை தேசமெங்கும் வீசவே
சென்னி முடி தன்னில் நவ ரெத்தினங்கள் மின்னவே
கோன் சிறக்கக் கொடி பறக்கக் கொற்றவா நீர் ஆளுவீர்

***(தூதுவன் வணங்கி அல்லிராணியின் நிருபத்தைக் கொடுக்க வீரநாராயணன் வாசிக்கிறான்)***

*வீரநாராயணன் - கடிதவாசகம்*

சூரியன் நிகர்த்தோர் வீரநாரயணர்க்கோர்
காரிய மாகவே அல்லி
ராணி நான் உழுத வாசகமதனைக்
கருத்தினில் கொள்ளுவீர் விருப்பாய்
கூரிய பற்கள் கொடுர குணங்கொள்
பாரிய சுறா மீனொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரமதாக காராழி தன்னில்
மீனவரைப் பலி கொள்ள
ஊரவர் விழியில் நீரது புனலாய்
பெருகிட அழுதுமே புரண்டார்
காரிகை அல்லி ராணியென் மண்ணின்
கலக்கமே தீர்த்திட வேண்டும்
தீரராம் நீரே திரை கடல் தனிலே
கொடியதான சுறா மீன் தனையே
பொருதியே கொன்று பெருமையாய் மக்கள்
இடர் களைந் தேற்றமே செய்வீர்

*இப்படிக்கு*
*உமது மைத்துனி அல்லிராணி*

*வீரநாராயணன் - சந்தவிருத்தம்*

இந்துமா கடல்தனில் எழுந்த எம் ஈழமே
இன்னல் பட விடவோ
செந்தமிழ்த் தேவி நல் அல்லிராணி தேசச்
சொந்தங்கள் வதைபடவோ
விந்தையாய்க் கொடியதோர் சுறாமீனை வீழ்த்திட
வீரர் யாரும் இலையோ
முந்தையர் நாங்களென்றே முரசறைவோமே
முடிப்போமே கொடுமையதை

*வீரநாராயணன் - வசனம்*

வில்லிருந்து புறப்பட்ட கணையதுவாய் விண்ணிருந்து ஒளிபாய்ச்சும் கதிரவனின் கனலதுவாய் புறப்பட்டுவிட்டேன் புதிய புறம் படைப்பதற்கு உறக்கம் விட்டேன் உற்ற துயர் களைவதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 06

**இடம்** : *கடல் - அல்லிராணிக் கோட்டை*

**பாத்திரங்கள்** : *வீரநாராயணன் - அல்லிராணி*

***(வீராநாராயணன் முத்தரிப்பின் அல்லிராணிக் கோட்டை நோக்கிப் பயணிக்கிறான்)***

மெட்டு (உதயத் திசையெழு) ஞானசவுந்தரி

***வீரநாராயணன் - தரு***

அதியுக்கிர்ம முடி அடல்மேவிய கொடி
அரியாசனமெழு அல்லி ராணி என்
இதயத் தரசியின் இன்னல் களைந்திட
இடியின் விரைவதாய் நொடியில் செல்வேனே

காரை நகரிருந் தேகிக் கடல்தனைக்
கடந்தே பூநகர் துறை சென்றல் வழி
ஊராம் மன்னாரின் சிலாபத் துறையெனும்
உரங்கொள் முத்தரிப் பிடமது செல்வேன்

கடலோர மெழு அரண்கள் அமைவுற
கற்கோட்டை நெடுங் கொடி கொத்தளங்களும்
அடலே றெனப் புய வலிசேர் அல்லியின்
அல்லல் தீர்த்திட அலையெனச் செல்வேன்

சின்ன வயதினில் சேர்ந்தொன்றாய் விளை
யாடி மகிழ்ந்தோம் அக் காலம் திரும்புமோ
அன்னம் நடை பயில் மின்னல் இடை எழில்
கன்னி அல்லிமா ராணி முன் செல்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(வீரநாராயணன் அல்லி ராணியைச் சந்தித்ததும்)*

மெட்டு (மாநகர் பவனி) கண்டி அரசன்

*அல்லிராணி - தரு*

வாரும் மைத்துனரே - வருந்தும் குடிகள் உயிர்
காரும் இத்தினமே - விதியின் விளைவோ எங்கள்
ஊரவர் வகை தொகையே இன்றியே
ஒழிந்து இழிவு கிட்டிட சேரும் பாவமே
சூழும் பழிதனை நீரும் களைவீரே

*வீரநாராணன்- தரு*

அல்லியே அரசி - அழகின் அணியே இடை
வில்லென நெளிய - ஆரா அமுதாய் வந்த
வல்லியே வான வில்லின் ஜாலமே
வாஞ்சையாய் வந்தேன் வருத்தம் ஏனோ உன்
அல்லல் தீர்த்துப் பின் அணைப்பேன் நான் என்னை
சொல்லிச் செல்லுவேன் மல்லில் வெல்லுவேன்

*அல்லிராணி- தரு*

காற்றும் கடலையும் - கதித்தே கனத்தே கொட்டும்
கார்மேக மழையும் - சகுனம் சஞ்சலமதாய்
கூற்றுவன் எனக் கோரச் சுறாமீனும்
கால நிலையும் பேர் கடலும் கலங்கிட
ஆற்றலுடன் எதிர் பொருதி வென்றிட
ஆகுமோ அன்பே ஏக்கமாகுதே

*வீரநாராணன்- தரு*

காற்றில் ஏறிடுவேன் - காதற் பெண்ணின் கடைக்
கண்ணின் பார்வையிலே - கலைசேர் மயிலே உன்பால்
ஆற்றிலும் பேர் ஆழி தன்னிலும்
ஆகாயந் தொடு சிகரந்தன்னிலும்
ஏற்றமே கொண்டு எதிரியைக் கொல்வேன்
எந்தன் தேவியாய் உன்னை நான் வெல்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீரநாராணன்- வசனம்*

கட்டழகின் கவிமலரே உன் வட்ட நிலா வதனமதை என் கண்ணில் வைத்து திட்டமாய்ப் பகை முடிப்பேன் சென்று வருகிறேன்.

## காட்சி – 07

*(வீராநாராயணன் சுறாமீனோடு பொருதச் செல்லுதல்)*

மெட்டு (மண்ணில் மாயா ஜாலம் காட்டும்) விடுதலைப்பயணம்

*வீரநாராயணன்- தரு*

சூரமாய்ப் பெரும் சூறைக் காற்றெனச்
சுழன்று சுழன்று கலக்கியடிக்கும்
கோரச் சுறாவின் கொடுமை முடிப்பேன்
கொண்ட குறிகோள் வென்று எடுப்பேன்

ஆழிப் பேரலை அடித்தெழுந்தாலும்
அண்டமே எதிர் கொண்டு வந்தாலும்
நீழும் துயரம் நாளில் ஒழிப்பேன்
நீளச் சுறாவைத் தாள அழிப்பேன்

ஆழிதன்னிலே மூழ்கி என்னுயர்
ஆழிந்து படினும் அல்லி ராணி முன்
ஏழு ஜென்மம் நான் எடுத்து வருவேன்
எந்தன் உயிரை நித்தம் தருவேன்

*வீரநாராயணன்- சந்தவிருத்தம்*

மூர்க்கமாய் மலையெழு சிகரமாய் மோதிட
பெருவலியாய் நெருங்கும்
கூர்மை கொள் பற்கொண்ட கொடூரக் குணாங் கொண்ட
கோரச் சுறாமீனோடு
தீர்க்கமாய்ப் பொருதியே செருவில் அல்லியவன்
ஊரவர் உயிர் காப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்க்கடி தன்னிலே நீளச் சுறாமீனை
நிர் மூலமாக்குகிறேன்

## காட்சி – 08

**இடம்** : *கடற்கரை - நந்தவனம்*
**பாத்திரங்கள்** : *வீரநாராயணன் - அல்லிராணி*

மெட்டு (விண்ணில் உலவும் முழு மதியே) சிலம்பரசி

***வீரநாராயணன் அல்லிராணி - தரு***

கண்ணே கனி மொழியே கவியே
கயல் விழியே - மின்னும்
பொன்னே புதுமலரே எழிலே
பண்ணோடு பாடி வருவேனே - மணப்
பெண்ணாகச் சோடி சேருவேனே

காத்தான் ஆரியமாலா போலே
கலந்தோமே - காதல்
பூத்துக் குலுங்க மணந்தோமே
கூத்தின் இசையாய் இணைந்தோமே - தென்றல்
காற்றும் அலைபோல் அணைந்தோமே

வள்ளுவன் குறள் நெறி நின்றே
வழுவாதே - என்றும்
தெள்ளு தமிழ் பாடி மகிழ்வோம்
உள்ளத்தால் ஒன்று ஆகினோமே - காதல்
வெள்ளத்தால் இணைவாகினோமே

மலரும் மணமும் போலே ஆனோம்
மகிழ்வானோம் - மாலை
மதியின் ஒளியில் இசைவானோம்
உலகையே மறந்திருப்போமே - என்றும்
உவகையில் சுகித்திருப்போமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 09

**இடம்** : *கடல்*

**பாத்திரங்கள்** : *மீகாமன் - சோழ கடற்படையின்*

மெட்டு (வீரசூரரான வேடரே) எஸ்த்தாக்கியார்

***(சோழ நாட்டிலிருந்து தளபதி மீகாமன் கடற்படை வெடியரசனைத் தேடி நெடுந்தீவு செல்கிறான்)***

***மீகாமன்- தரு***

வீர சோழரான தோனரே - விரைவுடனே
வீசு காற்றினில் பாய் விரிப்பீரே - விஞ்சுவேகமாய்
தீரின் திசையினில் நேராய் நெடுந்தீவை
நெருங்கிக் கப்பலைச் செலுத்தி வெடிமன்னன்
ஊரின் துறைதனில் தரித்து நங்கூரம்
உரமாய் இட்டுமே உற்ற இடம் செல்வோம்
(வீர சோழரான)

சோழ மன்னரின் ஆணை ஏற்றுவந்தேன் - சூழதுணையாய்
நீழு கடற்படை பலமே பெற்று வந்தேன் - நிகரில்லாத
ஈழக் கடல்தனில் எமனே எதிர்ப்பினும்
ஆளும் வெடிமன்னன் அடவே பொருதினும்
நாளில் நாகமா மணியை பற்றியே
மீளுவேன் அல்லால் மாளுவேன் நிசம்
(வீர சோழரான)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 10

**இடம்** : *நெடுந்தீவில் வெடியரசன் மாளிகை*
**பாத்திரங்கள்** : *நீலகேசி*

மெட்டு (வானகம் எங்கும்) சம்மிக்கல்

***நீலகேசி - வரவு- தரு***

கடலலை கொஞ்சும் கரிபரி துஞ்சும்
திடமது ஓங்கும் திரவியம் தேங்கும்
அரியணை மேவும் அடல் வெடிமன்னன்
உரிமைகொள் நீல கேசியும் நானே

பார்வதி தேவி திருவடி போற்றி
பரமனார் பாதம் கவிமலர் சாற்றி
ஏர் வளங் கண்டு நீர் வளங் கொண்டு
சீர்பல பெற்று ஊர் வளம் காண்போம்

மல்லிகை முல்லை மாசறு அல்லி
சில்லெனப் பூக்கும் பவள மல்லிப் பூ
மெல்லெனச் சிரிக்கும் சூரிய காந்தி
உல்காசப் பூவனம் ஏங்குதே என்மனம்

செங்கனி யூறும் தேன் சிந்திப் பாயும்
தெங்கிளங் கீற்றினில் தென்றலே பேசும்
சங்கொலி முழங்கும் வீரமே பொங்கும்
துங்கன் மனையாள் நீல கேசிநான் செல்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 11

**இடம்** : *கடல்*

**பாத்திரங்கள்** : *மீகாமன் - சோழ கடற்படையினர்*

மெட்டு (வானத்தார் இடியொலி கடலலை) எஸ்த்தாக்கியார்

***மீகாமன் - தரு***

கார் கடல் அலையிலும் கரையிலும்
காவலே கதித்திங்கே காணுதே
போரது புரிந்திட நேரினும்
பற்றுவேன் பாந்தன் மணி நான்

எடுத்தோர் காரியம் முன்னின்று
முடித்திடா விடுத்து நான் அறிந்திடேன்
கடல் அலை முன் செல்வதன்றி ஓர்
அடிதானும் பின் செல்வதன்றில்லையே

***மீகாமன்- வசனம்***

சோழ வீரர்களே கடலிலும் கரையிலும் கடுங் காவல் காணப் படுகிறது. யுத்தம் தொடங்கு முன் சுற்றிவளையுங்கள் நெடுந்தீவை.

## காட்சி – 12

**இடம்** : நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை

**பாத்திரங்கள்** : *வெடியரசன் - நீலகேசி*

மெட்டு (வாளனயே வரிவிழியே) எஸ்த்தாக்கியார்

***(வெடியரசனிடம் மனைவி நீலகேசி தான் கண்ட கனவு பற்றிக் கலவரத்துடன் உரைத்தல்)***

***வெடியரசன் - தரு***

மாதரசே மாணிக்கமே - உந்தன்
மதிவதனம் வாடியதேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியே கலக்கமும் ஏனோ - நீயும்
ஓதுவாயென் முன்னே - நானும்
நீதி செய்வேன் கண்ணே

*நீலகேசி - தரு*

மன்னவரே என்னுயிரே - எங்கள்
தொன்மை நெடுந் தீவரசே
துன்பமேகம் சூழந்து நம் நாட்டை - இடி
மின்னல் புயல் அழிக்க - இந்தக்
கன்னி கனாக் கண்டேன்

*வெடியரசன் - தரு*

ஆழி தன்னில் மூழ்கி அன்று - விஷ்ணு
பாஞ்சைனியம் மீட்ட வீரன்
காளி அருள் பெற்றே வந்தாலும் - அவன்
கரமுடனே சிரமும் - நானும்
அரிந்தடலே புரிவேன்

*நீலகேசி - தரு*

தெய்வக் குற்றம் தானதுவோ - நாங்கள்
செய்பிழையால் ஆனதுவோ
வையகந்தான் வெந்தழியவே - கண்ட
சொப்பனம் பலன் ஏதோ - நாங்கள்
தப்பவகை யாதோ

*வெடியரசன் - தரு*

நாராயணன் துணை தருவான் - அந்த
ஞானகுரு வரம் அருள்வான்
ஆரணங்கே அஞ்சுவதேனா - எந்தன்
வீரமதில் உனக்கு - இப்போ
ஐயம் வந்ததேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீலகேசி - தரு*

பிரளயங்கள் கரை புரள - மன்னர்
கிரீடமது தரை உருள
இரவு பகல் இருளதுவாக - இந்தப்
பார் படர எரிய - அந்தப்
பரமன் நடம் புரிய

*வெடியரசன் - சந்தவிருத்தம்*

கடகட வெனவரு கடலலை நடமிட கற்சுவர் தகுத்தவாறாய்
விடமிடு அரவினை விரிசடைக் கடவுள் தன் திருத்தோளில் வளைத்த - வாறாய்
மடமடவென வரு நெடுபகை புதைபட நெஞ்சினில் உறுதி கொண்டே
திடமெடுத்தேன் எந்தன் தேவி நீ கண்டதோர்க் கஞ்சி

***வெடியரசன்- வசனம்***

கடல் கரை புரண்டாலும் இடர் பல விளைந்தாலும் கலங்க மாட்டான் மறத்தமிழன் எதுவரினும் எதிர்கொள்வோம் அஞ்சாதே தேவி.

## காட்சி – 13

**இடம்** : *கடல் - கப்பல்*

**பாத்திரங்கள்** : *கற்பித்தான் - கப்பற்காரர் - மீகாமன் - சோழர் படை*

மெட்டு (அலைகடல் சூழ் ஈழமண்ணே) முற்றுயை முறியப்போம்

*வெடியரசன் - தரு*

கடலிலொரு கரையதுபோல் - கடற்
படையதுவே காண்கிறதே
வடகிழக்குத் திசையிருந்தே - பாய்ந்தே
வருகுதெங்கள் இனங்கண்டு நெருங்கியே வாறார்
நீரலை மீதிலே தீரமாய் வாறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்குகள் பேரிகை அடித்துமே செல்வோம்
உதிரமே சிந்தினும் உறுதியே கொள்வோம்
(ஏலயேலோம் ஏலவலி)

*கப்பற்காரர் - 2 - தரு*

விண்ணளந்த கொடி பறக்க - சோழர்
சின்னமதாம் புலி பறக்க
திண்ணமதாய் அண்மை சென்றே - அவர்கள்
எண்ணமதைக் கண்டுகொள்ள
மண்ணதைப் பற்றிட வந்தவரோ அன்றி
வரிதிறை கேட்டுமே வலுத்திடுவாரோ
பண்பாடு களையும் பாழ் படுத்திடுவாரோ
பாதகரோ அன்றி நீதி செய்வோரோ
(ஏலயேலோம் ஏலவலி)

*கற்பித்தான் - தரு*

வெண் கொற்றக் குடை கொடிகொள் - வேந்தன்
வெடியரசன் மண்மிதிக்க
விண்ணவரும் எண்ணமிடார் - சோழர்
எண்ணமேதோ விந்தையிதே
எண்ணில்லாப் படைக்கலம் எகிறிப்பாய்கிறதே
எவரெவர் ஏவலால் இவர் மாய்கிறாரோ
கண்ணினில் வெண்ணெய்யை விட்டு நாம் பார்ப்போம்
கதித்த படை வரினும் கண் போலே காப்போம்
(ஏலயேலோம் ஏலவலி)

*கற்பித்தான் - தரு*

நெடிய கடற் படை கொண்டெங்கள்
நெடுந் தீவதனை நெருங்கி மெத்த
கொடியில் புலியைப் பறக்க விட்டு
கொட்டு முரசம் முழங்குவோரே
வெடிபேர் மன்னன் ஆளுகைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவிடென்று புகுந்ததென்ன

முடியே தாழ்த்தி வணாங்கி வந்த
விடயத்தை நீர் விளக்கு வீரே

***கற்பித்தான் - வசனம்***

விண்ணவரும் ஏற்றிப் போற்றும் வெடியரசன் ஆளுகைக்குள் விடையின்றி வந்திட்ட நீங்கள் யார்

மெட்டு (வானத்தால் இடியொலி கடலலை) எஸ்த்தாக்கியார்

***கற்பித்தான் - தரு***

எங்களின் கடல்தனில் ஏறியே
எல்லைகள் மீறியே வந்ததார்
துங்கன் எம் வெடியரசன் முன்பு
துலக்கமாய் ஆணையே பெற்றீரோ

***மீகாமன் - தரு***

ஏழ்கடல் எழு நிலம் எங்கும் எம்
சோழ மா அரசரின் ஆளுமை
நீளநான் ஏற்றுமே போற்றுறார்
ஈழமோ எமக்காணை விடுக்கிறார்

***கற்பித்தான் - தரு***

எமக்கென்றோர் அரசதும் நிலமதும்
எல்லையாய்க் கடலதும் இருப்பதை
அமரரும் மதித்திடுவார்களே
அறிந்தும் எம் ஆளுகை வந்ததேன்

***மீகாமன் - தரு***

இறை திகழ் கருமமே வேண்டி உம்
துறை வந்தோம் தவறுகள் காண்பதேன்
முறையதாய் மன்னரைக் காண்பதில்
குறையுண்டோ கூறுவீர் கரவின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *கற்பித்தான் - தரு*

மரபதாய் அரசரைத் தரிசிக்க
மடை போங்கு படைகொண்டு வந்ததேன்
தரையினில் இறங்கிடத் தக்கதோர்
தந்திரம் தளுக்கு நீர் விடுகிறீர்

### *மீகாமன் - தரு*

கரைதனில் இறங்கிடத் தடையெனில்
கடலினில் கப்பலில் காணுவோம்
வரவேற்போம் அரசரின் வருகையை
கருமத்தை கரவின்றிச் செப்புவோம்

### *கற்பித்தான் - விருத்தம்*

கடல்படுமா திரவியங்கள் கருதருநல் தானியங்கள்
திடங்கொள் மக்கள் நெடிது வாழும் தீர நெடுந்தீவை ஆளும்
வெடிபேர் அரசர் விருப்பங் கேட்டு வினயமதாய் அழைத்து
- வாறேன்
படகை விட்டுப் படையணி தரை தாவிடாது முடக்கி வைத்தல்
- முழுதும் உந்தன் கடனதாமே

### *கற்பித்தான் - வசனம்*

மீகாமா உன் வேண்டுகோளை ஏற்று அரசரை அழைத்து வருவேன். அதுவரை நீயும் உனது படையினரும் எமது கரைதனில் கால் வைக்கக் கூடாது கடலினில் கப்பலில்தான் நிற்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 14

**இடம்** : *நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை*

**பாத்திரங்கள்** : *வெடியரசன் - கற்பித்தான் - படைவீரர்*

***கற்பித்தான் - ஆசரியம்***

அரணுறு நெடிய தீவொடு சப்த
அலை தவழ் தீவுகள் ஆளும்
உரமுறு வீர பாராக்கிரமம் வாய்ந்த
அரசரே சரணமே சரணம்
கரவொடு சோழ சேனாதி பதியாம்
மீகாமன் எனப் பெயர் கொண்டோன்
அரசரைக் காண அடல் பேர் படையின்
ஆர்ப்பரிப்போடு வந்துற்றான்
திரைதனில் இருந்தே திமிரோடு பேசும்
துடுக்கதை அடக்கிட வென்றே
தரைதனில் இறங்கத் தடை போட்டு வந்தேன்
தகித்திடு மனத்திடத் துடனே

***வெடியரசன் - களிநெடில்***

அண்டமோ டெண்டிசையும் அடல் பொரு கடலையும்
அடங்கியே ஒடுங்கியதோ
ஆதித்தன் மேற்றிசையில்
தோற்றமே பெற்றதோ
அகந்தைகள் கோலோச்சவோ

விண்டலத் தேவரும் வியந்திட அரசுசெய்
வெடியரசன் ஆளுகைக்குள்
விடு விடென்று புகுந்தவரை
வினை செய் வேண்டி வந்தவரை
வேடிக்ககை நான் பார்த்திடவோ

குண்டலங்கள் கலகலக்க குதித்தோடி வருபகைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமிழதுவாய் நொருங்கிடவே
கதித்த பலங்கொண்ட
குலத்தில் உதித்திட்ட
குடை கொடிகொள் வெடியரசன்

மண்டலத் தரசரும் மண்டியிட்டே வணங்கும்
மகிமைகொள் மன்னனெந்தன்
மண்தனைப் பற்றிட
மா கடற் படை கொண்டு
மமதையாய் வந்தவரை

### சிந்து

மடை கடந்து வந்திட்டாரோ - மமதை கொண்டேன்
தடை உடைத்து வந்திட்டாரோ
விடங்கொள் கொடும் பாம்பதுபோல்
நெடுந்தீவினைச் சுற்றிப் பல
படகுகள் கப்பல்கள் பாய் மரக் கலங்களால்
மடமட வென வளைத் திடர்புரி பகைவர்கள்

(மடை கடந்து)

ஆண்டுகள் பல்லாண்டு தமிழ் ஈழு நெடுந் தீவதனை
ஆண்ட வம்சம் தனில் வந்த வெடியரசன் தத்துவத்தை
சீண்டியே பார்த்தாரோ - அவர் குருதி
விண்டலமெழுந்து இந்த மண்டல மதிர்ந்திடவே
விண்டல மெழுந்து இந்த மண்டலமதிர்ந்திடவே
அண்டங் குலுங்கிட சண்டர் கலங்கி
பண்டையர் பூமியைப் பலமுடன் காப்பேனே

(மடை கடந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெடியரசன் - விருத்தம்*

சோழன் ஆனால் என்ன தளபதி மீகாமன் ஆனால் என்ன
தோளுயர்த்தி வாள் சுழற்றும் வலிமை மிக்க
ஆளுமைகொள் அரசன் எந்தன் அரண் கடந்தே
ஈழமண்ணைப் பற்றிவிட எமனும் அஞ்ச
நாளும் போராட்டம் நடத்திடுவோம் திடத்துடனே
சூழுபகை சிதைந்திடவே சுதந்திரந்தான் நிலைத்திடவே
நீழுபுகழ் தமிழர் தங்கத் தாயகம் நாம் காத்து நிற்போம்

*வெடியரசன் - வசனம்*

சோழர்கள் எமது வீரத்தைச் சோதிக்கிறார்கள் வீரத் தமிழ் மறவர் பரம்பரையில் வந்தவன் வெடியரசன் என்பதை அவர்களுக்குக் காட்டவேண்டும். இப்போதே புறப்படுகிறேன்.

## காட்சி – 15

**இடம்** : *நெடுந்தீவு - கடல் - துறைமுகம் - கப்பல்*

**பாத்திரங்கள்** : *வெடியரசன் - கற்பித்தான் - மீகாமன்*
*சோழ கடற்படையினர்*

மெட்டு (ஆடச்செல்வோமே) ஞான சௌந்தரி

*வெடியரசன் - தரு*

தேடிச் செல்வோமே - பகைவரை
ஓடச் செய்வோமே
பாடி வீடு கடல் சூடு நெடுந்தீவு
பண்டைத் தமிழரின் பூர்வீக பூமியே
நாடி வந்தோர்களை நெஞ்சார வரவேற்போம்
கேடு நினைப்போரை வேரோடு சாய்ப்போமே

(தேடிச் செல்வோமே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கற்பித்தான் - தரு*

வெண் கொற்றக் குடை கொம்பு குழல் ஒலி முழங்கிட
வேற்படை வாட்படை வீரம் விளங்கிட
அண்டர்கள் சண்டர்கள் ஆர் எதிர் வருகினும்
அவர் புறம் காட்டவே நாம் திறம் நாட்டுவோம்

*மீகாமன் - விருத்தம்*

வீரமா வெடியரசன் விறல் கற்பித்தான் கூடி வாறார்
தூரமோ அதிகமில்லை துவண்டிட வேண்டாம் நீரும்
போரது நேருமுன்னம் சாம தான தண்ட பேதம்
சீரதுவாகப் பற்றி செயமதை அடைகுவோமே

*மீகாமன் - வசனம்*

வெடியரசனும் கற்பித்தானும் இணைந்து வருகின்றனர். படையினர் துணையின்றி வீரத்தை மட்டுமே துணையென்று வரும் அவர்களை நாம் சாம தான தண்ட பேதம் யுக்தியதாய்ச் சிறைப்பிடிப்போம்.

மெட்டு (சுத்தர இந்தரை) சங்கிலியன்

*வெடியரசன் - தரு*

வல்லமையாய் எங்கள் எல்லைகள் மீறியே
வந்ததார் ஊரெதுவோ பேரேதோ
வில்லோடு வீசுவாள் வேல் படைக் கலங்களும்
விந்தையாய் வந்ததென்ன விளம்பும்

*மீகாமன் - தரு*

சோழமா மன்னவன் தளபதி மீகாமன்
நீழ கடல் கடந்தே திடமாய்
ஈழமா வேந்தனாம் வெடிமன்னன் முன்னிந்த
நாளில் புகன்றிடவே வந்தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெடியரசன் - தரு*

வந்த விடயத்தைச் சொந்தமாம் வெடி மன்னன்
எந்தனிடம் நீரும் உரைப்பீர்
தந்திரமாய் எங்கள் தாயகம் தனையிடத்
தக்கதோர் தருணம் எனக் கொண்டீரோ

*மீகாமன் - தரு*

புகலுவேன் கேள் அதி புகழுடை மன்னவா
அகமதில் வஞ்சமில்லை அரசே
உகந்ததோர் கருமமே உந்தனின் உதவியே
தந்து பேர் எடுக்க வேண்டும் தயவாய்

*கற்பித்தான் - தரு*

உதவியே கோரிய உரமுறு படையணி
உற்றதோர் தளபதியே உரைப்பீர்
கதித்த படை தன்னைக் காட்டியே எங்களைக்
கடந்துமே கரையிறங்கும் கனவோ

*மீகாமன் - வசனம்*

அகிலத்தில் எவர்க்குமே கிட்டாத அற்புத
நாகமணி வேண்டியே வந்தேனே
மகிமை மிகும் அந்தப் பாந்தன் மணி ஈந்தால்
அகமிக மகிழ்வான் சோழ வேந்தனும்

*வெடியரசன் - தரு*

சோழியன் குடுமியும் சும்மாதான் ஆடாதே
சுகிர்த நாகரெத்தினம் பற்றவே
ஆழியது கடந் தோடி நீர் வந்தீரோ
அந்தமணி எந்தனின் உயிரே

*மீகாமன் - தரு*

நாட்டின் வளங்களும் நால்வகைச் சேனையும்
நல்லரசும் தருவான் சோழனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டில் அடங்கிடா செல்வமும் ஈகுவான்
ஏற்று நீர் நாகமணி நல்குவீர்

மெட்டு (கத்துரத்தம் சொரிந்தேயிடு) எஸ்த்தாக்கியார்

*வெடியரசன் - தரு*

மெத்த மெத்த குதித்தே வாறாய்
அத்து மீறி மண் மிதித்தை மாறாய்
எத்தனை படை வந்திட்டாலும் என்
சித்தம் அஞ்சிடா யுத்தம் செய்யடா
வித்தகம் பேசி சொத்தாம் நாகமா
ரெத்தினமதைப் பெற்று விடுவாயோ
பித்தன் போலவே பிதற்றினால் வீணே
செத்தொழிந்திடுவாயே

*மீகாமன் - தரு*

மீகாமன் பெயர் கேட்டிடல் இந்த
மண்ணும் நடுங்கிடும் விண்ணும் ஒடுங்கிடும்
ஆகாயம் எழு அண்டர் சண்டரும்
அடியில் முடியிட நெடிய படையுடை
ஏகசக்கர வர்த்தி சோழனின்
எண்ணம் ஏற்றுடன் திண்ணமாய் வண்ண
நாகமணியதைப் பற்றி ஏகிட
நடத்துவேன் யுத்தம் தடுத்துப் பார் மன்னா

*கற்பித்தான் - தரு*

கடலின் அலைதனில் எகிறிப் பாய்ந்திடு
கடற்படைக் கலம் தனிலே தாவியே
அடலே பொங்கிட நேடிய வேலினை
நொடியில் வீசியே உடலம் பிளந்திட
திடத்தோ டமர்புரி திக்கெட்டும் பெயர்
எடுத்த வெடிமன்னன் தொடுத்த போரினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுத்த கட்டளை விரைவில் வெற்றியாய்
நடத்தியே முடிப்பேனே

*வெடியரசன் - சந்தவிருத்தம்*

கடகட வென வரு கடலலை ஒப்பவே
கடற்படை கொண்டு எங்கள்
விடமுறு நாகமா மணிதனைப் பற்றிட
திமிரொடு பொருதும் பகை
சடசட வெனச் சரிந் துடலது துளைபட
செருக்கதும் நொருங்கக் கணை
விடுத் துந்தன் உயிரது முடித்தெங்கள் உயிரதாம்
விண்புகழ் மணி காப்பேன்

(வெடியரசன் விடுத்த கணை பாய்ந்து வீழ்ந்து விட்ட மீகாமன் சோழ கடற்படையினரை வெடியரசனையும் கற்பித்தானையும் சிறைபிடித்துக் கப்பலின் பாய்மரத்துடன் கட்டி வைக்கும்படி கட்டளையிடுகிறான்)

*மீகாமன் - சந்தவிருத்தம்*

விடுவிடு வென வெடி அரசனின் கணை மார்பில்
தாங்கியே வீழ்ந்து விட்டேன்
தடுத்தமராடியே தகுந்த தோர் தருணத்தில்
தரியலர் கதை முடிப்போம்
எடு எடு ஆயுதம் எதிரியை வளைத்திடு
வெடிமன்னன் பிடிபட்டான்
திடு திடு வெனக் கற்பித்தானையும் பாய்மரத்
துடன் கட்டிப் பிணைத்திடுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு (ஆழி சூழ்ந்திடும் இந்த ஈழ மண்ணின்)

மாவீரன் சங்கிலியன்

### *வெடியரசன் - தரு*

ஒத்தைக் கொத்தையாய் யுத்தம்
புரியுந் திறன் விடுத்து
மெத்து படையை ஏவி
மறைவாய்க் கட்டளை விட்டு
கத்து கடல் கலங்கக் களங்கம் விளைவித்தாயே
பித்தா விலங்குடைப்பேன் பிசகிடில் நான் இறப்பேன்

### *மீகாமன் - தரு*

உந்தன் உயிருடலம் எந்தன் பிடியதனில்
பாந்தள் மணியைத் தந்தால் பகைமை மறந்திடலாம்
உந்தி எழு கடலில் உற்ற துணை உனக்குத்
தந்திட யாருமில்லை அந்த மணியைத் தாராய்

### *வெடியரசன் - தரு*

உயிரைக் கொடுத்தும் பாந்தள் மணியைக் காத்து நிற்போம்
நியமம் அதுதானென்றால் துயரந் துணையும் ஏற்போம்
புயபல மறவீரத் தம்பியர் நால்வருள்ளார்
கயவரை அவர் வெல்வார் செயமதை நிசம் கொள்வார்

### *மீகாமன் - விருத்தம்*

அடலே பொங்கு நெடு படையோன்
அலைபேர் கடலின் அதிபதி யான்
விடமே தங்கு நாகமணி
விரும்பும் சோழன் தளபதி நான்
கடலே சூடு கப்பல் தன்னில்
குட்டி உம்மைக் காவல் வைத்தேன்
கடிதில் உம்மை மீட்பார் எவரோ
எடுப்பேன் நாக மணியை இன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெடியரசன் - விருத்தம்*

எத்தனை இடர் வரினும் எமதுடலம் துகழ்படினும்
அத்தனைத் தாங்கி நிற்போம் ஆதிநாக மணியைக் காப்போம்
தத்துவத்தோடெனது தம்பியர் தடை தகர்ப்பர்
வித்துவத் தோடு உம்மை வீழ்த்தியே வெற்றி காண்பர்

*வெடியரசன்- வசனம்*

மீகாமா நேருக்கு நேர் நின்று போரிட்டு வென்றிடா நெடுபடையை ஏவிவிட்டு என் கையில் விலங்கிட்டவர் வருவர் என் தம்பியர் நால்வரடா இந்த இழி செயலுக்கும் பழி வாங்கி உன்னைக் கொல்வரடா.

# காட்சி – 16

மெட்டு (திருக்கால் கரத்தில் ஆணி) குருதியில் மலர்ந்த அன்பு மகன்

*(வெடியரசனும் தளபதியும் சோழ சேனாதிபதி மீகாமனை சிறையிடப்பட்டதை அறிந்த நீலகேசி துயருகின்றாள்)*

*நீலகேசி - தரு*

மன்னர் சிறையே பட - அவர்
மகிமை கறையே பட
இன்னலும் நேர்ந்த தென்ன - இந்த
இடர் வந்து சூழ்ந்ததென்ன

நீலப் பெருங்கடலின் - நீராய்
நீழ்விழி சொரிகிறதே
மாலவனே கிருஷ்ணா - இந்த
மருளது களைந்திடாயோ

வடவர் பெரும் படையோ - எந்த
வடுகள் இட்ட தடையோ
விடுத்திட விரைந்துடனே - இப்போ
விடுத்திடுவேன் மடலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நீலகேசி - வசனம்*

மகாவிஷ்ணு மூர்த்தியின் வலத்தொடையில் பிறந்த மகா வலிமையுடைய என் கணவர் வெடியரசரை அந்தச் சோழ சேனாதிபதி மீகாமன் விலங்கிடுவதா - இப்போதே எனது மைத்துனர்கட்கு மடல் அனுப்பி அவனை என்ன செய்கிறேன் பார். தூதுவா இதோ இந்த நிருபத்தை எனது மைத்துனர்களிடம் சேர்ப்பித்து விடு.

## காட்சி – 17

**இடம்** : *கடல் - கப்பல்*

**பாத்திரங்கள்** : *ஏரிலங்குருவன் - விளங்குதேவன் - போர் வீர கண்டன் - தூதுவன்*

***(தூதுவன் நீலகேசியின் கடிதத்தைக் கொடுத்தல்)***

***ஏரிலங்குருவன் - கடித வாசகம்***

என்னரும் நேச மைத்துனர் தமக்கு
இனிதான வணக்கங்கள் செய்தே
அண்ணியே நீல கேசி நான் எழுதும்
அனலெழு சேதியே கேளும்

பாரத கண்டம் படை வலி கொண்ட
சேரமா பாண்டியரை வென்ற
சூரமா சோழன் சேனாதிபதியாம்
பெருவீரன் மீகாமன் என்போன்

நீரலை தனிலே நெடுபடை எழவே
ஆரவா ரத்துடன் வந்தே
ஆரமா மணியை அளித்திடு என்றே
கோரவே கொடு யுத்தம் தொடங்க

அரசர் உம் அண்ணர் கற்பித்தான் கூட
கரந்தனில் விலங்கினைப் பிணைத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரித்த பாய்மரத்தில் கட்டிடப் பட்டார்
விரைந்துடன் விடுத்திட வாரீர்

*ஏரிலங்குருவன் - விளங்குதேவன் - போர் வீர கண்டன்*
*- ஏரிலங்குருவன் - சிந்து*

அத்தனை தத்துவமாச்சோ - எமதண்ணரைக் கட்டிட
அத்தனை தத்துவமாச்சோ
மெத்திய கெறுவங் கொண்டு
கத்து கடல் கப்பல் நின்று
செட்டுடன் அரசர் கை கட்டிய துட்டனின்
கொட்டம் அடங்கிடக் கொட்டுவோம் முரசொலி
(அத்தனை)

***விளங்குதேவன் - சிந்து***

எப்படித் துணிவு கொண்டானோ - மீகாமனவன்
எப்படித் துணிவு கொண்டானோ
கப்பலேறி வந்து எங்கள்
ஒப்பரிய அண்ணர் வெடி
அரசரைப் பாய்மரத் துடன் பிணைத்திட்டவன்
சிரமது அரிந்திட விரைவது செல்லுவோம்
(அத்தனை)

***போர் வீரகண்டன் - சிந்து***

எல்லை மீறிட வல்லமையாச்சோ - எகிறிப்பாய்ந்து
தொல்லரசரை வெல்லவுமாச்சே
ஆயிரம் பல்லாயிரமாய்

தூய செழுந் தமிழ் விளைத்த
தாயகம் தளைபட ஓயுதல் செய்திடோம்
ஆயுதம் தாங்குவோம் அகந்தையை அடக்குவோம்
(அத்தனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விருத்தம்

கட்டுண்டார் தமையனென்று கேட்டிடவும் காலமாச்சோ
அட்டதிசை அதிர நாங்கள் ஆக்ரோசமாய் ஓடிச் சென்றே
திட்டமாய்த் தீயர்களைத் தப்பித்தே விட்டிடாக் கை
கட்டியோர் கையதனை வெட்டி யெறிந் தார்ப்பரிப்போம்

*(வெடியரசனையும் கற்பித்தானையும் மீட்கும் பொருட்டு ஏரிலங்குருவன் விளங்குதேவன் போர் வீர கண்டன் ஆகியோர் புறப்படுகிறார்கள்)*

மெட்டு (மன்னவன் என்று எண்ணிவிட்டோமோ) மாவீரன் சங்கிலியன்

### ஏரிலங்குருவன் - தரு

நீரலை தனில் பேரணி செல்வோம் - நிமிர்ந்தெழுந்தே
நேரதாகவே போரதில் வெல்வோம்
ஆரமாமாணி தன்னைக் காத்திட
அரசர் அண்ணரை சணத்தில் மீட்டிட
கோர யுத்தமே புரிந்து ரத்தமே
சோரி பெருகினும் உகப்பாய் ஏற்றிட

(நீரலை தனில்)

### விளங்குதேவன் - தரு

சோழமா படை யோடு மோதிடுவோம் - வீரமே பொங்க
ஈழமாமணி நாடு காத்திடுவோம்
வேளம் நிகர்த்திடு வெடிமா அரசரை
சூழ படை கொண்டு கற்பித்தானையும்
கோழைத் தனமதாய் விலங்கை இட்டனர்
வேளையே தப்பாது மீட்போமே

(நீரலை தனில்)

### போர்வீரகண்டன்- தரு

வெற்றி முழக்கமே செய்திடு சோழ - சேனைகளை
முற்றுந் தொடர்பற முன்னணி புகுந்தே
செற்றவர் சிரம் அற்று வீழ்ந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றறுத்துமே பாயும் ரத்தமே
விற்றிறனோடு வீசும் வேற்படை
சற்றும் அஞ்சிடா சமரே ஆடுமே

(வெற்றி முழக்கம்)

*மீகாமன் - விருத்தம்*

ஏரிலங்குருவனோடு விளங்கு தேவன்
போர்வீர கண்டனுடன் பொருத வந்தே
பாரிலங்கு பலம் படைத்த சோழருடை
ஓர் அக்கு றோணி சேனை துவம்சம் செய்தார்
சூரியன் மேற் திசையிறங்கி இருள்வதற்குள்
சுற்றி வளைத் திட்டமதாய் விலங்கிடுவோம்
கூரிலங்கு கணை விடுத்தே அவருடலின்
குருதியது பெருகிடவே போர் செய்குவோமே

மெட்டு (கூனற்ற வளைசங்க) தேவசகாயம்பிள்ளை

*ஏரிலங்குருவன் - தரு*

ஆழியெனவே கடற் படைகொண் டெதிரே வந்தாய்
அடல்பேர் வெடியரசர் அண்ணரை விலங்கிட்டாய்
ஊழிப் பேரலையாக உந்தி உனது கப்பல்
நாளிதனில் உடைப்பேன் நான்சபதம் முடிப்பேன்

*விளங்குதேவன் - தரு*

தம்பியர் நால்வரடா தாவி எழுவாரடா
எமது வலியறியா எமதண்ணர் சிறையிட்டாய்
வம்பனே உம்பனே வடுகனே எடு வாளை
வருவினை அறியடா வகுத்திட்ட பொறியடா

*போர்வீர கண்டன் - தரு*

என்ன கெறுவமடா எம தண்ணர் சிறையிட
என்னுடன் பொருதடா உன் ரத்தம் பீறிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தூதுவன் - வசனம்

மாமன்னா கண்ணகை அம்மனின் காற்
சிலம்பில் பதித்திட வெடியரசனிடம்
இருக்கும் நாகரெத்தினத்தை எடுப்பதற்காகச்
சேனாதிபதி மீகாமன் தலைமையில் சென்ற சோழ
- கடற்படையின் ஓர்
அக்குறோணி சேனைகளை வெடியரசனின் தம்பிமார்
- அழித்துவிட்டார்களாம்.

### சோழ மன்னன் - களிநெடில்

கருங்கடலும் காற்றலையும் கட்டுக்குள் ஒடுங்கியதோ
கனலதுவும் பனியதாச்சோ
கண்டங்கள் கனன்றிடக்
கதித்தெழு சோழனின்
கட்டளையும் தட்டலாச்சோ

செருவென்ற சோழனென் கெறுவமும் போச்சுதோ
செகம் பழிக்க இழிவாச்சோ
சேர பாண்டியர் மயங்கச்
சிம்மாசனத் தமரும்
சீரதும் சிறுமையாச்சோ

உருப்பெரும் சோழர் சேனை அக்குறோணி உதிர்ந்திடவே
உரம் படைத் திட்டவன் யார்
உலகெங்கும் பலங்கொண்ட
உயர் இமய உச்சியில்
உற்ற கொடி ஏற்றி வைத்தோம்

ஒருவாக்கு ஈந்தேனே திருவாய்க்காய் காப்பேனே
ஒப்பரிய நாகமணி
ஒப்புடன் தந்திடாது
உவர் கடல் நீரதனில்
உதிரந்தான் பெருகிடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிந்து**

போர் புரியத் துணிந்தாரோ - ஈழரவரும்
நேர் பொருதத் துணிந்தாரோ
ஓர் பத்தக்குறோணி சேனை
ஒன்றும் மிஞ்சா வெஞ்சமரே
கார்கடல் மீதினில் கதித்தெழு சோழமா
பேர்வலி படைகளைத் தீரமாய் ஒழித்திட
(போர்புரியத் துணிந்தாரோ)

**சிந்து**

ஆட்ட மா திசையதிர ஆரணியம் தானுதிர
திட்டமாய்ப் படை நடத்தும் தீர சோழ சேனாபதி
மீகாமன் ஜெயமடைய - பரந்த இந்த
ஆகாயம் பூமியெல்லாம் - அடர்ந்த படை
இக்கானமே தானனுப்பி மிக்கபலம் பெற்றிடவே
அக்களிப் போடுயர் அலைகடல் தாவி
தக்கதோர் தருணமே செப்பினேன் விடையது
(போர்புரியத் துணிந்தாரோ)

***சோழ மன்னன் - சந்தத்தாழிசை***

மண்டலங்கள் கண்டுகெடி கொண்டுடன் பணிந்திடும்
பண்டு புகழ் பொங்கு சோழன் பவிசதுவும் போச்சுதோ
விண்டலங்கள் எங்கும் அடர் வீர சோழ படையணி
கொண்டு ஈழர் சிறைபடவே இன்று ஆணை செய்கிறேன்

***சோழ மன்னன் - வசனம்***

முழங்கட்டும் முரசங்கள், ஒலிக்கட்டும் பேரிகைகள், கூவிட சங்கநாதங்கள், கொக்கரித்திடு வெடியரசன் படைகளை முழுதும் அழித்துவிட உத்தரவிடுகிறேன். உம் புறப்படட்டும் சோழ சைனியங்கள்.

மகாவீரன் மைத்துனர் வீரநாராயணர்க்கு இதோ எழுதுகிறேன் ஓலை - தூதுவரே நீர் அதி விரைவாகச் சென்று இந்த நிருபத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லிராணிக் கோட்டையிலிருக்கும் மைத்துனர் வீரநாராயணரிடம் சேர்ப்பாயாக.

## காட்சி – 18

**இடம்** : *நெடுந்தீவில் வெடியரசன் மாளிகை*

**பாத்திரங்கள்** : *நீலகேசி - தூதுவன்*

***(தமையனையும் தளபதியையும் மீட்கச் சென்ற சகோதரர்களும் சிறைப்பட்டதை அறிந்த நீலகேசி பெரும்துயர் அடைகிறாள்)***

மெட்டு (கொடுமையே கொடுமையே) விடுதலைப்பயணம்

***நீலகேசி - தரு***

காலந்தான் பகைத்ததே கலிகாலமாச்சுதோ
மாலவா - அந்தோ
நீலக் கடலில் நிலை கலங்கும் சோதர
கைவிலங்கை உடைத்திட ஓர்
வியூகம் அளித்திடுவாய்

அடல் பெரும் சோழமா படையின் திமிரடக்கல்
கூடாதோ - இப்போ
திடமார் மைத்துனர் நல் வீரநாராயணர்க்குத்
தீட்டுவேன் மடல் நான் திருப்பம் நிகழ்ந்திடவே

***நீலகேசி - வசனம்***

அந்தோ அண்ணர் அரசையும் தளபதியையும் மீட்கச் சென்ற மைத்துனர்களும் சிறைப்பட்டனரே இனி என் செய்வேன். இவர்களை மீட்டு சிறையிட்டவனின் செருக்கை அடக்கிட அட்டியின்றிச் சோதரர்கை கட்ட ஆணை விட்டவன் கைவெட்டியெறிந்திட்டிட நான் வீரநாராயணன் இல்லை கடல் ஏறிப் படகெடுப்பேன் - பகைவர் மீது உடன் தாவி உயிர் முடிப்பேன் - திமிரடக்கி எட்டுத்திசை பட்டுதிரப் பட்டவர்த்தனர் பதற கட்டும் உடைபடத் துட்டர் திகைபட விட்டுனு சக்கரம் போற் சுழன்றாடுவேன்.

(அடல் பொருத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு (சோழன் இளங்கிளி) மாவீரன் சங்கிலியன்

### *அல்லிராணி - தரு*

மான மறவர் குலத்தில் உதித்த பதியே - அந்த
ஈனப் பகைவர் பெரு சேனையுடையவராம்
துணையே இன்றி செயமே காணலாமோ

### *வீரநாராயணன்- தரு*

துணிந்தெழுந்தால் சமுத்திரம் சாண் அளவே - அந்த
அணிபெரும் சேனையைத் தனியனாய் எதிர் கொள்வேன்
அன்னமே என் கண்ணே விடையே தாராய்

### *அல்லிராணி- தரு*

யுத்தம் வெல்ல ரத்தத் திலகம் வைத்தேன் - உந்தன்
பத்தினி எந்தனின் கற்பினில் ஆணையிட்டேன்
அத்தானே என் அன்பே செயமே கொள்வீர்

### *அல்லிராணி - வசனம்*

நான் வைத்திட்ட இந்த ரத்தத் திலகமே தங்கள் உயிர் காக்கும் கலசமாகட்டும்.

நாடாளும் அரசன் உடன் சோதரர்கள்
நடுக் கடல் தனில் தவித்தாலும்
திடமதை இழக்கார் திட்டமாய் முரசு
கொட்டியே மீட்டிட வாரீர்

### *வீரநாராயணன் - களிநெடில்*

பாரண்ட முடி மன்னர் படி வந்து முறை செய்யும்
பண்டை புகழ் வெடியரசர்
பவிசதும் போச்சுதோ பரிகாச மாச்சுதோ
படை கொண்டு வந்தவர் யார்

ஈரண்ட பதினான்கு லோகங்கள் எங்கணும்
இருந்தவர் திரண்டெதிர்ப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடருறா இருதயம் படைத்த எம் அண்ணைரை
உம்பரவார் கட்டிடவும்

ஊராண்ட ஏரிலங் குருவனுடன் விளங்கு தேவன்
உற்ற போர் வீரகண்டன்
உறுதுணை சோதரரை உதிரமது சிந்திடவே
உம்பரவர் கட்டிடவும்

நேராண்ட வெடியரசர் நெடுந்தீவின் முடியரசர்
நெடுபடை தடுத்திடவே
நேரிட்ட வினை என்ன ஊர்விட்டு வந்தேன்
நெஞ்சகத் துணிவாதாமோ

**சிந்து**

அடல் பொருத வந்திட்டாரே - அலை கடந்து
இடர் பலவுந் தந்திட்டாரோ
திடத்துடன் வாள் கரத்தெடுத்தேன்
உடன் பகைவர் உயிர் முடிப்பேன்
படையெடுத் திடர்புரி வடுகரை விடுவேனோ
தடையுடைத் தண்ணர்கை வில்குடைத் தெறிவேனே
(அடல் பொருதல்ங்)

***வீரநாராயணன் - தரு***

வெற்றி அன்றேல் வீரமரணம் காண்பேன் - ஈது
முற்றிலும் சத்தியம் செற்றலர் பிடியுற்ற
கொற்றவனைச் சோதரரை மீட்பேன்

***வீரநாராயணன்- வசனம்***

சந்தனத்திலே குழைத்தெடுத்த உன் குங்குமக் கன்னத்திலே என் சிந்தை பொங்கிடும் வீரத்திலே இனி உடைபட்டுப் போகும் பகைவர் படை தடை விட்டுப் பாயும் தமிழர் படை வருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 19

**இடம்** : *அல்லிராணிக் கோட்டை*

**பாத்திரங்கள்** : *வீரநாராயணன் - அல்லிராணி - தூதுவன்*

***(தூதுவன் வீரநாராயணனிடம் நிருபத்தைக் கொடுக்கிறான்)***

***வீரநாராயணன் - கடிதவாசகம்***

ஆழிபோல் அன்பும் அறநெறிப் பண்பும்
அமைந்த நல் வீரநாரணர்க்கு
நீழ் விழி கலங்கி நீர்த்தாரை ஓட
நீலகேசி அண்ணி சொல் கேளீர்

பெருபடை கொண்டோன் பேராம் மீகாமன்
பொருவலி சோழன் தளபதியாம்
அருமணி நாக ரெத்தினம் பற்ற
அடல் மிகு போரதில் அண்ணர்

அரசர் துணையாக கற்பித்தான் இருந்தும்
அலைமேவு கப்பல் பாய் மரத்தில்
அவமதிப்பாகக் கட்டிடப் பட்டார்
அதுகண்டு அனுப்பினேன் நிருபம்

அறிந்துடன் கொதித்த ஏரிலங்குவன்
விளங்கு தேவனுடன் தம்பி
அஞ்சிடா நெஞ்சன் போர்வீரகண்டன்
அனைவரும் சிறையதே பட்டார்

மின்னல் விரைவதுவாய் என் வாளால் உன் சிரசை
உன்னியே வீழத்திடுவேன் உயிரை முடித்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மீகாமன் - சந்தத்தாளிசை*

அண்ணர் கையைப் பின்னிவிட்ட அடிமைத்தளையை உடைக்க
அக்குறோணி சேனைகளை அழித்துவிட்டார் ஈழரே
எண்ணிறந்த சோழர் படை எண்திசைகள் சுற்றியே
எமனை விஞ்ச ஏறும் அஞ்ச எகிறிக் கட்டி வருகுவீர்

# காட்சி – 20

**இடம்** : *தீவகம் - கடல் - கப்பல்*

**பாத்திரங்கள்** : *வீரநாராயணன் - மீகாமன் - சோழகடற்படையினர்*

***(வீரநாராயணன் சகோதரர்களை மீட்கப் புறப்படுகிறான்)***

மெட்டு (கடலை கடந்து செல்வேன்) இலங்கேஸ்வரன்

*வீரநாரயணன் - தரு*

கடலை பிளந்து செல்லுவேன் - கலமெடுத்துக்
கடலைப் பிளந்து செல்லுவேன்
திடத்தோ டெழுந்து சோழர் படைத்த தடை தகர்த்து
வடவர் கொடி விழுத்தி வைரமுடி கொழுத்தி
உடல்கள் துளைபடவே ஓங்கு கணை விடுத்து
அடலே விளைத்து எங்கள் அரசர் விலங்குடைப்பேன்

ஆறிலும் சாவு வரும் நூறிலும் சாவு வரும்
ஊறு நேர்ந்திடல் உயிர் வாழ்வில் இழிவு வரும்
ஏறெனவே எழுந்து எதிர்க்கும் சேனையெல்லாம்
கூறு கூறாக்கிப் பிடி நீறதாக்கி ஜெயிப்பேன்

சோழப் பெரும் படையை ஈழக்கடல்தனிலே
ஊழிப் பிரளயமாய் வேளத் திரளதுவாய்
கோளமது நடுங்க ஏழு கடல் கலங்க
சூழு பகை அழித்து நாளில் ஜெயமடைவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீரநாராயணன் - சந்தவிருத்தம்*

கவுரவர் படையதன் நடுவினில் புகுந்தமர்
ஆடிய அபிமன்னன் போல்
குவியலாய் வருசேனை குமிழதாய் நொருங்கிட
கூர்கணை விடுத்து நின்றே

புவனங்கள் ஈரேழு பதினான்கும் வியந்திட
ஓங்குமா வீரங் கொண்டே
துவம்சமே செய்திந்த சோழர் கடற்படை
எமன் புரம் அனுப்பி வைப்பேன்

*மீகாமன் - சுந்தவிருத்தம்*

இமயத்தின் சிகரத்தில் புலிக்கொடி பொறித்த எம்
இலங்கு சீர் சோழருடை
அமரரும் அஞ்சிடும் அடல் பெரும் படைகளை
அஞ்சிடாத் துணிவு கொண்டே
உமை அண்ணன் மாயவன் சக்கரச் சூழல் போல
உன்னியே தனியாய் நின்று
இமைப்பதற்குள் நீயும் முற்றொழித்தாய் இனி
நாம் தனிப் போரிடுவோம்

*மீகாமன் - வசனம்*

பாரதப் போரிலே அருச்சுனனின் காண்டீப வில்லிருந்து பாய்ந்திட பாணங்கள் போல் கணைவிடுத்து சோழ மகா சேனைகளை அரை நாளிகையில் சங்காரம் செய்துவிட்டார். இனி யுத்தம் நம் இருவருக்கும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீரநாராயணன் - வசனம்*

ஆம் அந்த யுத்தமே வெற்றியைத் தீர்மானிக்கட்டும்.

மெட்டு (திறனே மிகு மறத்தமிழ் மண்ணதில்) மாவீரன் சங்கிலியன்

*வீரநாரயணன் - சண்டைத் தரு*

அலையே எழு அறந்திகழ் நெடுந்தீவை
அடையலர் படை இடரே விளைப்பதோ
உலகெண்டிசை உற்றமா மன்னரும்
உகப்பாய் வணங்கிடும் வெடிமா அரசர் கை
கட்டி விட்ட உன் கை வெட்டி எறிவேனடா
விட்டு விட்டால் நானும் வீரநாரணனோ

*மீகாமன் - சண்டைத் தரு*

தண்டே கொண்டு நின்று சுழன்றிடும்
தளபதி என்முன் தரணி சாய்நிதிடும்
மண்டியிடு இளவலே இல்லையேல்
மண்டை பிளந்திரு துண்டாய் ஆக்குவேன்
அணியாம் நாகமணி அளித்து அடி பணிந்தால்
அட்டியின்று உன்னை விட்டிடுவேனே

*வீரநாரயணன் - சண்டைத் தரு*

வேலாயுதம் வீசிவிட்டேன் அது
விண்ணை அளந்திந்த மண்ணைப் பிளந்திடும்
நீலமேகன் மாலவன் மருமகன்
வேலவன் கை வேலெழுந்திட
கால தேவனையும் கடிதில் கலங்கடிக்கும்
கண்டம் கடந்துவிடும் கருமம் முடித்துவிடும்

*மீகாமன் - சண்டைத் தரு*

சூலாயுதம் சுழற்றி விட்டேன் அது
கத்தி தேவி கை பற்றும் ஆயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலே எதிர் வருகினும் பொடிபட
வீழத்தி வெற்றியே ஈட்டும் நொடியினில்
காலந்தவறா எமன் பாசக் கயிறதுவாய்
கப்பல் தனிலே உந்தன் கதை முடிப்பேனே

மெட்டு தமிழீழம் எங்கள் தாயகமே (முற்றுகையை முறியடிப்போம்)

***வீரநாரயணன் - மறு தரு***

அரிதான நாகமணி பற்ற வந்தாய்
அரசரின் கரமதில் விலங்கினைத் தந்தாய்
சிரசொடு உடலம் இரு கூறாய்ப் பிளந்திட
பிரமாஸ்த் திரமதைப் பிரயோகித்தேனடா

***மீகாமன் - மறு தரு***

அடுக்கடுக்காய்க் கணை விடுத்தேன்
ஆயிரம் பல்லாயிரம்
தடுத்து நீயும் தப்பி விட்டாய்
தயவு இனிக் காட்டிடேன்
எடுத்து வீட்டேன் சங்கரனார்
கொடுத்த பாசுபதாஸ்த்திரம்
விடுத்தேன் உந்தன் விதி முடித்து
விண்ணுலகம் சேரவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 21

*(மீகாமனை வீழ்த்திய வீரநாராயணன் தனது சகோதரர்களையும் மீட்டு வருவதற்குச் செல்ல குற்றுயிராய்க் கிடந்து மீகாமன் கண்ணகை அம்மனைக் கூவி அழைக்கிறார்)*

மெட்டு (ஆதியாய் வந்ததவா) வீடுதலைப்பயணம்

*மீகாமன் - தரு*

எண்ணாய் எழுத்துமாகி - உல
எண்திசை போற்றும் தாயே
அன்னையே கண்ணகையே - எந்தன்
அவலமே பாரய் அம்மா

ஆதியோ டந்தமில்லா - எல்லாம்
ஆக்கியே வைத்த தேவி
சோதியே சக்தி நீயே - எந்தன்
துயர் தீர்க்க வந்தருள்வாய்

உன் கால் சிலம்பினிற்கே - நாக
மணியை நான் தேடி வந்தேன்
என்னுயிர் தனை ஈவேன் - சோழன்
தன் சபதம் முடிப்பாய்

பாசு பதாஸ்த்திரம் பாய்ந்தே - உந்தன்
பக்தன் துடி துடிக்க
ஈஸ்வரியே கண்ணகா - வந்து
ஆசி தந் தருளுவாயே

*மீகாமன் - வசனம்*

அன்னையே கண்ணகைத் தாயே வீரநாரயணன் விடுத்திட்ட பாசு பதாஸ்த்திரம் தாங்கி எனதுயிர் பிரியப்போகிறது. இந்த உயிர் வாதையிலிருந்து விடுபட்டு உமது திருப்பாத கமலம் சேர்ந்திட ஆசியருள் வாயம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 22

### கண்ணகை அம்மன்

### *வரவு - சிந்துநடை*

பேரான கண்ணகையாள் - அந்தப்
பெருமாள் தங்கை பார்வதியாள்
ஊரான கைலையிலே - நின்று
உலக வளம் பார்க்க வாறேன்

காரான கடல் நதிகள் - குளம்
கதித்த வளம் மலை முகடம்
எரான நெல் விளையும் - நாட்டில்
ஏற்றமுறும் வாழ்வு வரும்

போரான தே நடக்க - அந்தப்
பூமாதேவி பாரம் குறைக்க
கூரான அம்பு தைத்து அங்கே
குழறுகின்றான் மீகாமனே

நீரான கடலில் நின்றே - பக்தன்
நெஞ்சுருகி அழைக்கின்றானே
நேராக அவன் முன் சென்றே - துயர்
நேர்ந்த விதம் கேட்டிடுவேன்

நேரான பக்தன் அவன் - தாயை
நெஞ்சார வேண்டி நின்றால்
பாரா முகமாய் அன்னை - நானும்
பார்க்க மனம் தாங்கிடுமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கண்ணகை அம்மன் மீகாமன் முன் காட்சியளித்தல்)

***கண்ணகை அம்மன் - சிந்துநடை***

ஊழ்வினை தான் வந்து உற்றதுவே - உந்தன்
உயிர் வாதையும் அதன் நியதியதே
வாழ்வும் வீழ்வும் சூழல் சக்கரமே - இந்த
நீழ்புவி தனில் எது நித்தியமே

***மீகாமன் - சிந்துநடை***

ஈனன் என்மேல் இரங்கி ஈஸ்வரியே வந்தீர்
ஊன தேகம் விடுத்தே உன் பாதச் சரண் தாரீர்
சேனையெல்லாம் இழந்து தனியனானேன் - இனி
வானுலகம் செல்ல வழி செய்வீர்

***கண்ணகை அம்மன் - சிந்துநடை***

அபயக் குரல் கேட்டு அன்னை வந்தேன் - மைந்தா
ஆறுதல் நான் அளிப்பேன் அல்லல் தீர்ப்பேன்
சபதம் முடித்திடவே ஆசி தாறேன் அந்தச்
சக்தியே கண்ணகை நான் சுபந் தருவேன்

***மீகாமன் - சிந்துநடை***

வீரநாராயணன் வீடுத்துவிட்ட - கொடும்
பாசுபதாஸ்த்திரத்தால் பதறுகின்றேன்
ஆரெனை ஆற்றிடுவார் அன்னையரே - இந்த
ஆபத்தில் மீண்டு எழு அருள் புரிவீர்

***கண்ணகை அம்மன் - சிந்துநடை***

சேயன் வருந்திடப் பார்த்திருக்க - எந்தத்
தாய் மனந்தான் அதைத் தாங்கிடுமோ
ஓய விடமாட்டேன் என் உடலை - இப்போ
உயிர் தந்து மீட்டிடுவேன் உறுதி கொள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(வரம் ஈந்த கண்ணகை அம்மன் போக வெடியரசன் வீரநாரா யணன் ஏரிலங்குருவன் விளங்குதேவன் போர் வீரகண்டன் வருதல். மீகாமன் இறவாதிருத்தல் கண்டு திகைப்படைதல்)*

*வீரநாரயணன் - சந்த விருத்தம்*

பாசு பதாஸ்த்திரப் பாணமே பட்டுயிர்
பட்டவன் பிழைத்ததென்ன
தேசுடனே மிக்கத் தைரியமாய் தலை
நிமிர்ந்துமே நிற்பதென்ன

*வெடியரசன் - சந்த விருத்தம்*

தேவர்கள் முனிவர்கள் ரிஷிகள் மா ஞானிகள்
தவசிகள் செயலிதுவோ
மூவரும் மூர்த்திகள் முன் தோன்றி மீகாமன்
சீவன் ஈந்திட்டனரே

*மீகாமன் - சந்த விருத்தம்*

பாருலகம் கார்க்கும் பார்வதித் தாயவள்
பக்தன் என் துயர் துடைக்க
வீரமா காளியின் அம்சமாம் கண்ணகை
வடிவில் வந்தருள் செய்தாள்
திரிசூலி அவள் திருப் பாதச் சிலம்பதன்
பரல் ஒளிர் நாகமணி
பரிவுடன் வழங்கிடில் பார் உமைப் போற்றிடும்
பத்தினிக் தெய்வம் ஏற்கும்

*மீகாமன் - வசனம்*

எல்லாம் அந்தப்பத்தினித் தெய்வம் காற்சிலம்பின் பரல் ஒளிர நாம் பரம்பரை பரம்பரையாகப் பேணி பாதுகாத்துவரும் அந்த அருமணியாம் நாகரெத்தினத்தினை மனமுவந்து கொடுத்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீரநாராயணன் - வசனம்*

அந்தப் பத்தினித் தெய்வம் கண்ணகை அம்மனுக்கே அந்த நாகரெத்தினத்தை அர்ப்பணம் செய்வோம். மீகாமன் எனது காலின் கீழாய் வந்து அந்தத் தூய நாகமணியை எடுத்திடுவீர்.

அனைவரும் இணைந்து

***சிந்துநடை***

பத்தினித் தெய்வ மகள் கண்ணகையர் காலின் - எழில்
பொற்சிலம்பின் பரலதுவாய் நாகமணி வாய்த்த
முத்தான காதை கூத்தாய் நிகழ்த்தி நாங்கள் நின்றோம் - தெய்வ
சித்தமது நிறைவுறவே மாமகிழ்வு கொண்டோம்

***சிந்துநடை***

நெடுந்தீவில் அரசமைத்து ஆண்ட தமிழ் வேந்தன் - அந்த
வெடியரசன் காதை தந்தோம் கூத்தும் இசையாயும்
உடுக்கடித்துக் கரகமுடன் காவடிகள் ஆட - வண்ண
அடுக்குடையில் காத்தான் கூத்தும் நாட்டுக் கூத்தும் ஆட

***சிந்துநடை***

வணக்கம் வணக்கம் சொன்னோம் வந்த சபையோர்க்கு - நாங்கள்
வந்தனங்கள் தந்து நின்றோம் வந்தவர்க்கு எல்லாம்.

## நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்டாரவன்னியன்

## நாட்டுக்கூத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியன்
## (நாட்டுக்கூத்து)

### காப்பு விருத்தம்

சீரிலங்கும் ஈழமணித் திருநாடெங்கள்
தாயகமே தாளடியைப் பணிந்து போற்றி
பாரிலங்கச் சக்தி வளம் பல அருளும்
பகலவன் தன் மகிமையதை மனதிலேற்றி
போரிலங்கும் பண்டார வன்னியன் தன்
புகழ் காதை பைந்தமிழால் கூத்தாய்ப் பாட
தேரிலங்கும் செம்மொழியே தமிழே! தாயே!
தேசுலவும் நின் பாதம் காப்புத்தானே

### தோடயம்

திங்கள் பிறை முடி சூடும் இறை
கங்கை மறை சடை ஆடும் பொறை
சங்கத் தமிழ் மூன்றும் சங்கமித்தே
எங்கும் பரந்தருள் நிறைகவே.

### தோடயம்

விறல் மிகு வன்னி மண் ஆண்ட வேந்தன்
மறத் தமிழ்ப் பண்டார வன்னி மன்னன்
நிறையர சோச்சிய காதை பாட
இறையே எமக்கருள் புரிகவே

கோன் முறை தவறிடாக் கொற்றம் ஓங்க
வான் புகழ் வள்ளுவன் வைத்த வழி
மேன்மைகொள் தாய்மொழியான தமிழ்
தேனெனத் தேசமே இனி துறவே

கலைமகள் அருள் பொழி அறுபத்து நான்கு
கலைகளில் முகிழ்ந்தெழு கூத்திசையில்
தலை சிறந்திடு பண்டார மன்னன்
நிலை பெறு புகழ் சூடிப் பாடிடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடம் : - வீதி - அரண்மனை**

**பாத்திரங்கள் :- பண்டாரவன்னியன் - கயிலாய வன்னியன் - பெரிய மெயினார் - புலவர் புவியழகன் இளவரசி நல்ல நாச்சி - கட்டியகாரர்**

**கட்டியகாரர் வரவு**

**பல்லவி**

கட்டியகாரரும் வந்தோம் - அரசர் வாறார்
கட்டியந்தான் கூறிட வந்தோம்

**அனுபல்லவி**

இட்ட தெய்வம் வற்றாப்பளை அம்மன் பதம் தான் வணங்கி
பட்டங் கொண்ட பண்டார மா வன்னி மன்னன் பவனி வாறார்.
(கட்டியகாரரும்)

**சரணம்**

கரகமுடன் காவடிகளும் - நங்கையர் கூடி
பரதமுடன் பாவணிகளும் - நர்த்தனமுடன்
தோரணங்கள் மாவிலைகள் தென்னங் குருத்தோடு வண்ணத்
தேரினில் வருமரசர் தேசு காணத் திரண்டு வாரீர்
(கட்டிய காரரும்)

**சரணம்**

நீள நெடுங் கானகங்கள் சூழ் - வன்னி மா தேசம்
ஆளும் விறல் பண்டார வேந்தன் - அவனியெங்கும்
போற்றப் புது ஆற்றலுடன் நாற்றிசைப் புலவர் கவி
சாற்றிட அவையோர் அன்பை ஏற்றிடவே தோற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டியகாரர் வசனம்

இராஜாதி இராஜ இராஜ மார்த்தாண்ட இராஜ கெம்பீர இராஜ குலதிலக வன்னி நாடாளும் பண்டார வன்னி மா மன்னர் மந்திரி தளபதி படைவீரர் புடை சூழ கொலுவுக்கு வருகிறார். வெகு பராக் சமூகம் எச்சரிக்கை.

### கயிலாய வன்னியன் - வரவு - தரு

விறலுற்றிடு புலியாய் வலியாய் எழுந்திடும்
திறலுற்றிடு வன்னி வளமாய்த் திகழ்ந்திடும்
திறை பெற்றிடு துறையுற்றிடு தறை பற்றிடு நிறைவுற்றிடு
அறனுற்றிடு மறமுற்றிடு அமைச்சனும் நானே

கதிர் தந்திடு மழையால் களனி நிறைந்திட
புதிர் தந்திடு செந்நெல் விளைந்து செழித்திட
நதி பொங்கிட நிதி தங்கிட சதிர் கொஞ்சிடப் புது வஞ்சியர்
எதிர் வந்திட மதி மந்திரி அவையில் வந்தேனே

மடை பொங்கிடும் கடலாய் மலையாய் நிலை பெறு
திடங் கொண்டிடு வேங்கைப் பலமாய்த் துலங்கிட
இடிகொண்டெழு அடல் விண்டெழு முடிகொண்டிடு குடை நின்றெழு
விடை கொண்டிடு வேந்தன் முன் கடிதில் செல்வேனே.

### பெரிய மெயினார் வரவு - தரு

அண்டர்கள் அடி தொழப் பொடிபட
வென்ற பண்டாரன் வீர வேந்தனின்
எண்டிசை கொண்டெழு சேனைகள்
எகிறி எதிரியை விரட்டி அடித்திடும்
அண்டம் அதிரும் பகை துண்டு படவே வகை
கொண்ட பண்டார வேந்தன் தளபதி நானே

திடமே பெறு படையொடு பகை தன்னை
திட்டமாய் உடைத் தழித் தொழித்திட
அடலே பெறு அரசன் பண்டாரனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியில் தமிழ்ப் படை துணிவோடெழுந்திடும்
மடையே பொருதுங் கடல் இடியே முழங்கும் படை
விடையே கொடுக்கும் வேந்தன் இடமே செல்வேனே!

அரணே மிகு உரமுடை வன்னி நா
அடங்கலும் படை திடங்கள் ஓங்கிட
திரையே கடந் திடத் தரை வந்தடர்
தீர ஆங்கிலர் தூர விரட்டிட
அரிகள் நடுங்கிடவே கரிகள் ஒடுங்கிடவே
அரசன் அரியணை முன் துரிதமாய்ச் செல்வேன்.

**புலவர் புவியழகன் - வரவு - தரு**

இந்துமா கடலிலங்கும் சுந்தரத் தேசம் ஈழம்
செந்தமிழ் வாளும் வன்னி செழித்திட ஆளும் மன்னன்
வெந்திறல் பண்டார வன்னியன் சிந்தது பாடிடும் தென்னவன்
அந்தரர் வந்தடி தொட்டிட வந்தவர் துந்துமி கொட்டிட
சந்தக் கவி பொழிய சதகம் பொங்கி வழிய
சிந்தை இனித்திடச் சந்தனமும் சிந்திட வரும்
அந்தாதி பிரபந்தம் பதிகம் பாமாலை பாடும்
சுந்தரப் புலவன் புவியழகன் சபை வந்தேன்.

இறையனார் கொடுத்த தமிழ் அகத்தியன் வகுத்த தமிழ்
முச்சங்கம் வளர்த்த தமிழ் மூவேந்தர் துதித்த தமிழ்
ஐம்பெரும் காப்பியம் இலங்கிடக் கம்பனின் காவியம் துலங்கிட
வள்ளுவன் குறளது வழங்கிட ஔவையின் அறநெறி விளங்கிட
யாப்பிலக்கணங்கள் ஆசிரியப்பா வஞ்சிப்பா
கலிப்பா பரிபாடல்பா வெண்பா விருத்தப்பா
அமிழ்தே தென்பொதிகைத் தென்றல் தவழ்ந்திடு செந்
தமிழே தாயே உந்தன் தாளடி போற்றினேன்.

இயலிசை நாடகமாய் இலங்கும் முத்தமிழை ஏற்றி
கயல் புலி விற்கொடி கொண்டெழு வேந்தர்கள் தாளடிதனைப் போற்றி
தாரணி தனில் மூத்த மொழிகளுள் இறவாத மொழியென்று பெயர் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருடன் விளங்கிடும் செந்தமிழ்த் தேனுண்டு களித்திடா எவருண்டு
முடியில் தொல்காப்பியமும் அடியில் சிலம்பொலியும்
கொடியில் புறநானூறும் மடியில் எட்டுத் தொகையும்
வடிவில் வள்ளுவன் திருக் குறளின் அறிவு சூடி
நெடிய புகழ் கொண்ட செந்தமிழே தாயே போற்றி

**பண்டார வன்னியன் - வரவு - தரு**

பொருது மற் புயவலி பொங்கும் ஈழமே
புலவர்கள் புகழொலி ஓங்கும் நாளுமே
விரைவுறு செயவலி வேங்கை ஆளுமே
விடிகதிர் ஒளியென எங்கும் மீளுமே
நந்திக் கடலும் பொங்கும் வங்கக் கடலின் மிசை
சுந்தரஞ் சேர் வன்னி நாடாளுவேனே

மாவலி கானகம் சூழும் நாடிது
மறவர்கள் தோள்வலி ஓங்கும் ஏடிது
கூவிடும் கடலலை பொங்கும் பூமியே
குதித்தோடும் நதி மடு நீரின் மிகையிலே
கொற்றம் சிறந்திலங்க வெற்றி நிதந்துலங்க
கற்றோர் களித்திருக்கக் காசினி ஆள்வேன்

விரை வெறி வேலுடன் வீசு வாள்களும்
விடுதலை உணர்வெழும் வீறு நெஞ்சமும்
திரைகடல் அலையென வீரர் நிரையுற
விண்ணவர் மண்ணவர் வியந்து போற்றிட
விடியும் கதிரின் ஒளி விளங்கும் ரெத்தின முடி
கொடியும் குடையும் சூழக் கொலுவிற் செல்வேனே.

**அனு**

ஈழவன்னி இலங்க அரசாளுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கயிலாய வன்னியன் - சந்தவிருத்தம்**

கன்னலும் சென்னெலும் கதித்திடக் கனித்திடக்
களனிகள் செழித்திலங்க
பொன் விளை பூமியாம் வன்னிமா தேசமே
பொலிவுற ஒளி துலங்க.

**பெரிய மெயினார் - சந்த விருத்தம்**

கண்ணை நிகர்த்திந்த மண்தனைக் காத்திடும்
காவலனே நின்தன் வெண்கொற்றக் குடை ஓங்க
வேல் ஓங்க வாள் ஓங்க
வெற்றிகள் நிதம் ஓங்கவே

**பண்டார வன்னியன் - தரு**

நன்னெறி சொல்லும் ஆலயம் - நாட்டின்
இதயமாம் அதில் உதயமாம்
அன்புதான் ஈசன் மறைவழி - அதில்
நிறைவுண்டோ அன்றிக் குறைவுண்டோ?

**கயிலாயவன்னியன் - தரு**

கோணேஸ்வரம் முன்னேஸ்வரம் - திருக்
கேதீஸ்வரம் தான் தோன்றிய
ஈஸ்வரம் நகுலேஸ்வரம் - சிறந்
தோங்குதே அறம் தாங்குதே

**பண்டார வன்னியன் - மறுதரு**

தளபதியே தம்பியரே பெரிய மெயினார் பகைவர்
களத்தினில் நம் படை பொருதின் செயம் திடமோ புகல்வீர்!

**பெரிய மெயினர் - மறு தரு**

வேளப்படை வேற்படையும் வாட் படை கொள் வன்னி
சூழ்ந்து வரும் எதிரிகளை மீள வொண்ணா முடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்டார வன்னியன் - வசனம்**

எமது வன்னி நாட்டின் மந்திரி தளபதிகளாய் அமைந்த என் உயிர்ச் சோதரர்களே எமது தேச வளங்கள், ஆலய அறங்கள், பலங்கள் யாவற்றையும் கேட்டு மகிழ்வுற்றேன்....ஆ...

**பண்டார வன்னியன் - மறு தரு**

புன்னகை பொலிந்திலங்கும் புலவரே புவியழகா வாரும் - எங்கள்
அன்பு மிகும் தங்கை இள அரசி நல்ல நாச்சியர்க்கு நீரும் - நல்ல
இன்தமிழ் இலக்கியங்கள் இனிதுறவே பயிலுவிப்பீர் நாளும்

**புவியழகன் - தரு**

வேங்கை நிகர் வேந்தரே வெல்க நின்தன் கொற்றம் என்றும்
வாழ்க - அந்த
திங்கள் பிறை சூடும் இறை கங்கை கொண்ட சங்கரனார் அருளால் -
மூன்று
சங்கமதில் தந்த தமிழ் சாற்றுவேன் நின் தங்கையர்க்கு இனிதாய்

**பண்டார வன்னியன் - மறுதரு**

பாச நல் தங்கையே செந்தமிழினில் - உயர்
பாடங்கள் கற்றிடவே நேர்த்தியாய்
தேசமே போற்றும் கவி வாணரை - நானும்
தேர்ந்தேனே ஏற்றிடுவாய் சேர்த்தியாய்

**இளவரசி நல்ல நாச்சி - தரு**

கன்றுதான் அழைக்கும் குரல் கேட்கவே உள்ளம்
கசிந்துமே உருகி ஓடும் பசுபோலே
அன்னையாய் வளர்த்த உங்கள் சொல்லுக்கே - நானும்
அமைவேனே மழலை கொள்ளும் மகிழ்போலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இளவரசி - வசனம்

அண்ணா தங்கள் எண்ணப்படி என்னால் ஆனபடி இப்புலவரிடம் கல்வி கலைகளைப் பயின்று வருகிறேன்

## காட்சி - 01

**இடம் :- நந்தவனம்**
**பாத்திரங்கள் :- இளவரசி நல்ல நாச்சி - தோழிகள் - புலவர் புவியழகன்**

### இளவரசி - தரு

ஈழமாம் எங்கள் நாட்டினைக் காத்திடும்
இறைவன் பதம் தொழுவோம் - எம்மை
வாழ வைத்திடும் வற்றாப் பளை அம்மன்
தாளடி போற்றிடுவோம்

### தோழி - தரு

சக்தியின் அவதாரமாய் வந்தவள்
முத்தியைத் தந்திடுவாள் - அந்த
பத்தினித் தெய்வம் கண்ணகை அம்மனின்
பாதம் பணிந்திடுவோம்

### இளவரசி - மறுதரு

தென்றலில் தவழ்ந்து தேன் சிந்திடும் மலரில்
வண்டு பண் பாடிடுதே!
அன்பாய் இணைந்து செல்லும் அன்றில் பறவைகளில்
பொன் வண்ணம் மின்னிடுதே!

### தோழி - தரு

கோடி சூரிய பிர காசமே ஜொலிக்கும்
குல மங்கை இளவரசி
சோடு சோடாய் அங்கே மாடப் புறாவினம்
சொக்கியே நிக்குதம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இளவரசி - தரு

தரளவெண் மணி ஒளிர் அணி முத்து மாலை
தையலே கை வீசி வா
சரசரத்திடும் எழில் அருவியிலே ஒரு
சந்திர பிம்பம் பாரீர்!

### தோழி - தரு

வான்மழை கண்டெழில் கான் மயிலாடுதே
வசந்தம் குலாவிடுதே
தேன்மொழி மீன்விழி தேசு கண்டே வையம்
தேவி உமை நாடிடுதே!

### இளவரசி - தரு

புள்ளிமான் கலையொடு துள்ளியே ஓடும்
பொன் வண்ண மான் கூட்டங்கள்
அள்ளியே அணைத்திடத் துள்ளியே செல்வோம்
அரிவையே அன்பாய் வாரீர்!

### தோழி - தரு

கிளியொடு அளிகளும் களிகொண்டு பாடுதே
கிளையெங்கும் தாவிடுதே
மயிலொடு குயில்களும் மகிழ்ந்தொன்று கூடுதே
மனது மயங்கிடுதே!

### இளவரசி - தரு

கலையெழில் நிலவொளி கனிமலர்ச் சோலையில்
கவிந்திங்கே கவர்ந்திடுதே!
அலைபுரள தோகையில் ஆடிடும் மயில்கள்
அருகினில் வந்திடாதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தோழி - தரு

புலரும் நிலவின் எழில் வரவின் அழகில் மகிழ்
பூத்திடும் அல்லி பாரீர்!
நலமெலாம் இலங்கிட நிலமகள் குளிர்ந்தே
நயனங்கள் புரியுதம்மா!

## புவியழகன் வருகை

### இளவரசி வசனம்:

வாருங்கள் புலவரே.... பாடத்தை ஆரம்பிக்கலாமே

### புவியழகன் - வசனம்

அப்படியே ஆகட்டும் இளவரசி

### புவியழகன் - கலித்துறை

அறம் பொருள் இன்பம் முப்பாலும்
குறள் நெறி சொல் எப்போதும்
ஐம்பெரும் காப்பியம் உலகின் அருமை
கம்பனின் காவியம் தமிழின் பெருமை
வேதியர் சொல்லினுக்கோர் மழையே
நீதி மன்னர் நெறியினுக்கோர் மழையே
மாதர் கற்பின் மகிமைக்கோர் மழையே
மாதம் மூன்று மழை பொழிந்திடுமே

### இளவரசி - வசனம்

புலவரே கவிதை புனையும் யாப்பிலக்கணம் எதுவென்று நான் அறியலாமா.

### புவியழகன் - தரு

வெண்பா கலிப்பா ஆசிரியப்பா - பரி
பாடல் பா விருத்தப்பா வஞ்சிப்பா
பதிகம் பத்துப் பாடல் பாமாலை - புகழ்
சதகம் நூறு பாக்கள் தொகுதியாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளவரசி - வசனம்**

புலவரே கவிகள் எத்தனை வகைப்படுவர் - அவர்களை எப்படி அழைப்பார்கள்?

**புவியழகன் - தரு**

நால்வகைக் கவி வித்தாரக் கவி - சித்திரக்
கவி ஆசு கவி மதுர கவிகளாம்
அந்தாதி முதற் செய்யுள் அந்தம் - அதன்
ஆதியாய் வரு பிரபந்தம்

**புவியழகன் - வசனம்**

இளவரசி இன்று இத்துடன் பாடத்தை நிறுத்தி நாளை காலை மீண்டும் ஆரம்பிக்கலாம்.

**இளவரசி வசனம்**

அப்படியே ஆகட்டும் புலவரே!

## காட்சி - 02

**இடம் :- வீதி - அரண்மனை**
**பாத்திரங்கள் :- காக்கைவன்னியன் -**

**காக்கை வன்னியன் - வரவு - தரு**

வன்னி மண்ணிலோர் தன்னிறைவுறு கொற்றவன் - இளம்
கன்னியர் மனம் என்னிறைவுறப் பெற்றவன் - நானும்
மருத நிலக் கரிக் கட்டு மூலையின் மன்னவன் - உயர்
மரகதம் மணி மாலை அணி காக்கை வன்னியன்

ஆடு புலியதன் ஆட்டம் தொடங்கியே விட்டேனே - அந்த
ஆங்கிலேயரால் அமைப்பேன் ஆகாயக் கோட்டையை - வள
நீடு வயல் யானைத் தந்தம் உப்பு கொள் வன்னியே - புகழ்
நாடு நகர் இந்த நாளில் எனதர சாகிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீசனாகவே நேரினும் நிலை மாறினும் - வன்னித்
தேசம் முழுவதும் ஆளவே வழி காணவே - என்ன
நாசம் நிகழினும் நரியின் யுக்தியை விஞ்சவே - எந்தன்
ஆசையது நிறைவேறவே வகை செய்யவே

**அதிகாரி - சந்தத்தாழிசை**

கரி பரிகள் திரளுகரிக் கட்டு மூலை மன்னவா
அரிய உந்தன் தேசவளம் துரிதமுடன் ஓங்கவே
நரியின் யுக்தி மெத்து திகழ் தீர காக்கை வன்னியா
வருவினைகள் நீங்கி நிலம் நலம் விளங்க வாழ்கவே

**காக்கை வன்னியன் - தரு**

மாலை மார்பணி மந்திரியே இந்த
மாநகர் வளமானது கூறீர்
ஆலயம் திகழ் அறநெறி புகழ் கல்விச்
சாலைகள் அறிவுப் பசியினைத் தீர்க்குதா?

**அதிகாரி - தரு**

கன்னல் கானமும் கதித்திடு செந்நெல்லும்
கறுவா ஏலமும் களிறின் தந்தம் உப்பும்
உன்னருந் தேச வளங்கள் சொல்லி மாளா
உற்றதோர் துணை உமக்கில்லை அது குறை

**காக்கை வன்னியன் - தரு**

மன்னன் என்னை மணந்திட முன்வரும்
மாதர்கள் யாரும் விரும்புவோர் இல்லையே
கன்னியர் என்னைக் கண்டால் ஒளிக்கின்றார்
கலியாணம் வெறும் கனவது தானோ?

**அதிகாரி - தரு**

எங்கெங்கும் தேடி அலைந்து மெய்வாடிடா
துங்கனாம் வல்ல பண்டார வன்னியன்
தங்கையாள் நல்ல நாச்சியாளை மண
மங்கையாய் நல்ல சம்மந்தம் பேசுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 03

**இடம் :- வீதி - அரண்மனை**

**பாத்திரங்கள் :- அதிகாறி - பண்டார வன்னியன்**

**அதிகாறி - தரு**

காக்கை வன்னியரின் கருமத்தை வெல்லவே
செல்லுவேன் - எந்தன்
வார்த்தையைக் காத்திட வளமான தமிழ்
கொண்டு சொல்லுவேன்.

அரசர்கள் பலமணம் புரிவர் இவர் ஒரு
புதிராவார் - யாரும்
ஒருமனப் பட்டுமே திருமணம் செய்திட
மாட்டாரோ

வல்லவன் பம்பரம் மணலிலும் சுழன்றிடல்
கூடுமே - அந்தத்
தொல்லவர் சொல்லதன் சூட்சுமத்தை
யாரும் அறிவரோ

**(பண்டாரவன்னியனைச் சந்தித்ததும்)**

**அதிகாறி - தரு**

வீரத்தின் விளை நிலமாம் வன்னி மண் - ஈன்ற
அரசரே அடியில் வைத்தேன் சிரமதே
கரிக்கட்டின் மன்னன் காக்கை வன்னியன் - அவர்
அருதிறல் அதிகாறி நான் வந்தனம்

**பண்டாரவன்னியன் - தரு**

மதிமிகும் அதிகாறியே வரவேற்றேன் - ஏதும்
புதிருண்டோ புதுமையாய் உன் வரவுண்டே
அதிசுறுக் காக நானும் அறியவே - நீரும்
அறிக்கையே செய்வீர் நானும் புரியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிகாரி - தரு**

புரியவே புகலுகின்றேன் புரவலா - உங்கள்
பிரிய நல் தங்கையரைத் திருமணம்
புரியவே விருப்பமுற்றார் மணமகன் - மாரன்
கரிக்கட்டு மன்னன் காக்கை வன்னியன்

**பண்டாரவன்னியன் - தரு**

திருமணம் தங்கையாளின் விருப்பமே - அதில்
மருளென்றால் நேரும் புதுத் திருப்பமே
தருணமே போய் வருவீர் இக்கணம் - நானும்
தக்கதோர் பதில் வரைவேன் யுக்தியாய்

## காட்சி - 04

**இடம் :- காக்கைவன்னியன் மாளிகை**
**பாத்திரங்கள் :- காக்கைவன்னியன் - அதிகாரி**

**காக்கைவன்னியன் - தரு**

சாணக்கியனை விஞ்சும் சாதுர்யனே
சாகசப் பேச்சினில் சூதனனே
மணமகள் நம்வசப் பட்டிட்டாளோ
மன்னவன் ஒப்புதல் தந்திட்டானோ

**அதிகாரி - தரு**

பலமுறை முயன்றேன் நான் பயனேயில்லை
பண்டாரவன்னியன் மசியவில்லை
நிலவுமுக இளவரசியாளின்
விருப்பமின்றித் திருமணம் நிகழாதென்றான்.

**காக்கைவன்னியன் - தரு**

இச்சை கொண்டேன் அவள் இசையவில்லை
இச் செகந் தனிலினி இருந்தும் என்ன
உச்சியே விட்டானே பண்டாரன்தான்
கச்சிதமாய் வெல்ல சொல்வீர் யுக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிகாரி - தரு**

வழியொன்று வளுத்துவேன் வாட்டம் வேண்டாம்
இளவரசி முன்னால் செல்வீர் நேராய்
விழியாலே காதலின் மொழி பேசியே
வீழ்த்துவீர் வலை தன்னில் நாச்சியாரை

# காட்சி - 05

**இடம் :- நந்தவனம்**
**பாத்திரங்கள் :- இளவரசி - தோழிகள் - புவியழகன் - காக்கை வன்னியன் - பண்டார வன்னியன்**

**இளவரசி - தரு**

கொஞ்சு வண்ணம் விஞ்சும் எழில் கோதையே வாராய் - அந்த
அஞ்சுகத்தின் பிஞ்சுமொழி கெஞ்சுதே பாராய்

**தோழி - தரு**

காலை இளங் கதிர் வரவில் மலரும் தாமரை - இங்கே
சோலை எழில் குயில் மொழியில் மயங்குதே மனம்

**தோழி - தரு**

அல்லிப் பூவும் ஏங்குதே வான் வெண்மதிக்காக - உங்கள்
அல்லி விழி கண்டே கயல் நாணுதே அம்மா

**இளவரசி - தரு**

வானவில்லில் ஏழு வண்ணம் தோணுதே பாராய் - இங்கே
கானமயில் தோகை விரித் தாடுதே ஜோராய்

**தோழி - தரு**

வெள்ளி நதி தன்னில் அன்னம் ஜோடி சேருதே - அங்கே
துள்ளி ஓடும் வெள்ளி மீன்கள் தூரம் ஓடுதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோழி - தரு**

பொன்னின் வண்ணம் பொலிந்திலங்கும் பூவையே தேவி - அங்கே
அன்னம் உந்தன் நடையழகைக் கண்டு நாணுதே!

**இளவரசி - தரு**

வான் பறவைக் கூட்டம் பூவின் காவில் தாவுதே - பூவின்
தேன் சுவைத்தே மெய் மறந்து வண்டு பாடுதே!

**தோழி தரு**

நிரையில் ஓடும் மரை மான் புள்ளி இலங்கக் காணுதே - அந்த
அருவிக்கரை வெண்ணுரையில் குமுழும் தோணுதே!

**தோழி - தரு**

கோடிச் சந்ர பிம்பம் திகழ் ராஜகுமாரி - உம்மைச்
சோடி சேரும் வீரன் எந்த ராஜகுமாரன்

**புவியழகன் - வசனம்**

வணக்கம் இளவரசி, பாடத்தை ஆரம்பிக்கலாமா

**இளவரசி - கொச்சகம்**

மாசில் மலர்ப் பூங்காவதனில் மதனும் ரதியும் இணைந்தே வந்து
பேசில் கோடி சுகந்தருமே பேதம் ஏதும் இல்லையன்றோ
ஆசி தந்தே அண்ணர் எம்மை அணைத்திடுவார் அன்பே என்னும்
பாசமுடன் கலை பயில்வேன் அரசியென்றே அழைத்திடாதீர்

**இளவரசி - தரு**

ஞான குருவே நீரெனக்குத் துணையே - என்னைப்
பொன்னே புதுமலரே கண்ணே என்றழைத்திடா
ஏனோ அரசி என்றழைக்கின்றீரே!

**புவியழகன் - கொச்சகம்**

வானில் எழுந்தே பறந்தபோதும் கானம் இசைத்தே கவர்ந்த போதும்
அன்றில் அன்னம் ஆகிடுமோ வண்ணம் என்றும் மாறிடுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாள் மன்னன் மகளைப் புலவன் மணந்தால் உலகம்
ஏற்றிடுமோ
மின்மினிதான் வெண்ணிலாவே என்றால் ஞாலம் தூற்றிடாதோ

**புவியழகன் - தரு**

ஏந்திழையே ஏந்தல் மகளே நீயே - இந்த
ஏழைப் புலவன் என்னை ஏனோ விரும்புகிறாய்?
இந்தரையில் சந்திரன்தான் வருமோ?

**இளவரசி - தரு**

கம்பன் மைந்தன் அம்பிகாபதியே - அரசி
அமராவதியும் அன்று காதலித்தாளே அந்த
அமர காவியம் உலகில் அழியாப் புகழே

**புவியழகன் - தரு**

காதல் தனற்காய் கத்திக்கே இரையான - அந்த
மதிமிகு கவி அம்பிகாபதி நிலையேதான்
காதல் இலையேல் சாதலையும் நான் ஏற்பேன்

**இளவரசி தரு**

ஆரா அமுதே அழகுத் தமிழே வாராய் - அந்த
பாரதி கவிமழை பொழி எழில் செந்தமிழ்ப்
பாவலனே பதியே காதல் தாராய்

**புவியழகன் - தரு**

மின்னல் தன்னில் இடை எடுத்த மானே - உந்தன்
கன்னல் மொழி எழிலும் அன்ன நடை அழகும்
கண்டே அன்னம் நாணுதே செந்தேனே!

**இளவரசி - தரு**

வானும் நிலவும் கடலும் அலையும் கதிரும் - ஒளியும்
தேனும் சுவையும் என்றும் பிரிந்திடா அன்றில்போல்
என்றும் நாமே இணைந்திருப்போம் அன்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புவியழகன் - தரு

மன்னன் மகளே மதுரமொழியே எழிலே - வண்ண
மலரும் மணமும் போல மகிழ்ந்தொன்று கூடுவோம்
பொன்னே பூவே பொங்கும் கதிரே கண்ணே!

### புவியழகன் இளவரசி - பாடல்

தெள்ளு தமிழ்ப் பாவில் பள்ளு படித்து நாம்
உள்ளம் இணைந்திடுவோம் - மகிழ்வுடன்
அள்ளி அணைத்திடுவோம்
தேமதுரத் தமிழ்த் தேவி என் பொன் மானே
தேவனோ செந்தமிழ்ப் பாவலன் கோமானே
நாமளே ரதி தேவியும் நீதானே
நாவலனே உந்தன் நாயகி நான் தானே
(தெள்ளு தமிழ்ப்)

### காக்கைவன்னியன் - விருத்தம்

வானுயரப் பறந்திட்டாலும் பருந்தது அன்னம்
ஆனதில்லை அவனியில் இள அரசியர்கள்
சேனை பரிவார மொடு கொடி குடைகொள்
கோனை மணம் புரிதல் அல்லால் குலத்தில் தாழ்ந்தே
மானமிழந் தேழைப் புலவனைக் காதல்
கானம் கலந் திசைத்திடவும் காலமாச்சோ
மேனி தழுவி மதிமயங்கும் மூடா உன்னை
நான் தடுத்தே எடுத்தேன் வாள் உன் சிரமே வீழ

### காக்கை வன்னியன் - தரு

முடவனும் கொம்புத் தேனுக்கு வீம்பில்
முடியுமோ முடிகொள் வேந்தன் என் முன்பு
கூழுக்குப் பாடும் குலமதில் வந்தோன்
மாளவோ வீணாய் குருதியே சிந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புவியழகன் - தரு**

புலவனை இகழ்ந்து புலம்பிடும் புல்லா
புரவலன் தனக்குத் தன் தேச மல்லால்
நிலவிடும் பெருமை வேறெங்கும் இல்லை
நிலைத்திடும் கவியின் வாய்மையே வெல்லும்.

**(காக்கை வன்னியனின் வாளைப் புவியழகன் தட்டி விட கீழே விழுந்த வாளை இளவரசி எடுத்து)**

**இளவரசி - வசனம்**

அத்தான் இதோ வாள்.

**புவியழகன் வசனம்**

அந்தக்கோழையின் வாள் எனக்குத் தேவையில்லை, இளவரசி இதோ என்னிடம் இருக்கிறது வீரவாள்.

**(புவியழகன் புலவர் வேடத்தைக் கலைத்துக் குமாரவன்னியனாகிறான்)**

**குமாரவன்னியன் - சந்தவிருத்தம்**

வேளந்தனை வீழ்த்தும் வேங்கை நிகர்த்தவன்
வீர குமார வன்னி
ஏழைப் புலவனென் றேளனம் செய்தனை
சூழும் பகை நடுங்க
ஈழம் எழுந்திடும் வேளையிலே வெற்றிச்
சங்கொலி முழக்கமிடும்
கோழையே உந்தனின் மார்பைப் பிளந்திட
வாளை நான் பாச்சுகிறேன்

**(காக்கைவன்னியன் ஓடி விடுகிறான். நடந்தவைகளை மறைந்திருந்து கவனித்த பண்டாரவன்னியன் வெளிப்பட்டு முன்வருகிறான்)**

**பண்டாரவன்னியன் - வசனம்**

குமாரவன்னியரே நீரா ஏழைப்புலவராக எனது தங்கைக்குக் கலை இலக்கியங்கள் கற்றுத் தந்தது..... ஆகா உமது வீரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெச்சினேன். இளவரசி வாழ்க்கைப்பட நீரே பொருத்தமானவர்.... வருகிற சுபமுகூர்த்தத்தில் உங்கள் இருவரின் திருமணத்தையும் நிறைவேற்றி வைக்கிறேன்.

## காட்சி - 06

**இடம் :- வீதி - கோட்டை அரண்மனை**

**பாத்திரங்கள் :- தேசாதிபதி பிரட்றிக்நோர்த் - ஆங்கில மந்திரி - ஆங்கில சேனாதிபதி - தூதுவன்**

**ஆங்கிலேய கட்டியகாரர் - வரவு - தரு**

அருணன் என்றும் அஸ்த்தமிக்கா ஆங்கில சாம் ராட்சியமே
அலைகள் சூழும் அவனி எங்கும் ஓங்கிடும் - இலங்கை
கரையோரம் எங்கும் எங்கள் அரசதே - நாங்கள்
கட்டியந்தான் கூற வந்தோம் மரபதே

பீரங்கி துப்பாக்கியோடு போரிடும் பேராயுதங்கள்
பொருதுங் கடற் படையெழு தரைப் படைகளும் - எந்த
அரணையும் உடைத் தேயழிக்கும் வீறுதான் - பெரிய
பிரித்தானியா அரசில் நாடு நூறுதான்

கண்டம் விட்டுக் கண்டம் வந்து கடல் கடந்து படை நடத்தி
வென்று நின்றார் போர்த்துக்கீஸ் ஒல்லாந்தரே - அவரை
கண்டு வந்தோம் நாங்கள் இந்த நாட்டிலே - நேராய்
சண்டையில் வென்றோம் துப்பாக்கி வேட்டிலே

ஆனை சேனை அணிகளோடு கானம் சூழ அரணமைந்து
அடல் மிகுந்த நெடிய வன்னி நாடுதான் - பண்டார
வன்னியனை விட்டால் பெருங் கேடுதான் - அந்த
மன்னவனால் நாங்கள் படும் பாடுதான்

எட்டுத்திக்கும் எங்கள் சேனை ஏற்றம் பெற்றுச் செல்கையில்
எதிர்த்து நிற்கும் வீரவன்னி தேசந்தான் - அதைக்
கட்டியாளும் மன்னன் பெரும் மோசந்தான் - நாட்டைக்
கைப்பற்றுவோம் இன்னும் சில மாசந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில சாம்ராட்சியத்தின் அரசின் இலங்கைப் பிரதிநிதி
அதி உயர்ந்த கவர்னராம் நோர்த் பிரபுவாம் - இங்கே
நாங்கள் வந்தோம் அவரின் வரவைத் தெரிவிக்க - மிக்க
நயத்துடனே வந்திடுவீர் வரவேற்க.

பாண்டு வாத்தியம் முழங்கப் பரிகரிகள் பின் தொடர
பவனி வரும் கவர்னர் துரையை வரவேற்போம் - வாரீர்
வெண்கொற்றக் குடை கொடிகள் ஒளிர்ந்திட - பாரீர்
விண்ணும் சிவக்கும் வண்ணம் தேசம் களித்திட

வாழை தென்னங் குருத்தினோடு மாவிலை கொள் தோரணங்கள்
வண்ண ஜாலங் காட்டும் வாண வேடிக்கை - தென்னம்
பாளையிளஞ் சிரிப்பினோடு வாருங்கள் - இளங்
காளையரும் கன்னியரும் பாருங்கள்

**ஆங்கில மந்திரி - வரவு - தரு**

அகிலம் முழுதும் போற்றும் ஆங்கிலர் ராட்சியம்
அருணன் ஒளி துலங்க ஏற்றும் மாட்சியே
செகமே மயங்கும் லங்கா ஆட்சி புரி கவர்னர்
செயந் தங்கிடும் நயம் பொங்கிடும் அமைச்சனும் நானே

பேரரசாய் எழுந்தோம் போரில் வல்லவர்
பொருதும் திறன் படைத்த தீரர் வெள்ளையர்
திரை ஏழு கடல்களும் தரை ஏழு கண்டமும்
திரண்டே வரின் மருண்டோடிட செருவில் வெல்வோமே.

யாழ் கோட்டை கொண்டமா தேசம் எங்களின்
தாளடி தனில் இப்போ நாசங்கள் இங்கினி
வீழுமோ வன்னிமா நாடுதான் செங்களம்
வாளும் வேலும் பிடிக்கும் ஈழரை நாம் பிடிப்போம்

**ஆங்கில சேனாதிபதி - வரவு - தரு**

ஆளமா கடல் ஏழும் ஆங்கிலரின்
அடல்சேர் வெடியே நெடிதாய்
கோளங்கள் அதிர் கொண்டெழு படையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளங்கள் தடைகள் தாண்டி
வேளமா படை உடைபடப் பொடிபட
சூழு மா படை சுடு படை இடி பட
நாளும் ஆங்கிலர் வென்றிடு நேர்படை
நீழும் உலகினில் நிமிர்ந்திடும் கொடியொடு
(ஆளமா கடல்)

பீரங்கி துப்பாக்கி வெடிகளோடு
நிரையாய் நெருப்பாய் எழுந்தே
தரைப் படையொடு கடற்படைத் திறனும்
பெருகப் பொருத எந்தப்
பேரரசையும் வேரொடு சாய்த்திடும்
நீரில் வருபடை நிர்மூலமாக்கிடும்
சீரிய முறு ஆங்கில சேனையின்
வீரிய முறு தளபதி நானே
(ஆளமா கடல்)

வீர ஈழரின் யாழரசினோடு
அரணாய் உரமாய் நின்ற
சூர சிங்கள தீர கோட்டை ராட்சியம்
விரைவாய்த் திறனாய் உடைத்தே
சூரியன் கதிர் கனல் பட எரிபடும்
போரின் அனல் எழு பொங்கிடு பேர்படை
கூறெழு பிரித்தானியா ஆர்த்தெழும்
தாரணிதனில் தனிக்கொடி நாட்டிடும்
(ஆளமா கடல்)

## தேசாதிபதி பிரடறிக்நோர்த் வரவு - தரு

திரை சூழ் பிரித்தானியா - தேசம் இந்த
தரை ஏழ் நிலம் ஜெயிக்கும் - இலங்கையின்
கரையோரம் வெற்றிக் கொடியேற்றிடு கோட்டை
அரசே புரியும் நோர்த் பிரபுவும் நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டம் கடந்து வந்தோம் - கருதரு
அண்டம் அதிர வென்றோம் - தடைதாண்டி
அடல்பேர் வெடியொடு கடல்போல் படையொடு
திடமோ டமர் பொரு அரசது புரிவேன்

இந்து சமுத்திரத்தின் - நித்திலமென
இலங்கும் இலங்கை நாடு - வீரஞ்செறி
உந்தி எழுகப்பல் உரம் பொங்கிடப் படை
சிந்து பாடிட செருவில் வெல்வேனே

**ஆங்கில மந்திரி - சந்தத்தாழிசை**

விண்ணுதிர வெடி முழங்கும் வெள்ளைப்படை சூழவே
வெண்கொற்றக் குடை கொடிகள் சாமரைகள் நீடவே

**ஆங்கில சேனாதிபதி - சந்தத்தாழிசை**

மண்ணதிரும் மாவலிகொள் மாட்சிமையோ டாளவே
எண்ணரிய எங்கள் தேசம் எங்கும் புகழ் சூடவே

**தேசாதிபதி - தரு**

இந்துப் பெரும் கடல் நடுவில் இலங்கும் நாடு இலங்கை
சுந்தர மா மந்திரியே வளமை சொல்வீர் துலங்க

**ஆங்கில மந்திரி - தரு**

முத்து சங்கு மெத்து விளை கடல்படு திரவியங்கள்
ரெத்தினமும் யானைத் தந்தம் ஏலம் கறுவா வளமே

**தேசாதிபதி - தரு**

சிறந்த வளம் நிறைந்த லங்கா சீரது நான் கேட்டேன்
உரத்த புயல் எழுமின் கப்பல் நிறுத்தத்துறை உண்டோ?

**ஆங்கில சேனாதிபதி - தரு**

திருப்பொலியும் தமிழர் நிலம் திருகோணமலைத் துறையே
பொருதி அதைப் பற்றுவோர்க்கே கிடைக்கும் நாட்டின் இறையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசாதிபதி - தரு**

கப்பங்கட்டும் சிற்றரசர் தருகிறாரோ திறைகள்
ஒப்புக் கொண்ட வண்ணம் செய்யா பொருமுறாரோ குறையாய்

**ஆங்கில மந்திரி - தரு**

போர்த்தருடன் ஒல்லாந்தரும் பொருதவொண்ணா அரசன்
தீரமுடன் வன்னி ஆளும் பண்டார நரபதியே

**தேசாதிபதி - தரு**

ஆங்கிலப் பேரரசினிற்கு அடங்கிடாத அரசோ!
நீங்கிடாப் பேரவமானமே முழுங்கட்டும் போர் முரசே

**ஆங்கில சேனாதிபதி - தரு**

வெடி முழங்கும் நெடிய வெள்ளைப் படைகள் புறப்படவே
விடைகள் தாரும் வன்னி நாடு நொடியில் பிடித்திடவே

**ஆங்கிலேய மந்திரி - வசனம்**

பண்டாரவன்னியனை வெல்வது அவ்வளவு எளிதான காரியமாக எனக்குப் படவில்லை. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தருங்கூட அவனுடன் போர் புரிவதற்குப் பின் நின்றதை நாம் மறந்து விடக்கூடாது.

**தேசாதிபதி - சந்தவிருத்தம்**

அண்டங்கள் அதிர்ந்திடக் கண்டங்கள் உதிர்ந்திட
அடல் பொரு சேனையுடை
மண்டலம் புகழ் வெள்ளைப் பேரரசை ஒரு
சுண்டைக்காய் வன்னி நாட்டின்
மன்னன் பண்டாரனும் மதித்திடாத் துதித்திடா
மமதையை அடக்கிடவே
குண்டுடன் வருமுன்னம் கொடுத்திடு திறையென
குறித்திடு மடல் விடுப்பீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசாதிபதி - வசனம்**

கப்பந்தர ஒப்பந் தராவிட்டால் கவிழ்க்கப்படும் உன் அரசு எனப் பண்டாரவன்னியனுக்கு மடல் அனுப்பி விடுங்கள்.

## காட்சி - 07

**இடம் :- வீதி - அரண்மனை**

**பாத்திரங்கள் :- பண்டாரவன்னியன் - கயிலாயவன்னியன் - பெரியமெயினர் - குடிமக்கள் - தூதுவன்**

**குடிமக்கள் - தரு**

பயிர் எல்லாம் காய்ந்துமே போச்சே - வானம்
பொய்த்ததனால் வயல் ஓய்ந்தது வாச்சே
வியர்வைகள் சிந்தி வீணாச்சே - எங்கள்
விதியது இதுவோ எல்லாம் விழலாச்சே

ஆறு குளம் எல்லாம் வற்றி - வறள்
சேறும் சகதியுமாய் நீரும் அற்று
சோறுக்குத் திண்டாடும் காலம் - இந்த
ஊறது நேர்ந்திடவோ கலி காலம்

காட்டு மிருகங்கள் நாட்டில் - எங்கள்
தோட்டந்தனில் எஞ்சும் பயிர்களைக் கூட்டாய்
வேட்டையாடி அழித்திடவே - நாங்கள்
வாட்டம் கொண்டோம் உளம் மிகத் தளர்ந்திடவே

**குடிமக்கள் - வசனம்**

மகாராஜா மாதம் மும்மாரி பொழிந்து வளம் கொழிக்கும் தங்கள் திருநாட்டில்

வானம் பொய்த்து வயல் விளைவற்று பயிர்களெல்லாம் காய்ந்து கருகி அழிவடைந்து விட்டன.

உமது குடிமக்களான எம்மைக் காக்க வேண்டும் மன்னா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்டாரவன்னியன் வசனம்

பாசமிகு குடிமக்களே! பஞ்சம் பசியென்று யாரும் அஞ்சவேண்டிய தில்லை. அரண்மனைக் களஞ்சியத்தில் சேர்த்து வைத்துள்ள தானியங்களில் உங்களுக்கு வேண்டியளவு அள்ளிச் செல்லுங்கள். கவலையை விடுங்கள்.

### தூதுவன் - வரவு - தரு

கொண்டு செல்வேனே - நிருபத்தைக்
கொண்டு செல்வேனே
வீட்டினைப் பூட்டிப் பெண்டாட்டி துரத்திட
றோட்டினில் ஓடிய ஓட்டமாய் இரைந்திட
வேட்டொலி கேட்ட பறவை பறந்திட்ட
காட்டமதாகவே வாட்டம் விட்டேகிட.
(கொண்டு செல்வேனே)

வன்னி மா வீரம் விளங்கிடு பண்டார
வன்னிய மன்னவன் என்னதான் சொல்வானோ
அன்னியன் என்றென்னைச் சன்னைகள் செய்வானோ
முன் செல்ல என்கால்கள் பின்னுதே புறமிட.
(கொண்டு செல்வேனே)

### தூதுவன் - வரவு

கட்டாரி கொண்டெந்தன் கண்டம் அரிவானோ
கட்டளை விட்டுடன் கழுவில் இடுவானோ
வெட்டரி வாளினால் வெட்டிச் சரிப்பானோ
ஒட்டி ஒளிந்தோடி கிட்ட நெருங்கியே.
(கொண்டு செல்வேனே)

கப்பங்கள் கட்டென்ற கட்டளை கழறவே
ஒப்பவே இல்லை நா உளறுதே திக்குவாய்
அப்பாவி நானென்ன செப்புவேன் எனதுடல்
இப்படிப் பதறுதே எப்படிப் புகலுவேன்.
(கொண்டு செல்வேனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தூதுவன் - வசனம்

மகா மேன்மை தங்கிய மன்னர் பெருமானே தேசாதிபதி பிரடறிக் நோர்த் துரையவர்கள் கப்பம் தரும்படி ஒப்பம் பெறும்படி என்னைத் தங்களிடம் அனுப்பியிருக்கிறார்.

### பண்டாரவன்னியன் - கலிநெடில்

அண்டமோ டெழுகண்டம் துண்டு துண்டாகுமோ
அடல் வேங்கை அடிமாறுமோ
அடையலர் வெடியலர் கொடியவர் நெடியவர்
அடுக்கடுக்காய் வரினும் அஞ்சேன்

கண்டம் கடந்திந்த மண்தனில் வந்தெம்மைக்
கப்பங்கள் கேட்டிடவும்
கருதிங்கிலீசரைக் கைமோசக் காரரைக்
கண்ட துண்டம் செய்குவேனே

### சிந்து

கப்பங் கேட்கத் துணிந்தாரோ - கப்பலில் வந்தோர்
கப்பங் கேட்கத் துணிந்தாரோ
கப்பங் கேட்கத் துணிந்தாரோ இப்புவியோர் தான் திகைக்க
சொப்பனங் கண்டவர் தப்பிடா வாளினால்
செப்பமாய் வெட்டியே குப்புற வீழ்த்துவேன்.
(கப்பங்கேட்கத்)

நாடுவிட்டு நாடு வந்த கேடு கெட்ட கூட்டம் இந்த
நாட்டினைப் பிடித்திடவே தீட்டியதோர் திட்டமதைத்
தான் பொடியாக்கேனோ - நயவஞ்சரை
நான் அடியாக்கேனோ - பண்டாரனெந்தன்
வாட்திறன் அறியா மூடர் வல்லமை உணரா வேடர்
நாட்டினை விட்டுமே ஓட்டமாய் ஓடிட
காட்டுவேன் வெந்திறல் பேடியர் சாடிட
(கப்பங்கேட்கத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்டாரவன்னியன் - வசனம்

சொந்த நாட்டானை வந்த நாட்டான் திறை கேட்பதா.... என்முன் நின்று திறை கேட்கும் மடலிகையைக் கொடுத்தவனே நீ தூதனாக வந்ததனால் உன் உடலைத் துண்டம் செய்யாது விடுகிறேன். ஓடிப்போ உயிரைக் காப்பாற்றிக்கொள்.

### தூதுவன் - தரு

தப்பினேன் நான் பிழைத்தேன் தாறுமாறாய் ஓடி
தலையில் பின்கால் தான் இடிக்கத் தடக்கி விழச்சாடி

முறுக்கி நிற்கும் மீசை முளித்துப் பார்க்கும் பார்வை
உறுக்கும் பேச்சும் பொறுக்கியரின் உடல் பதறச் செய்யும்.

தெறிக்கும் அனல் வாளின் தேசு காணக் கூசி
தெருவில் விழுந் தோடி வந்தேன் உயிர் பதைக்க மூசி

## காட்சி - 08

**இடம் :- அரண்மனை**

**பாத்திரங்கள் :- தேசாதிபதி - ஆங்கில மந்திரி - ஆங்கில சேனாதிபதி - தூதுவன்**

### தூதுவன் வசனம்

மகா கனம் தங்கிய துரையவர்களே தங்கள் தூதைத் தூசாகவும் மதிக்கவில்லை மன்னன் பண்டாரவன்னியன். சொந்த நாட்டானிடம் வந்த நாட்டான் திறை கேட்பதா எனச் சினந்தெழுந்து என்னை அதட்டித் துரத்தி விட்டான் பிரபு.

### தேசாதிபதி - களிநெடில்

அட்டமா திசையெல்லாம் கட்டியாள் ஆங்கிலரின்
ஆண்மையை அறிந்திடாமல்
அவமதித்திட்டானோ எமை மதிக்கா விட்டானோ
ஆணவம் அடக்கிடேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டு மா முரசிட கொடி முடி சிரசிட
கொற்றங்கொள் வெள்ளையர் மேல்
கொதித்தெழுந்திட்டானோ குதித்தாடி நின்றானோ
குதர்க்கமே கொண்டிட்டானோ

தீட்டுமா திறன்கொண்ட பீரங்கி துப்பாக்கி
சுடுகலன்கள் பலமுணரான்
செட்டுமே பட்டிட செருக்கதும் விட்டிட
செருவினில் வென்றிடேனோ

(கப்பங் கேட்கத்)

### சிந்து

கப்பங் கட்ட ஒப்பவில்லையோ - பண்டாரனவன்
கப்பங் கட்ட ஒப்பவில்லையோ
செப்படி வித்தைகள் காட்டி செகசால பேச்சில் மாட்டி
எப்படியும் எங்கள் ஆணை ஏற்றிடச் செய்வேனவனை

(கப்பங் கட்ட)

ஐந்திலொரு பங்குலகு ஆளுமெங்கள் தாளடிக்கீழ்
வந்து வீழா வெந்திறல்கொள் ஆங்கிலரின் ஆணை மீறி
முந்தியெதிர் வார்த்தை பகர் மூடனை விடவோ நானும்
தந்திரங்கள் செய்தவனை வந்து கப்பங்கட்ட வைப்பேன்

(கப்பங் கட்ட)

### தேசாதிபதி - தரு

தக்கதோர் தந்திரம் சொல்லும் மதிவல்லோய்
தனியரசாட்சி செய்யும் பண்டாரன்
இக்கணம் எங்களின் பக்கம் பணிந்திட
இனியொரு யுக்தி புகல் வெல்லவே

### ஆங்கிலேய மந்திரி - தரு

பண்டார மன்னனை வென்றிடத் தக்கதோர்
பக்கபலம் வேண்டும் துரையே
எண்ணிய எண்ணமே ஈடேறும் வண்ணமே
ஏற்றவன் போற்று காக்கை வன்னியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேசாதிபதி - தரு

பிரித்தாளும் தந்திரம் பிடித்த எம் மந்திரம்
துரிதமாய் செயற்படுவோம் துணிவாய்
சரியான தருணத்தில் சாதுர்யமாய் நாமும்
அரசதைப் பற்றிடுவோம் எளிதாய்

### ஆங்கிலேய சேனாதிபதி - தரு

கரிக்கட்டு மூலையின் காவலனாமந்த
கரவுகொள் காக்கை வன்னியனை நாம்
கையாளாய் ஆக்கிடில் மெய்யாய் நம் காரியம்
கைகூடியே வருமே விரைவாய்

### தேசாதிபதி - வசனம்

சபாஷ் பண்டார வன்னியனின் இனத்தவனைக் கொண்டே அவன் புதைகுளியைத் தோண்டச் செய்ய வேண்டும்.

## காட்சி - 09

**இடம் :- அரண்மனை**
**பாத்திரங்கள் :- தேசாதிபதி - காக்கைவன்னியன்**
**(தூதுவன் கொடுத்த கடிதத்தை வாசித்து விட்டு)**

### காக்கைவன்னியன் - வசனம்

ஆங்கில பேரரசிடமிருந்து எனக்கு அழைப்பா..... நான் அதிஸ்டக் காரன் தான்.

### காக்கைவன்னியன் - தரு

தக்க சமயம் வாய்த்த சந்தர்ப்பம்
இக்கணமே நான் மிக்காய் சென்றே
அடுத்துக் கெடுக்கும் படலம் தொடுப்பேன்
எடுத்த காரியம் நடத்தி முடிப்பேன்

அதிவீர சூர ஆங்கிலர் துணை
அணைத்து வருதே இணைந்து வசமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதித்துக் குமுறும் இதயம் குளிர
கொஞ்சம் மாறணும் வஞ்சம் தீரணும்

**(காக்கைவன்னியன் தேசாதிபதியைச் சந்தித்ததும்)**

**தேசாதிபதி - தரு**

காக்கை வன்னியரே வாருங்கள் - நானும்
களறிடும் வார்த்தையைக் கேளுங்கள்
ஊக்கமாய் யூகங்கள் தாருங்கள் - மிக்க
உகப்பாய் வன்னி முற்றும் ஆளுங்கள்

**காக்கைவன்னியன் - தரு**

சீக்கிரம் கருமத்தைச் சாற்றுவீர் - உங்கள்
ஏக்கத்தைப் போக்கி நான் தேற்றுவேன்
வேற்றுமை கொண்டவர் நின்றாரோ - அல்லால்
மாற்றலர் ஆற்றலில் வென்றாரோ

**தேசாதிபதி - தரு**

அகிலத்தின் ஐந்தில் ஓர் பங்கினை - வென்று
ஆள்திறல் ஆங்கிலர் பாங்கினை
இகழ் மொழி கொண்டு பண்டாரனும் - தூதை
இம்மியும் மதியாது அதட்டினான்

**காக்கைவன்னியன் - தரு**

அவமதித்திடல் அவன் வழக்கமே - உங்கள்
அடிபணியான் போர்க் களத்திலே
உகப்பாய் உரையாடி நடித்துமே - அவன்
உயர்வான நாட்டை நாம் பிடிப்போமே

**தேசாதிபதி - தரு**

எங்கள் மேலாணையை ஏற்றுமே - மன்னன்
எப்படியும் நிறை கப்பமே
தங்கு தடையின்றித் தரவேண்டும் - தங்கள்
தந்திரத்தால் அவன் ஒப்பவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்கைவன்னியன் - தரு**

இராஜ உபசாரம் நடத்துவோம் - அந்த
இராஜனைப் பொறி தன்னில் வீழ்த்துவோம்
இராஜ தந்திரங்கள் பல பேசியே - அவன்
இராட்சியம் கவர்ந்திடல் ஈசியே.

**காக்கைவன்னியன் வசனம்**

பண்டார வன்னியனுக்கு அழைப்பு விடுப்போம் அரவணைப்பது போல் நடிப்போம்

**தேசாதிபதி - வசனம்**

மாலை மரியாதை கொடுப்போம்
கப்பம் தந்திட ஒப்புதல் எடுப்போம்.

## காட்சி - 10

**இடம் :- அரண்மனை**

**பாத்திரங்கள் :- பண்டாரவன்னியன் - கயிலாய வன்னியன் - பெரிய மெயினார்**

**பண்டாரவன்னியன் - கடிதவாசகம்**

மாட்சிமை மிகுந்த மன்னர் பண்டார
மகிபனே மனமகிழ்வாக
மகத்துவமுற்ற கவர்னர் (டிறிபேர்க்)
கருத்தினைக் கவனத்தில் கொள்க.

ஆட்சிசேர் கோட்டை அரசது புரியும்
அவைதனில் அமைந்து நீர் வருகில்
அதி சங்கையாக துதி செய்து நாங்கள்
அழைத்திடு கருமங்கள் உரைப்போம்

சூட்சிகளற்ற சுகந்தம் மிகவான
சுகிர்தமாய் நாமுறவாட
சுபீட்சத்தை அடைய சுறுக்கதாய் உயர
சுற்றுலும் செற்றவர் இல்லா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்சியாய் இந்த நிலந்தன்னில் என்றும்
நல்லுறவோடு நாம் வாழ
நிலவு நல் தருணம் தருவோம் உபசாரம்
நீர் வாரும் நிகழ்ந்திடும் நன்மை

இப்படிக்கு
ஆங்கில தேசாதிபதி - பிரட்றிக் நோத்

**பண்டாரவன்னியன் - தரு**

வெள்ளையர் கள்ளமோ வரவேற்போ மருட்டதோ
வாஞ்சையுடன் அழைத்தார் வஞ்சமோ
உள்ளந் தெளிந்திட ஊரும் உணர்ந்திட
உபாயமது உரைப்பீர் விரைவாய்

**கயிலாயவன்னியன் - தரு**

விருந்துக்கு அழைத்துமே விஷத்தினைக் கொடுத்தாலும்
விருப்புடன் அருந்திடுதல் முறையே
கரவுதான் கொண்டங்கு செல்லாதிருந்திடல்
கவுரவம் இல்லையண்ணா அறிவீர்

**பெரிய மெயினார் - தரு**

சாம பேத தான தண்டம் சமயத்தில்
சாதுர்யமும் உண்டே எமக்கு
சமரசமாய் எங்கள் உரிமைகள் நிலைத்திடில்
சாரும் பழி இல்லையே எவர்க்கும்

**பண்டாரவன்னியன் - வசனம்**

ஆமாம் காலம் அறிந்து தன்வலி துணைவலி மாற்றான் வலி அறிந்து எமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு சமாதானமாக வாழ்வதில் தவறேதுமில்லை. ஆனால்.... எம்மைச் சீண்டிப் பார்க்க நினைத்தால் அதற்கும் தக்க பதிலடி கொடுக்கும் சாதுரியமும் எம்மிடம் இருக்கும் என்பதை உணர்த்தி விடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி - 11

**இடம் :- அரண்மனை**

**பாத்திரங்கள் :- பண்டாரவன்னியன் - தேசாதிபதி - ஆங்கிலேய மந்திரி - ஆங்கிலேய சேனாதிபதி**

**தேசாதிபதி - விருத்தம்**

அலங்கார வளைவமைத்து அரசனென் றுனை அழைத்து
இலங்குசீர் வரிசை பெறு இராஜ உபசாரமெல்லாம்
செல்லாத காசதுவாய் தள்ளி விட்டாய் நீ பொல்லாத
வில்லங்கந் தனையே தேடிப் பெறுதல் உன் விருப்பதாமோ

**தேசாதிபதி - வசனம்**

எத்தனை அலங்காரங்கள் எத்தனை சோடனைகள் எத்தனை வரவேற்புகள் அத்தனையும் நீ மொத்தமாய் அலட்சியப்படுத்தி விட்டாய். எங்களையும் அவமானப்படுத்திவிட்டாய்.

**பண்டாரவன்னியன் - விருத்தம்**

சோலை மலரெடுத்து சொற்சிலம்பம் தான் தொடுத்து
மாலை சூடிக் கொடுத்தும் மருட்டதில் மயங்கான் வீரன்
வலை தன்னில் வீழ்த்த இந்த வன்னி மண் ஈன்ற மன்னன்
விலையது போகமாட்டான் விடயத்தைத் தெரிவிப்பீரே

**பண்டாரவன்னியன் - வசனம்**

வந்தாரை வரவேற்று வாழவைப்பது எமது பண்பாடு ஆனால் வந்தவரெல்லாம் எமது மண்ணை மிதித்தடி பதித்திட நாம் விடப் போவதில்லை. அழைத்த விடயத்துக்கு வாருங்கள்.

**பிரட்றிக்நோர்த் - தரு**

மன்னர் மன்னர்கள் எங்கள் மகிமை அறிந்து மனம்
ஒன்றித் திறைகள் தர முண்டியடித்து நிற்க
மன்றில் உனை மதித்து மாலை சூடித் துதித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னும் எம்மோடிணங்கா வன்மம் எதுவுரைப்பீர்

**பண்டாரவன்னியன் - தரு**

வாணிபந் தனைச் செய்ய வந்த இனத்தாரெல்லாம்
காணும் பொருளைக் கொண்டு தோணி ஏறிப்போனார்
வன்னி மண்ணிலெவரும் திறைகள் கேட்கத் துணியார்
தன்மானத் தமிழர்கள் என்றும் அடிபணியார்

**பிரடறிக்நோர்த் - தரு**

அகிலம் முழுதும் வெற்றி வெடிகள் முழங்கும் வீர
ஆங்கிலர் கொடியின் கீழ் அமைதல் உமக்குப் புகழ்
உகப்பதாய் இதை ஏற்கா உரிய திறை மறுத்தால்
உன்னரசைப் பறிப்போம் சென்னி முடி சரிப்போம்

**பண்டாரவன்னியன் - தரு**

பார்ப்போமடா அதையும் பறங்கிப்படை பதறும்
பண்டாரன் வீரதீரம் கண்டால் நொடி சிதறும்
போர் எழு வன்னி மண் புதியதோர் புறம் பாடும்
பொருவரு பகை கெடி கொண்டுடன் புறம் ஓடம்

**(ஆங்கிலத் தளபதி வாள் எடுத்துத் தடுக்க பண்டாரவன்னியன் வாட் சுழற்சி முறையில் அவன் வாளை அந்தரத்தில் பறக்கச் செய்கிறான். வெள்ளையர்கள் வியந்து நிற்க பண்டாரவன்னியன் வெற்றி நடையுடன் செல்கிறான்.)**

**தேசாதிபதி - வசனம்**

அவையோர்களே பண்டாரவன்னியனைத் தாக்குவதற்கென முல்லைத்தீவிலே நாம் கட்டி வரும் கோட்டையைப் பண்டாரவன்னியன் படைகள் இனித் தாக்கக்கூடும்... உடன் புறப்படுங்கள் நமது படைகளுடன் சென்று அதனைப் பாதுகாப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 12

**இடம் :- அரண்மனை**

**பாத்திரங்கள் :- பண்டாரவன்னியன் - கயிலாயவன்னியன் - பெரியமெயினார் - குமாரவன்னியன்**

**பெரிய மெயினார் - வசனம்**

அண்ணா வெள்ளையர்கள் முல்லைத்தீவிலே கோட்டை கொத்தளங்கள் அமைத்து அதைத் தளமாக்கி நம்மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக நமது ஒற்றர்கள் சேதி கொண்டு வந்திருக்கிறார்கள்.

**பண்டாரவன்னியன் - தரு**

கோட்டை சூழ் நெடுங் கொத்தளம் - எங்கள்
நாட்டிலோ எதிர் நாட்டவர்
அத்தனை கெறுவுற்றதோ - நாமும்
அத்தளம் அறப் பற்றுவோம்

**கயிலாயவன்னியன் - தரு**

கள்ளமாய் எங்கள் மண்தனில் - அந்த
வெள்ளையர் கோட்டை கட்டவோ
வெள்ளமாய் பாய்ந்து செல்லுவோம் - வெற்றி
கொள்ளுவோம் வீரம் நாட்டுவோம்

**பெரியமெயினார் - தரு**

வேங்கையின் காட்டை வெள்ளெலி - மிக்க
வேகமாய் வளைத்திட்டதாய்
ஆங்கிலர் கொடி ஏற்றவோ - அவர்
ஆணவந்தனை அடக்குவோம்

**குமாரவன்னியன் - தரு**

நெடு வெடி கொண்ட வெள்ளையர் - பெரு
சுடு படை நொடி பொடி பட
எடுப்போம் நாம் யானைப் பொருபடை - விரை
தொடுப்போமே கோட்டை இடிபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமாரவன்னியன் - வசனம்**

மடை கடந்து வந்து எம் மண்ணில் தளமிடும் வெள்ளைப் பட்டாளத் துக்கு மதகரிகள் படைகொண்டு அதிரடி கொடுப்போம்.

**பண்டாரவன்னியன் - வசனம்**

ஆமாம் பொங்கி எழட்டும் தமிழர் மறவர் படை யுத்தத்திற்கு மைத்துனர் குமாரவன்னியர் தலைமை தாங்கட்டும் போர் முரசு முழங்கட்டும் எம்மண் பிடிக்க வந்த அந்நியர் படை சிதறியோடட்டும்.

## காட்சி - 13

**இடம்** :- **மாளிகை**
**பாத்திரங்கள்** :- **இளவரசி நல்லநாச்சி - குமாரவன்னியன்**

**குமாரவன்னியன் - வசனம்**

இளவரசி முல்லைத்தீவிலே வெள்ளையர் கட்டிய கோட்டையை உடைத்தழிக்க எமது வேழப்படையின் துணையுடன் போருக்குத் தலைமை தாங்கிப் புறப்படுகிறேன். வீரவாள் எடுத்து விடை கொடுத்து அனுப்பு.

**இளவரசி - வசனம்**

இப்போதே புறப்படுகிறீர்களா.... ஓரிரு நாட்கள் பொறுத்துச் செல்லக் கூடாதா அத்தான்.

**இளவரசி - தரு**

வாளெடுக்காதே - சற்றே சற்று நில்லு
போர் தொடுக்காதே
கோழை இல்லை இவ் வேளை நம் குலம்
விளங்கும் குழந்தையே பிறக்கும் நாளையே
களத்தில் நீர் அங்கு கலங்கும் நான் இங்கு
மழலை முகம் பார்க்க மறந்திருப்பீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமாரவன்னியன் - தரு**

வேளை பார்க்கிறாயோ - பகைவர் நாட்டைப் பற்றும்
நாளை ஏற்கிறாயோ
களத்தில் தந்தையை கணவனை அன்று
இழந்தும் மழலையைப் போர்க்கனுப்பிய
எழுச்சி மிகு புறம் பாடும் பெண்மையை
இளவரசி நீ இழத்தல் ஞாயமோ

**இளவரசி - தரு**

வீரவாள் எடுத்தேன் - இரத்தத் திலகமிட்டு
விடையும் நான் கொடுத்தேன்
ஆரமணித் திரு நாடு காத்திட
போர் முடித்து ஓர் பேர் எடுத்திட
நேர் வரு பகை தூரம் ஓடிட
வீரமோடுயர் வெற்றி நீடிட

**இளவரசி - வசனம்**

தங்கள் நெற்றியிலே நான் வைத்த இரத்தத் திலகமே வெற்றித் திலகமாகட்டும். சென்று வாருங்கள் அத்தான் வென்று வாருங்கள்.

## காட்சி - 14

**இடம் :- போர்க்களம்**
**பாத்திரங்கள் :- குமாரவன்னியன் - கயிலாயவன்னியன் - பெரிய மெயினார் - தேசாதிபதி - ஆங்கில மந்திரி - ஆங்கிலத் தளபதி**

**குமாரவன்னியன் - தரு**

திறலே திகழ் மறத்தமிழ் வன்னியில்
இறங்கி எதிர்கொண்ட பறங்கி உன் படை
புறமே பட பொடிபட உடைபட
மறங்கொள் சேனைகள் திறங்கள் காட்டிடும்
தறைகள் நிறைய வெள்ளைத் தலைகள் உருள வெட்டி
பறைகள் முழங்க வெற்றி நாட்டிடுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரடறிக்நோர்த் - தரு

அடலே மிகு திடத்துடன் எழு வெள்ளைப்
படை திரண்டிடும் தடை மிரண்டிடும்
கடலேழும் நடுங்கிட ஒடுங்கிட
வெடிகள் கொண்டெதிர் நெடிய படையெதிர்
விடியுங் கதிரில் பனி நொடியில் முடிவே படும்
கொடியே ஏற்றிக் கோட்டை பிடித்திடுவோமே

### கயிலாய வன்னியன் - மறுதரு

பிரித்தாளும் தந்திரத்தால் நாட்டைப்
பிடித்திடத் துடித்திடும் மூடரே
வரிப்புலிப் பரம்பரை நாமடா
வாளுடன் வேல் விரைந் திடச்சமர்
குருதிகள் பெருகிட கொடி கொம்பு கருகிட
விரைந்தடர் புரிந்துன்னை வீழ்த்திடுவேனே

### ஆங்கில மந்திரி - தரு

பீரங்கி கொண்டெழு வெள்ளையர்
போர் செய்யில் யாரெதிர் கொள்ளுவார்
பருதி முன் பனித்துளி கரைந்திடும்
திரை கடல் கரை கடந்திட எழும்
அரிகரி பரிகளும் அரண்பெறு வன்னியும்
எரிபடப் பொறிபட எறிகணை விடுப்பேன்

### பெறியமெயினார் - தரு

அன்னியர் எம் ஈழ மண்ணதில்
அரண்பெறு கோட்டை அமைக்கவோ
ஆனையை அடக்கிய அரியாத்தா
அடல் பெறு வீரர்கள் விளை நிலம்
விரைவெறி வேல்களும் வீசிடும் வாள்களும்
பொருதிட உரமுறு போரினில் ஜெயிப்பேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆங்கில சேனாதிபதி - தரு

கண்டங்கள் அதிர்ந்திடும் குண்டுகள்
கொண்டெங்கள் பொருதிடும் சேனைகள்
விண்முட்டும் வீரம் படைத்திடும்
மண் எட்டும் தூரம் உடைத்திடும்
அண்டமோ டெண்டிசை மண்டலங் கொண்டிசை
துண்டு படவே வன்னி வென்றிடுவோமே

### குமாரவன்னியன் - மறுதரு

குண்டு பீரங்கிகள் கண்டு என்றும் கலங்கமாட்டான்
பண்டாரன் படைவீரன் பகையை விரட்டி வெல்வான்
ஆண்ட பரம்பரை நாம் மாண்ட மறவர்களில்
மீண்டு வருவான் வேங்கை மூண்ட பகை முடிப்பான்
கண்டம் ஏழும் ஒன்றாய் எதிர் கொண்டே வரின் துண்டாகிடும்
திண்ணம் புலி திரளும் நாளை ஒன்றாய் ஈழம் வென்றே எழும்

### தேசாதிபதி - தரு

அட்ட திக்குகள் அதிர் கொட்டு முரசொலிக்க
ஆங்கிலர் சேனை இந்த அகிலந்தனை ஜெயிக்க
அடங்கிடா மண் இந்த வன்னி எமை எதிர்க்க
ஆழி ஏழும் எழுந்த ஊழிப் பிரளயமோ
திட்டமது இட்டே முல்லைக் கோட்டைதனைக் கட்டி வைத்தோம்
முட்டி மோதும் யானைப்படை சுட்டே வீழ்த்துவோமே

### கயிலாயவன்னியன் - மறுதரு

என்னரும் தாயக மண்தனில் ஆங்கில
அன்னியர் வந்தடி பதித்திட விடவோ
முன்தோன்றி மூத்த தமிழ்க்குடி வீரத்தின்
முன் சண்டை செய்திட முடியுமோ மூடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆங்கில மந்திரி - தரு

பாரினிலே பல நாடுகள் சென்றோம்
பட்டணம் நகரங்கள் படைகொண்டு வென்றோம்
வீரியமுடன் பல கோடி பேர் கொன்றோம்
வீழ்த்துவோம் வன்னிமா நாட்டையும் இன்றே

### பெரியமெயினார் - தரு

வாட்படை வேற்படை யானை புரவிப்படை
ஆட்படை யோடுயர் அடலறு வீரமும்
காட்டியே பறங்கிகள் கூட்டமே ஓடிட
ஈட்டுவோம் வெற்றியே இடியென முழங்கியே

### ஆங்கில சேனாதிபதி - தரு

வெடிபடை சுடுபடை நெடுபடை சூழ
அடல்பெறு ஆங்கிலர் அரசது ஆள
கடிதினில் உங்கள் முடியினை உடைப்பேன்
நொடியினில் வெற்றிக் கொடியினைப் பிடிப்பேன்

### குமாரவன்னியன் - சந்தத்தாழிசை

கொடிமுடிகள் குடைகள் கொண்டு தமிழர் சேனை எழுந்தகால்
நாடொன்றில்லா நாடோடியாய் நாய் நரியாய்த் திரிந்தனீர்
நாட்டினைப் பிடிக்க வந்த வேட்டொலிக்கு நேர் எதிர்
காட்டுகின்றேன் வீர புயம் நாட்டிடுவேன் வெற்றியே

### தேசாதிபதி - சந்தத்தாழிசை

இடி முழங்கும் வெடிகள் கொண்டு இத்தரை மிரண்டிட
அடிவானம் தொடு கடல்கள் ஆழி ஏழும் ஆங்கிலர்
கொடி பறக்க முடி சிறக்க கோட்டை கொத்தளமெல்லாம்
பொடிபடவே அடியில் வீழ நொடியில் வெற்றி ஈட்டுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமாரவன்னியன் - சந்தத்தாழிசை**

கடல்கள் ஏழின் வலிமை கொண்டு கயவர் கூடி வருகினும்
ஓட ஓட விரட்டி யுத்தம் புரியும் வீரன் பண்டாரன்
படைகள் பொங்கும் எரிமலையாய் விரையும் வரிப்புலிநிகராய்
தடைகள் தாண்டி முழக்கமிட்டுத் தனியரசாய் எழுந்திடும்

**குமாரவன்னியன் - விருத்தம்**

மறங்கொண்ட வேங்கை நிகர் மறவர் மண்ணில்
மடை கடந்து வந்த வெள்ளைப் பதி பறங்கி
திறங் கொண்ட கோட்டை முல்லைத் தீவதனில்
திட்டமிட்டே கட்டி மெத்தக் கறை படித்தார்
புறம் பாடும் தமிழர் சேனை போர்த்திறனை உலகமெல்லாம்
புகழ் பாட வைத்துப் புதுப் பரணி பாட
விறல் கொண்ட யானைப்படைத் துணைகொண்டன்னிய கோட்டை
வீழ்த்தி விட்டோம் வெள்ளைப்படை தோற்றோடி விட்டார்.

**(குமாரவன்னியன் தலைமையில் போரில் புகுந்த பண்டாரவன்னியன் படைகள் யானைப்படையின் துணையுடன் வெள்ளையர் கட்டிய கோட்டை யைத் தகர்த்தெறிந்து வெள்ளைப்பட்டாளத்தை விரட்டியடிக்கின்றனர். அன்னிய கோட்டையை வன்னி மண்ணிலிருந்து அழித்தொழிக்கும் போரிலே தன்னுயிரை ஆகுதியாக்குகின்றான் குமாரவன்னியன்.)**

## காட்சி - 15

**இடம் :- அரண்மனை**
**பாத்திரங்கள் :- பண்டாரவன்னியன் - கயிலாய வன்னியன் - பெரியமெயினார் - இளவரசி நல்ல நாச்சி**

**கயிலாயவன்னியன் - வசனம்**

அண்ணா முல்லைத்தீவில் ஆங்கிலேயர் கட்டிய கோட்டையைத் தகர்த்து விட்டோம். வெள்ளையர்கள் பாரிய இழப்புகளுடன் பின் வாங்கி ஓடிவிட்டனர்.... ஆனால்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெரியமெயினார் - வசனம்

எமது மைத்துனர் குமாரவன்னியரின் வாள் வீச்சுக்கு எதிர் நிற்க மாட்டாமல் தோற்றோடிய ஆங்கிலேயத் தளபதியின் துப்பாக்கி வேட்டினைத் தன் மார்பில் தாங்கி மைத்துனர் குமாரவன்னியர் வீரச்சாவடைந்து விட்டார்.

### பண்டாரவன்னியன் - இன்னிசை

வசந்தம் திகழ் செந்தமிழர் வன்னி வளமே இழந்த வாறதுவாய்
நேசம் மிகுநல் மைத்துனரின் பிரிவை நான் நினைந்தழுவேனோ
பாசம் வளர் என் தங்கை படும் துயரந்தனைத் தாங்குவேனோ
தேசம் சூழும் நாசமதைப் போக்க வகை செய்குவேனோ

### பண்டாரவன்னியன் - வசனம்

ஆ...... எம் மைத்துனர் மறைந்துவிட்டாரா எமது தேச விடுதலைக்காய் வீர வித்தாகி விட்டாரா..... வெற்றியில் பெருமிதம் கொள்ளும் வேளை மைத்துனர் பிரிவில் நெஞ்சம் அனலாய் வேகுறதே.... ஐயகோ எமது ஆருயிர்த் தங்கை இத்துயரினை எப்படித் தாங்குவாளோ.

### இளவரசி - இன்னிசை

நீரைப் பிரிந்த மீன் போலானேன்
நிலவை இழந்த வானமானேன்
ஏர் வீழ் நஞ்சை நிலமே யானேன்
இணையைப் பிரிந்த அன்றிலானேன்
கூர்வேல் பாய்ந்தே பிளந்த நெஞ்சம்
குருதி பெருகக் கதறும் இதயம்
கார் சூழ் இருளில் ஒளியைத் தேடும்
கனவாய்க் கதையாய்ப் போச்சுதையோ

### இளவரசி - தரு

அன்பே என் ஆரமுதே என் உள்ளம் கொள்ளை கொண்ட
என் நேசக் காதலரே இறந்திட்டீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னல் மொழிகள் பேசிக் கனிவாய் எனை அணைத்தீர்
இனி உமை நான் பிரிந்தே உயிர் வாழ்வேனோ

வீரம் விளைந்த தோளும் தீரம் திகழும் மார்பும்
வீர சுவர்க்கம் சென்றால் ஆறுமோ நெஞ்சம்
வீர மகனைப் பெற்றே ஆர அகமகிழ்ந்தே
பாரா காலன் கவர்ந்தால் தீருமோ துன்பம்

**இளவரசி - வசனம்**

அத்தான் எம் அன்னை பூமியைக் காத்திட தங்கள் இன்னுயிரை ஈந்து தேச விடுதலைக்கு உரமானீர்களே..... உங்கள் பாதையில் எங்கள் பயணங்கள் தொடரும் இது உறுதி அத்தான்.

## காட்சி - 16

**இடம் :- வீதி - அரண்மனை**
**பாத்திரங்கள் :- பண்டாரவன்னியன் - கயிலாயவன்னியன் - பெரியமெயினார் - காக்கைவன்னியன்**

**காக்கைவன்னியன் - தரு**

ஏய்க்கச் செல்வேனே - பண்டாரனைச்
சாய்க்கச் செல்வேனே
ஆய்ந்தோந்திடாமல் நான் ஆசை கொண்ட இளம்
அரசி நல்ல நாச்சி அடைய விடாது உள்ளத்
தீயை வளர்த்த கொடுங் கோலன் கொடுமுடியை
சாய்த்துச் சரித்திடவே சதிகள் புரிந்திடவே
(ஏய்க்கச் செல்வேனே)

உறவை வளர்த்து உள்ளம் நிறைவை விதைத்திடாமல்
கறையை நிறைத்து எந்தன் கனவை அழித்த அவன்
இறைமை தனைப் பறித்து மறைவில் சிறை பிடிக்க
உறவாடிக் கெடுத்திட உகப்பதாய் நடித்து
(ஏய்க்கச் செல்வேனே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மதி மங்கையாள் நல்லநாச்சி இழந்து
என்மதி சுழலுதே நிம்மதியை இழந்து
அன்னியர் துணை சூழ வன்னி முழுதும் ஆள
மன்னன் பண்டாரன் தன்னை அழித்தே அரசனாக
(ஏய்க்கச் செல்வேனே)

**(காட்சி மாற்றம்)**

**பண்டாரவன்னியன் - வசனம்**

வரும் பொருள் உரைப்பதில் வல்லமதி படைத்த தம்பி கயிலாய வன்னியன் வரும் பகை முடித்து உரங்கொண்டெழும் சேனைகளின் நாயகன் தம்பி பெரியமெயினார் முல்லைத்தீவுப் போரிலே தோற்றோடிய வெள்ளைப்படை மீண்டும் புதுப்பலத்துடன் நம் வன்னி நாட்டின் மீது போர் தொடுக்க வந்து விட்டார்கள்.

**பண்டாரவன்னியன் - தரு**

அம்பை நிகர்த்திடும் தம்பியரே
வெம்பகை வந்ததே நம்மெதிரே
வம்பராம் ஆங்கிலர் வன்னி மண்ணை
தம் வசம் ஆக்கிடக் கொண்டார் எண்ணம்

**கயிலாயவன்னியன் - வசனம்**

எந்தையர் பூமியை எமதன்னையர் மண்ணை எங்கிருந்தோ வந்தவர் சொந்தம் ஆக்கிடப் பார்க்கின்றனர்.

**கயிலாயவன்னியன் - தரு**

கொழும்பு மா நகர் கொண்ட கொள்ளைப்படை
வளமுள்ள ஓமந்தை வந்தடைந்தே
பாளையமிட்டு நம் வன்னி முற்றும்
வீழ்த்திட நெஞ்சுரம் கொண்டிட்டாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெரியமெயினார் - வசனம்

இது வேங்கைகள் வாழும் நாடு வீரப்பரணி பாடும் புது ஏடு துள்ளிவரும் வேல் தடுக்கப் புள்ளிமானும் பொங்கியெழும் புலி அடக்க புழுதிக் கூட்டமும் புறப்பட்டிருக்கின்றன.

### பெரியமெயினார் - தரு

வீரங்கொள் வேங்கைகள் வாழும் வன்னி
பீரங்கி துப்பாக்கி கொண்டோர் என்ன
பாரேழு கண்டங்கள் பாய்ந்திடினும்
ஏர் கொண்ட எம் பூமி சாய்ந்திடாது

### பண்டாரவன்னியன் - வசனம்

ஆண்டாண்டு காலமாகத் தமிழ் ஆண்டிருந்த எம் அன்னை பூமியை ஆறாயிரம் மைல்களுக்கப்பாலிருந்து வந்த அந்நியர் அடிமையாக்க நினைக்கின்றனர். குண்டு பீரங்கிகளைக் கண்டு அஞ்சி ஒடுங்கி விடுவர் வன்னியர் எனக் கனவு காணுகின்றனர் பறங்கியர்.

### பண்டாரவன்னியன் - தரு

ஆண்டாண்டு காலம் நாம் ஆண்ட பூமி
அந்நியர் பன்னிடல் என்ன நீதி
குண்டு பீரங்கிகள் கண்டு என்றும்
பண்டாரன் மண்ணது பணிந்திடாது

### கயிலாயவன்னியன் - வசனம்

வேற்படை கண்டு வெள்ளைப்படை கலங்கும் வாட்படை கண்டு வந்த பகை வெந்து வீழும் தமிழர் நாற்படையும் பார்க்க ஞாலமே நடுநடுங்கும்

### கயிலாயவன்னியன் - தரு

வேற்படை வாட்படை புரவி யானை
நாற்படை கொண்டெழு தமிழர் சேனை
சுற்றி வரும் பகை சுக்கு நீறு
வெற்றிகள் பெற்றிடும் வன்னி வீறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெரியமெயினார் - வசனம்

வாளெடுத்துச் சூழுரைத்து வந்த பகை ஒழிக்கும் வலிமை மிக்கது. வன்னியர் படை கொடுங்களண்ணா படைகொண்டு செல்கின்றோம்.

### பெரியமெயினார் - தரு

வாளும் வேலும் வீரத் தோளும் கண்டே
வந்த பகை ஓடும் கெலியே கொண்டே
சூழும் வெள்ளைப் பறங்கிப் படை பதறும்
சுடு படைக் கலங்களும் நொடி சிதறும்

### பண்டாரவன்னியன் - விருத்தம்

அடங்கிடா மண் எங்கள் வன்னி மண் தன்னிலோர் பிடி எடுத்து
இடியின் பேர் முழக்கமிட்டு நெடு முத்தம் நொடி கொடுத்தே
மடை பொங்கும் கடலெனவே தமிழர் சேனை வருபகையை விரட்டிப் புதுப் பரணி பாட
விடை கொடுத்தேன் வீறுடனே வீரர்களே புறப்படுவீர் புயலெனவே கொடிகள் ஆட

### பண்டாரவன்னியன் வசனம்

தாய்மொழி மீது ஆணை வைப்போம் தாயக மண் மீது ஆணை வைப்போம் தாவி எழும் வரிப் புலிமீது ஆணை வைப்போம் வன்னி மண் பிடிக்க வந்த வெம்பகை சிதறட்டும் தமிழர்படை புதிய புறம் பாடட்டும்.

**(கயிலாயவன்னியன் பெரியமெயினார் மற்றும் படைவீரர்கள் போருக்குச் செல்ல காக்கைவன்னியன் வருதல்)**

### காக்கைவன்னியன் வசனம்

மண்டலம் பல புகழ் கொண்ட பண்டாரவன்னிய மன்னவா மாற்றாரை உறவென்று நம்பி உணர்விழந்த என்னை மன்னிக்கவேண்டும். நீரடித்து நீர் பிரியாது இனம் இனத்தோடுதான் சேரும் என்பதை உணர்ந்து திருந்தி வந்த இந்த எளியானை ஏற்றருள வேண்டும் மன்னா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்டாரவன்னியன் - ஆசிரியம்

அரண் பெறு வன்னி அன்னையர் மண்ணை
அறவே நீ மறந்தாங்கிலேயர்
அந்நியர் கையில் பின்னிட என்னை
அவமதித்தே மாசு பகர்ந்தாய்

தரணியில் தமிழர் பெருமையை இகழ்ந்தாய்
துரையென அவர்களைப் புகழ்ந்தாய்
தனித் தமிழீழம் தழைப்பதை வெறுத்தாய்
தயங்கிடா தவறுகள் புரிந்தாய்

கரவதுவாகக் காட்டியே கொடுப்பாய்
கழுத்தறுத்ததுமே நீ கொடுப்பாய்
கன்னித் தமிழ்த் தாயின் கரந்தனில் விலங்கை
கட்டிடப் பார்த்து நீ சிரிப்பாய்

பார் வென்ற தமிழன் பேர் பொன் ஏட்டில்
பழிகாரன் கொடுஞ் சிறைக் கூட்டில்
பாவி உன் தலையைச் சீவிடவே செய்வேன்
பருந்து நரி விருந்திடவே வைப்பேன்

### பண்டாரவன்னியன் வசனம்

முக்காலும் காகம் மூழ்கிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகி விடாது காக்கைவன்னியரே சொற்சிலம்பமாடி என்னதான் மறைத்தாலும் நீர் செய்யும் துரோகம் என்னையல்ல நாம் பிறந்த இந்த அன்னை பூமியை அடிமைச் சங்கிலியில் பூட்டிவிடும் என்பதை மறந்து விடாதீர்.

### காக்கைவன்னியன் - ஆசிரியம்

பார் புகழ் மன்னா பண்டார வன்னி
பளிறிடு மணிமுடி சென்னி
படைபல கொண்டு குடை பல வென்று
பார்த்திபனே மெய் பகர்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் வளஞ் சிறந்தே நிதிமிகு நாட்டை
நினைந்திடா எனை நினைத்தே சுயநலத்தால்
நிகழ்த்திய பாவம் இகழ்த்திய பழிகள்
நீர் மறந் தெனைப் பொறுப்பீரே

சேருவாரோடே சேர்ந்துமே கெட்டேன்
செருக்கெலாம் ஒழிந்ததுமே பட்டேன்
செகசால ஆங்கிலேயர் கை ஒட்டார்
செம்மையாய் உதைத்துமே விட்டார்

சீர் பெறு வன்னி சிறந்தர சோச்சும்
செகராசர் போற்று மா வீரா
சீரடி தொழுதேன் சிலந்தி வலை வீழ்ந்த
சிறியேனை மன்னிப்பீர் மன்னா

**காக்கைவன்னியன் - வசனம்**

அண்ணலே அறிவிழந்த என்னை ஆட்கொள்ள வேண்டும் பசுவைப் பிரிந்த கன்றுபோல் கலங்கி நிற்கும் என்னைக் காத்தருள வேண்டும். தாய் நாட்டிற்குப் பெருங்கேட்டினைப் புரிய இருந்த இந்தப் பாவியைத் தூயோனாக்கித் தங்கள் துணைவனாக்கிக் கொள்ள வேண்டும்.

**பண்டாரவன்னியன் - வசனம்**

காக்கைவன்னியரே அறியாமல் தவறு செய்பவன் மூடன் தவறு என்று தெரிந்தும் செய்பவன் சண்டாளன் தவறை உணர்ந்து திருந்தி அதற்குப் பிராயச்சித்தம் தேடுபவன் புனிதனாகின்றான். உம்மை மன்னித்தேன் உம்மால் எம் அன்னை பூமிக்கு ஏற்பட்ட அபகீர்த்திக்கு நீர் கழுவாய் தேட வேண்டும். நம் தாயகத்தைக் காத்திட எம்மோடு தோளோடு தோள் நிற்க வேண்டும்.

**காக்கைவன்னியன் - வசனம்**

இராமனுக்குத் துணையான இலட்சுமணனைப் போல் என்றென்றும் தங்களுக்குத் துணை நிற்பேன் இது உறுதி..... மன்னா எனது முதற்கடமையாக எமது தாய் நாட்டைத் தாக்க வந்திருக்கும் வெள்ளைப் படைகளை விரட்டியடிக்கச் சென்றிருக்கும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரப்படைகளின் நிலைப்பாடுகளை நேரில் சென்று பார்த்து வேண்டிய உதவிகள் செய்து வருகிறேன். உத்தரவு தரவேண்டும் வேந்தே.

**பண்டாரவன்னியன் - வசனம்**

அப்படியே சென்றுவாரும் காக்கைவன்னியரே

## காட்சி - 17

**இடம் :- அரண்மனை**
**பாத்திரங்கள் :- பிரட்றிக்நோர்த் - காக்கைவன்னியன்**

**காக்கைவன்னியன் - வசனம்**

துரையவர்களே காரியம் கைமிஞ்சிப் போய்விட்டது... வன்னியைக் கைப்பற்ற ஓமந்தையில் பாளையமிட்டிருக்கும் தங்கள் சைனியங்களைத் தாக்கியழிக்கப் பண்டாரவன்னியன் படைகள் பெரும் பலத்துடன் பாய்ந்து விட்டன.

**பிரட்றிக்நோர்த் - தரு**

நாடுகள் பலவென்றோம் நாங்கள் அந்த
காடுசூழ் வன்னி கை பற்றிச் சொந்த
நாட்டின் சாம்ராட்சியம் உலகமெல்லாம்
நாட்டி அடக்குவோம் கலகமெல்லாம்

**தேசாதிபதி - வசனம்**

எத்தனை நாடுகள் வென்றிருப்போம் எத்தனை படைகளைக் கொன்றிருப்போம் அந்த வன்னி நாட்டைக் கைப்பற்றுவது அவ்வளவு கடினமாகிவிட்டதா... அடக்கிவிடமாட்டோமா அவர்களை.

**காக்கைவன்னியன் - தரு**

வில்லி நின் றெழுந்திடு அம்பின் விரைவாய்
வல்ல பண்டாரனின் படை நிரையாய்
எல்லையைக் காத்திடும் துல்லியமாய்
வெல்ல முடியாதுங்கள் படை நிசமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காக்கைவன்னியன் - வசனம்

வில்லினின்று புறப்பட்ட அம்புபோல் புறப்பட்டுவிட்டன பண்டாரன் படைகள் இனிப் புறமுதுகிட்டு விடும் வெள்ளைப்படைகள்.

### தேசாதிபதி - தரு

கண்டங்கள் பொடிபடும் குண்டு கொண்டோம்
பண்டார வன்னியால் கெலியே கொண்டோம்
வென்றிடா விட்டாலோ வெட்கக்கேடு
கொன்றிட வகை சொல்வீர் நுட்பத்தோடு

### தேசாதிபதி - வசனம்

ஐந்து கண்டங்களும் அஞ்சி நடுங்கும் குண்டு பீரங்கிகள் கொண்ட ஆங்கிலர் படைகள் பண்டாரன் படைக்குப் பயப்படுவதா வெட்கக் கேடு.... காக்கைவன்னியரே அந்தப் பண்டாரன் ஒழிந்தால்தான் வெற்றி எங்கள் பக்கம் வரும். பாம்பின் கால் பாம்பறியும் உம் இனத்தானை அழிக்கும் வழியை நீர்தான் கூற வேண்டும்.

### காக்கைவன்னியன் - தரு

அகழியில் வீழ்த்தியே ஆனை பிடிப்போம்
ஆர்த்தெழும் வேங்கையை கூண்டில் அடைப்போம்
பொறியினில் பண்டாரன் சிக்கி வைப்பேன்
புறப்படுவீர் என்சொல் என்றும் தப்பேன்

### காக்கைவன்னியன் - வசனம்

வலிமையுள்ளவனை வெல்வதற்கு வாளும் வேலும் வேண்டியதில்லை. வானத்திலே பறக்கவல்ல பறவைகளையும் வனத்திலே வாழும் கொடிய மிருகங்களையும் அடக்கி ஆள்வது மனிதனின் அறிவின் கூர்மையே. பண்டாரனைப் பொறியில் வீழ்த்துவது என்குறி அவனைச் சிறைபிடிப்பது உங்கள் திறமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேசாதிபதி - தரு

ஏழ்கடல் எழுநிலம் எங்கும் பொங்கும்
ஆள்திறல் ஆங்கிலர் வீரம் ஓங்கும்
ஈழமா வீர பண்டாரவன்னி
வீழ்த்திட வினயமாய் சொன்னீர் சூழ்ச்சி

### தேசாதிபதி - வசனம்

சபாஷ் பண்டாரவன்னியனின் வீழ்ச்சி அவன் படைகளைச் சிதறச் செய்துவிடும் வன்னி மண் ஆங்கிலர் வசமாகிவிடும்.

### காக்கைவன்னியனின் - வசனம்

பண்டாரனைத் தனியனாக்கி ஒட்டு சுட்டான் கூட்டி வருவேன். வேங்கை பொறியில் வீழ்ந்ததும் வெள்ளைக்கொடி காட்டுவேன் வெள்ளைப் பட்டாளம் வெள்ளமெனச் சூழ்ந்து கொள்ளட்டும். பண்டாரன் கைகளில் விலங்கு அவனைக் காட்டிக் கொடுத்த எனது தலையில்.......

### தேசாதிபதி - வசனம்

சூரியன் அஸ்த்தமிக்காத பிரித்தானிய சாம்ராட்சியத்தின் ஆட்சியின் கீழ் வன்னி நாட்டின் மணிமகுடம்.

## காட்சி - 18

**இடம் :- வீதி - அரண்மனை**
**பாத்திரங்கள் :- காக்கைவன்னியன் - பண்டாரவன்னியன்**

### காக்கைவன்னியன் - தரு

காட்டியே கொடுத்திடுவேனே - பண்டாரனை நான்
காட்டியே கொடுத்திடுவேனே!
நாட்டினிலே நாயகனாய் நானிருக்க நல்லநாச்சி
கூட்டியே விடாதவன் கை கட்டினில் விலங்கை உச்சி
பூட்டியே விட்டு விட்டெந்தன் புத்தியை அவனறிய
காட்டுவேன் செகசாலங்கள் கன்னி என் மனமறிய
(காட்டியே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவினிலோர் வாசமில்லை பூமியிலோர் பாசமில்லை
ஆவி ஈந்தும் பூமிகாப்பார் நாவினிற் சுவை நான் பார்ப்பேன்
சாவினிலும் வீரரென்றும் சாதனை படைத்து நிற்பார்
பாவி எந்தன் தேவியையும் பதவிதனற்காய் நான் விற்பேன்
(காட்டியே)

வன்னி முற்றும் எந்தனர சாட்சியிலே பன்னி வர
கன்னியர்கள் என்னைச் சுற்றி மின்னலெனப் பின்னிவர
அன்னியர்கள் காவல் சூழ இன்பமாக நானும் வாழ
பொன்மணிகள் மின்னும் முடி சென்னியிலே சூடி ஆள
(காட்டியே)

**(பண்டாவன்னியன் முன்பு)**

**காக்கைவன்னியன் - வசனம்**

மன்னா போர் உக்கிரமமாக நடந்து கொண்டிருக்கின்றது. எமது படைகள் ஜெயமடைந்து கொண்டிருக்கின்றன. வெள்ளைப்படை தோற்றோடும் நிலையில் மேலும் உதவிக்குப் பீரங்கிப் படைகள் பின்னால் வந்து கொண்டிருப்பதாக எமது ஒற்றர்கள் சேதி கொண்டு வந்திருக்கிறார்கள்.

**பண்டாரவன்னியன் - வசனம்**

அப்படியானால் நாம் சென்று களநிலைகளை நேரில் கவனிக்க வேண்டும் தாமதிக்கக்கூடாது. புறப்படுங்கள்.

## காட்சி - 19

**இடம் :- போர்க்களத்தை அண்டிய பகுதி**
**பாத்திரங்கள் :- பண்டாரவன்னியன் - காக்கைவன்னியன் - தேசாதிபதி - ஆங்கிலமந்திரி - ஆங்கில சேனாதிபதி - சிப்பாய்கள்**
**(காக்கை வன்னியனால் காட்டிக் கொடுக்கப்பட்ட பண்டாரவன்னியன் சிறைபிடிக்கப்படுகிறான்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசாதிபதி - தரு**

வேங்கையைப் பிடித்துவிட்டோமே - வீர சூர
வேங்கையைப் பிடித்து விட்டோமே
தூங்கு வேங்கை சுற்றிச் சூழ முற்றுந் துணை அற்றிடவே
ஆங்கிலர் ஆட்சி இலங்கா ஆழ்கடல் சூழ முழங்க

**தேசாதிபதி - வசனம்**

பீரங்கி துப்பாக்கி முழங்கும் போரிலே வெல்ல முடியாத வீரனை எமது புத்தியின் வலிமையினால் பிடித்து விடடோம். துணையின்றி வந்த வேங்கையைத் துணிவோடு விழ்த்தி விட்டோம்.

**பண்டாரவன்னியன் - தரு**

காட்டு நரி கூட்டம் போட்டதோ - வேங்கை எதிர்க்க
காட்டு நரி கூட்டம் போட்டதோ
வேட்டொலிக்கு நேரெதிரே வீரபுயம் காட்டி நிற்கும்
வேலும் வாளும் வீசும் வீரத் தோளும் வெள்ளைத் தாள் உடைக்கும்

**பண்டாரவன்னியன - வசனம்**

சீறிவரும் சிறுத்தை சிறு நரிகளின் கூட்டத்துக்கு அஞ்சி விடாது. வஞ் சகத்தால் வளைத்து விட்டோம் வல்லவனை என வெஞ்சூழுரைக் காதீர்கள். பஞ்சாய்ப் பறந்து விடும் நஞ்சர்களின் சூழ்ச்சி.

**தேசாதிபதி - தரு**

ஒப்பரிய தேசம் ஈழம் செப்பரும் ஆங்கிலம் ஆளும்
எப்போதும் பிரித்து ஆளும் தந்திரத்தால் வன்னி வீழும்
தப்பாதே எமது குறி குப்புற வீழ்த்திடும் பொறி
முப்போதும் மது வெறி மூவுலகும் ஆளும் அறி

**தேசாதிபதி - வசனம்**

பிரித்து ஆளும் தந்திரத்தால் பிடித்துவிட்டோம் வன்னி நாட்டை இனி ஈழம் முழுவதும் ஆங்கிலர் ஆட்சி ஆரம்பமாகிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்டாரவன்னியன் - தரு

இந்துமா சமுத்திரத்தின் இரத்தின துபீபம் ஈழம்
வந்தவர் அடிமை கொள்ள முந்தவர் பார்ப்பாரோ நீளம்
தந்துயிரை செந்தணலாய் தந்திடுவர் செந்தமிழர்
வெந்தும் அவர் ஆவி உங்கள் வெள்ளை உடல் கொள்ளி வைக்கும்

### பண்டாரவன்னியன் - வசனம்

பண்டாரவன்னியனைப் பிடித்து விட்டோமெனப் பறையறைகின்றீர்கள். ஒரு பண்டாரவன்னியன் போனால் ஓராயிரம் பண்டாரவன்னியர்கள் தோன்றுவார்கள் தங்கள் ஆவி கொடுத்தும் அந்நியர்களின் அடிமைத் தளைகளை உடைத்தெறிவார்கள்.

### தேசாதிபதி - மறுதரு

அடங்கிடாய் பண்டாரவன்னியா - ஆங்கிலர் வசம்
ஒடுங்கிடும் மண்டலம் எண்ணிலா
மடைபொருதும் கடலென வெடிபொருதும் வெள்ளைப்படை
அட்டமா திக்குகள் கொட்டு மா முரசொலி
பட்டிட எங்களின் பாதம் பணிந்திடும்

### தேசாதிபதி - வசனம்

அடங்கமாட்டாய் பண்டாரவன்னியா அட்டதிக்குகளும் ஆங்கிலர் பெயர் கேட்டால் கிடுகிடுக்கும். அப்படியிருக்க இந்தச் சின்னஞ்சிறிய வன்னி நாட்டை ஆண்டு கொண்டு எம்மை அவமதிக்கின்றாய்.

### பண்டாரவன்னியன் - தரு

படை எடுத்தும் வென்றிடமாட்டாய் - எனை அடக்க
வெடி எடுத்தும் வென்றிடமாட்டாய்
கொடும் இருளும் கடுங்குளிரும் விடியல் கண்டே நொடியில் ஓடும்
கடகவான் முகடுடை இடிபடப் பொடிபட
நெடு வேங்கை பிடித்திட விரைபடை உடைபடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்டாரவன்னியன் - வசனம்

ஆழுமா கடல் ஏழும் ஏழு கண்டங்களும் எதிர்த்து வந்தாலும் அடங்கிட மாட்டான் அடிபணிந்திட மாட்டான் பண்டாரவன்னியன்.

### தேசாதிபதி - தரு

இந்தியா இலங்கா அமெரிக்கா அவுஸ்திரேலியா
இந்தோ சீனா ஆபிரிக்கா பர்மா பல தேசமெங்கும்
துந்துமி வாத்தியம் முழங்க - ஜெய பேரிகை கொட்டி
எந்திசை ஆங்கிலர் பேர் விளங்க - அரசு கொண்ட
ஐந்து கண்டமெங்கும் எங்கள் ஆங்கிலர் கொடி பறக்கும்
செந்தமிழ் வன்னியும் சொந்தமாய் வந்திட
இந்த பண்டார மா வன்னியோ எதிர்த்திட

### தேசாதிபதி - வசனம்

எத்தனை நாடுகள் எத்தனை அரசுகள் எத்தனை இனமக்கள் எங்கள் காலடியில் பத்தொடு பதினொன்றாக நீ ஏன் இருக்கக்கூடாது பண்டாரவன்னியா.

### பண்டாரவன்னியன் - தரு

கொட்டு முரசு ஒலிக்க ரெத்தின முடி சிறக்க
கோடி கோடி காலம் முடி சூடி ஆண்ட அன்னை தமிழ்
நாடில்லா நாடோடியாய் - நாய் நரிகளாய்
காடு மேடலைந்துலைந்தீர் - கயவர்களால்
காட்டியே கொடுத்து கொடுங் கேட்டினாலே நீட்டமாய எம்
நாட்டினைப் பிடித்திடக் காட்டிடும் வித்தைகள்
கூட்டொடு பொடிபட மீட்டிடும் வேங்கைகள்.

### பண்டாரவன்னியன் வசனம்

கொற்றங் கொடியுடன் தமிழர் கோலோச்சிய காலத்தில் நாடொன்றில்லா நாடோடிகளாய்த் திரிந்த கூட்டத்தினர் நீங்கள் இன்று காட்டிக் கொடுத்த கயவர் கூட்டினால் எமது நாட்டைப் பிடிக்க முனைந்து விட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேசாதிபதி - வசனம்**

பண்டாரவன்னியா பிடிபட்டு நிற்கும் போதும் அடங்கவில்லை உன் ஆங்காரம். அடங்காப்பற்றும் ஆங்கிலர் ஆட்சியில் அடங்கிய பின்னும் ஒடுங்கவில்லை உன் ஓங்காரம்.... வீரர்களே அதோ அந்தப் புளியமரத்திலே பண்டாரவன்னி மன்னனைத் தூக்கிலிட்டு விடுங்கள்... உம் கொண்டு செல்லுங்கள்.

**பண்டாரவன்னியன் - சந்த விருத்தம்**

குமுறிடும் எரிமலை கோரங்கொள் கடலலை குடத்துள் ஒடுங்கிடுமோ
கமறிடும் காற்றும் பேர் இடியும் மின்னலும் என்றும் கரந்தனில்
பிடிபடுமோ
பாராண்ட தமிழர் மண் பறங்கியர் வசப்பட பண்டாரன் பார்ப்பேனோ
கூருண்ட வாள் கொண்டு குருதியில் கொடுத்துயிர் மானமே
காப்பேனே

**பண்டாரவன்னியன் வசனம்**

தாயே தமிழே தமிழீழத் தாயகமே சின்னஞ்சிறு வயது முதல் நான் தவழ்ந்து விளையாடி மகிழ்ந்த என் வன்னித் திருநாடே வீரப் புன்னகை புரியும் பொன்நாடே கோடாரிக் காம்புகளாய் என்னைக் காட்டிக் கொடுத்த கருங்காலிக் கூட்டத்தால் இன்று உன் நிலை தாழ் வடையினும் எதிர்காலத்திலே ஏற்ற மிகு வேங்கைகள் இடிமின்னல் புயலென முழக்கமிட்டு அந்நிய பகைவரை விரட்டியடித்து உன் கை பின்னிய அடிமைத்தளைகளை உடைத்தெறிந்து உன்னை உயர்த்துவர். தமிழே தாயகமே என் இறுதி வணக்கம்.

எழுத்துருவாக்கம் - நெறியாள்கை
கலாபூசணம்
அண்ணாவியார். மு. அருட்பிரகாசம்

**நிறைவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றி...



கூத்திசைப் பாவலன் முடியப்பு அருட்பிரகாசம் 1944.10.07 இல் பாஷையூரில் பிறந்து தமது சிறுவயதில் இருந்தே நாட்டுக்கூத்துக் கலையில் ஆர்வமுடையவராகி 1952 இல் ஞானசவுந்தரி நாட்டுக்கூத்தில் சேனாதிபதியாக நடித்தது முதல் கலையுலகில் கால்பதித்து பாஷையூரின் புகழ்பெற்ற அண்ணாவிமார்களான வஸ்தியாம்பிள்ளை, பிலிப்பையா ஆகியோரிடம் நாட்டுக்கூத்தினைப் பயின்றார். 1956களில் பிரகாஷ் நாடகமன்றத்தால் மேடையேற்றப்பட்ட மணிமகுடம் நாடகத்தில் மலைச்சாமி பாத்திரமேற்று நடித்து பலரது பாராட்டைப் பெற்றதுடன் சாம்ராட் அசோகன் நாடகத்தில் சாம்ராட் அசோகனாக நடித்து வடமாகாண சனசமூகங்களுக்கிடையிலான நாடகப்போட்டியில் முதல்பரிசைப் பெற்று சிறந்த நடிகனுக்கான கௌரவமும் பெற்றார். 1958இல் தனது 14வது வயதில் அருள் நாடக மன்றத்தை ஆரம்பித்து பல நாட்டுக்கூத்துக்களையும் நாடகங்களையும் நெறியாள்கை செய்து மேடையேற்றி நடித்துமுள்ளார். 1975களில் உடுத்துறையில் ஆழியவளை கலைமகள் நாடக மன்றம், உடுத்துறை முரசொலி கலைமன்றம் ஆகியவற்றில் இணைந்து கலைப் பணியாற்றினார். 2004இல் நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையுடன் இணைந்து சங்கிலியன் நாட்டுக்கூத்தினை மிகச்சிறப்பாக மேடையேற்றினார்.

மேலும் இடம்பெயர்ந்து நாச்சிக்குடாவில் பாஷையூர், நாவாந்துறை, குருநகர், மாதகல் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த கலைஞர்களை ஒன்றிணைத்து வளர்மதி கலாலயத்தை அமைத்து பலநாட்டுக் கூத்துக்களை மேடையேற்றினார். 2002இல் மீளவும் பாஷையூரிற்கு வந்து பாஷையூர் பதுவையர் கலாமன்றத்தை உருவாக்கி கலைப் பணியாற்றினார். 1990களில் இருந்து நாட்டுக்கூத்துக்களுக்கு பாடல்கள் எழுதத் தொடங்கியது முதல் இவரது எழுத்துப்பணி ஆரம்பமாகியது. தற்போது வரை 22 நாட்டுக்கூத்துக்களையும் பல இசைநாடகங்களையும் 2 காவியங்களையும் தமது கைப்பட எழுதி சிலவற்றை நூலுருவாக்கியுமுள்ளார். யாழ்.பரியோவன் கல்லூரரி, கிளி/ பிரமந்தனாறு மா.வி. இணுவில் மத்திய கல்லூரி, பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய மாணவர்களுக்கு பல கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றியுள்ளார்.

இவரது கலைப்பணியைப் பாராட்டி பாஷையூர் உதயதாரகை கலைமன்றம் கூத்திசைப்பாவலன் - 2003, குமுழமுனைப் பங்கு புனித பொஸ்கோ இளைஞர் ஒன்றியம் கலைச்செல்வர் - 2004, பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் மரபுக்கலைச் சுடர் - 2007, திருமறைக்கலாமன்றம் கூத்துவிழா கௌரவிப்பு – 2007 யாழ்ப்பாணப்பிரதேச கலாசாரப் பேரவை யாழ்ரத்னா விருது - 2008, கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாபூஷண விருது – 2009, வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கௌரவ முதலமைச்சர் விருது – 2014 இலக்கியப் பேரவை மணிமேகலை நாட்டுக்கூத்து நூலுக்கு இலக்கிய சான்றிதழ் - 2003, எழுத்தாளர் ஊக்குவிப்புமையம் மாவீரன் சங்கிலியன் நாட்டுக்கூத்து நூலுக்கு தமிழியல் விருது – 2012, ஆகிய விருதுகள் வழங்கிக் கௌரவிக் கப்பட்டார். 1952 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 68 வருடங்களாக கலைப்பணியாற்றி வரும் இவரது பணி பெருமைக்குரியதும் பாராட்டுதற்குரியமாகும்.

திருமதி. ம. மேர்சி சுஜந்தினி
கலாசார உத்தியோகத்தர்

ISBN 978-955-7331
9 789557 331277
New Evergreen Printers (Pvt) Ltd., Jaffna. 021 221 9893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org